

ஜெயதேவர்

சுநீதி குமார் சாட்டர்ஜி



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்



இராதா - கிருஷ்ணன்

வங்கநாட்டின் இராஜ்ஷாஹி ஜில்லாவில் உள்ள பஹார்ப்பூரில்
கிடைத்த 6-7 ஆம் நூற்றாண்டின் சிற்பம்

இந்திய இலக்கியச் சிற்பிகள்

ஜெயதேவர்

ஆசிரியர்

சுநீதி குமார் சாட்டர்ஜி

தமிழாக்கம்

டி. எஸ். பார்த்தஸாரதி

சாகித்திய அக்காதெமி

JAYADEVAR : Tamil translation by T. S. Parthasarathy of Suniti Kumar Chatterji's Monograph in English. Sahitya Akademi, New Delhi (1983), Rs. 4.

முதல் பதிப்பு : 1983

தலைமை அலுவலகம்
சாகித்திய அக்காதெமி
ரவீந்திரா பவன், புது தில்லி - 110 001

மண்டல அலுவலகங்கள்
29, எல்டாம்ஸ் ரோடு, சென்னை - 600 018
பிளாக் V-B, ரவீந்திர சரோபார் ஸ்டேடியம், கல்கத்தா-700 029
172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கராலய ரோடு,
தாதர், பம்பாய் - 400 014.

அச்சிட்டோர் : ஜீவன் பிரஸ், சென்னை - 600 005

பொருளடக்கம்

(இப்புத்தகத்தின் மேலட்டையில் காணப்படும் இராதா-கிருஷ்ணரின் முகங்கள் திரிபுராவைச் சேர்ந்த ஸ்ரீ தீரேந்திர கிருஷ்ண தேவ வர்மா அவர்கள் வரைந்த ஓவியத்திலிருந்து கரிய சலவைக் கல்லில் செதுக்கிய சிற்பத்திலிருந்து எடுக்கப்பட்டவை. இது அபநீந்திரநாத டாகுர், நந்தலால் போஸ் ஆகியோரின் மாணாக்க ரான ஒரு சிற்பியால் 1935ல் செதுக்கப்பட்டது. இவர் ரவீந்திரநாத டாகூரின் சாந்திநிகேதப் பள்ளியின் கலாபவனத்திலும், விசுவ பாரதி சர்வகலாசாலையிலும் கலைத்துறை இயக்குநராக இருந்தவர்.)

சமர்ப்பணம்

வங்க நாட்டு வைணவ இலக்கியம், வரலாறு
ஆகியவற்றில் நிகரற்ற புலமை பெற்றவரும்,
அந்நாட்டு வைணவ இசைப்பாடல்கள் (பதங்கள்)
திரட்டின் பதிப்பாசிரியரும்,

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக எனக்கு
நெருங்கிய நண்பரும்,
மேல் வங்க மாநிலத்தில் ஏடுகள் தேடும் பணியில்
என்னைப் போலவே ஆர்வம் கொண்டவருமான

ஹரே கிருஷ்ண முக்கியோபாத்தியாயர்
அவர்களுக்கு
சுநீதிகுமார் சாட்டர்ஜியினால்
அன்புடனும் மரியாதையுடனும்
சமர்ப்பிக்கப் பெற்றது

—

ராஸ பூர்ணிமா (கார்த்திகை பூர்ணிமா) தினம்.
இந்நூலாசிரியருக்கு 83 ஆண்டுகள்
நிறைவு பெற்ற நாள்
(நவம்பர் 10, 1973-திதி: நவம்பர் 26, 1973)

1. இந்திய — ஆரிய இலக்கியத்தில் பண்டைய மரபின் கடைசிக் கவிஞரும், புதிய முறையின் முதல் புலவருமான ஜெயதேவர்.

'கீத கோவிந்த'த்தின் ஆசிரியர் ஜெயதேவர் சம்ஸ்கிருதக் கவிஞருள் ஓர் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றிருப்பதுடன், வடமொழியிலேயே மிக இனிமை வாய்ந்த இசைப் பாடல்களை இயற்றியவரென்றும் உலகப் புகழ் அடைந்திருக்கிறார். வடமொழிக் கவிஞரில் அமரத்துவம் பெற்றவர்களென்று கருதப்பெறும் மகா கவிகளின் வரிசையில் ஜெயதேவரின் பெயர் இயல்பாகவே அமைந்துவிடுகின்றது. அசுவகோஷர், பாஸர், காளிதாஸர், பர்த்ருஹரி, ஹர்ஷதேவர், பாரவி, பவபூதி, மாகர், க்ஷேமேந்திரர், ஸோமதேவர், பில்ஹணர், ஸ்ரீஹர்ஷர் என்ற அடைவிற்குப் பின் போற்றப்படும் கவி ஜெயதேவரே ஆவர். பாரத தேசமெங்கும் புகழ்பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க கவிகளுள் கடைசியானவரும் அவரே. அவருடைய ஒரே காவியமான கீத கோவிந்தம் பிற்காலக் கவிஞர்களையும் பாவாணர்களையும் கவர்ந்திருப்பதை நோக்கினால் அவருடைய பெருமை மகாகவி காளிதாஸரின் புகழோடு ஒப்பிடக்கூடியதாகவே அமைகிறது. ஜெயதேவர் வாழ்ந்திருந்த கி. பி. 12ம் நூற்றாண்டிற்குப் பிறகும் வடமொழியில் கவிதை இயற்றும் மரபு நமது நாட்டில் தொடர்ந்து வந்திருக்கிறது. ஆயினும் துருக்கியரின் படையெடுப்புக்குப் பின்னர் இந்தியாவின் பல பகுதிகளில் நாட்டு மொழிகள் (புதிய இந்திய—ஆரிய மொழிகளும், இடைக்கால திராவிட மொழிகளும்) இலக்கிய வடிவம் பெற ஆரம்பித்தன. இதன் விளைவாகப் பிந்தைய நூற்றாண்டுகளில் வடமொழியில் இயற்றப்பெற்ற இலக்கியங்கட்கும் மற்ற நூல்களுக்கும் மக்களிடையே ஆதரவும் பிரசாரமும் ஓரளவு குறைந்துவிட்டன. எனினும், அவற்றின் எண்ணிக்கை மட்டும் குறையவில்லை. மகம்மதியர் காலத்திலும் வடமொழியில் சிறந்த கவிஞர்கள் தோன்றினர். ஐந்நூறு அலலது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பேராதரவு கிடைத்து வந்த காலத்தில் அமரமொழியாகிய சம்ஸ்கிருதத்தில் எத்தகைய உயர்ந்த நூல்கள் எழுதப்பெற்றனவோ, அவற்றிற்கு ஏறக்குறைய ஈடான நூல்களைப் பின்னரும் தோற்றுவிக்க முடியும் என்பதை இந்துக்கள் நிரூபித்தனர். வடமொழிப் புலமையும் இந்தியக் கவி மரபும் ஒளி வீசுமாறு செய்ய வல்ல கவிகளும், உரைநடை ஆசிரியர்களும் தோன்றினர். பண்டைக் கவிகளின் நூல்களை நாம் எத்துணை ஊக்கத்துடன் ஆராய்கின்றோமோ, அதே கருத்துடன் ஆராயக்கூடிய தகுதிவாய்ந்த நூல்களாக இவையும்

அமைகின்றன. சென்ற சில நூற்றுண்டுகளில் இந்திய ஆன்மீக சக்தியின் பரிணுமமாகத் தோன்றியவை இந்நூல்கள் என்பதில் ஐயம் சிறிதுமில்லை. இவற்றிற்கு உதாரணமாக—ரூப கோஸ்வாமி ஜீவ கோஸ்வாமி, கவி கர்ணபூரர், ஜகந்நாத கவி, நீலகண்ட தீக்ஷிதர் ஆகியோரின் நூல்களைக் கூறலாம். ஆயினும் வடமொழியின் பழைய கவி மரபு கி. பி. 12ம் நூற்ருண்டுடன் முடிகிறது என்றே கூற வேண்டும். சிறிது சிறிதாக மறைந்து வந்த இந்த சகாப்தத்தின் இறுதி நூலை இயற்றிய ஜெயதேவர், பிற்காலத்தில் தோன்றவிருந்த புது மரபாகிய 'தேசிய' யுகத்தின் முதல் நூலை இயற்றிய கவியாகவும் விளங்கினுர். ஆகவே, இரு யுகங்கள் ஒன்ருேடொன்று கலந்த 'யுக சந்தி'யின் கவியாக அவர் விளங்கி, வருங்காலக் கவி மரபுக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். பண்டைய மரபின் கடைசிக் கவிஞரென்றும் புதிய மரபின் முதல் பாவாணரென்றும் அவரைக் கூறுவதுமுற்றிலும் பொருந்தும்.

இப்பூவுலகில் கண்ணனும் இராதையும் புரிந்த இயல்பான காதலைத் தெய்வீகக் காதலாகவும், ஓர் ஆன்மீக அனுபவமாகவும் உயர்த்தி நிகரற்ற சுவை நிறைந்த தம் கீதங்களால் வருணித்துள்ள ஜெயதேவ கவியை இந்திய மக்கள் பலரும் தெய்வீகக் காதலை எளிய மொழியில் விளக்கிய மாபெரும் புலவராகவே போற்றுகின்றனர். இஸ்லாம் மதத்தின் தாக்குதலைத் தடுப்பதற்காக, பகவானின் அவதாரங்களாகிய இராமன் கிருஷ்ணன் ஆகியோரிடம் பக்தியை மக்களிடையே வளர்த்து, இந்து சமயத்திற்குப் புது வாழ்வு அளிக்க முற்பட்ட பக்தி சம்பிரதாயம் தழைத்தோங்கிய காலத்தில், ஜெயதேவரின் காவியம் தோன்றியது. கீத கோவிந்தம் ஒரு பக்தி மத கிரந்தமென்றும், இதன் ஆசிரியர் கண்ணபிரானின் தனி அருளைப் பெற்ற ஒரு வைணவ பக்த சிரோமணி என்றும் மாந்தர் கருதலாயினர். ஆகவே தற்காலத்தில் வழங்கிவரும் வைணவ சம்பிரதாய ஆசாரிய பரம்பரையில் ஜெயதேவர் ஓர் உயர்ந்த ஸ்தானத்தைப் பெற்றிருக்கிருர். அவருடைய பேரும் புகழும் பண்டிதர் முதல் பாமரர் வரையுள்ள பல தரப்பட்ட மக்களிடையே பரவியுள்ளன. சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தக்கூடிய கவிதைகளிலும், பக்தி இலக்கியத்திலும் ஜெயதேவரைப் பற்றிய வரலாறுகள் முக்கிய இடத்தைப் பெற்றன. இத்தகைய பேறு வால்மீகி, வியாசர், ஓரளவுக்குக் காளிதாஸர் ஆகியோரைத் தவிர வேறு ஒரு கவிக்கும் கிடைக்கவில்லை என்றே கூற வேண்டும். இம்மூவரின் புகழ் வானளாவ உயர்த்தப்பட்டதற்கு அவர்களைக் குறித்த புராண வரலாறுகளும் இடைக்காலத்து மக்களின் பக்திப் பெருக்குமே பெரிதும் காரணமாக இருந்தன.

II. ஜெயதேவர் — வாழ்க்கையும் வரலாறும்—வனமாலி தாசர் வங்கமொழியில் எழுதிய ஜெயதேவ சரிதம்.

ஜெயதேவரின் காலம் உறுதியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அவர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். வங்க நாட்டின் கடைசி இந்து மன்னனாகிய லக்ஷ்மண ஸேனனின் ஆஸ்தான கவிகளுள் ஒருவராக விளங்கியவர். அவருடைய வாழ்க்கை பற்றிய முக்கிய விவரங்கள் காலஞ்சென்ற மனமோகன சக்கரவர்த்தி அவர்களால் சேகரிக்கப்பட்டுள்ளன. (வங்க தேசத்து ஏஷியாடிக் ஸொஸைட்டியின் சஞ்சிகையும், நடவடிக்கைகளும்: 1906 ஸேன மன்னர்களின் காலத்தில் வங்க நாட்டு வடமொழி இலக்கியம். பக்கங்கள் 163-169). இந்தியாவில் பழங்காலத்தில் வாழ்ந்திருந்த முனிவர்கள், பெரியோர்கள், பக்தர்கள் முதலியோரின் பிறப்பு, இறப்பு முதலியவற்றைக் குறித்த தகவல்கள் பிற்காலத்தில் கிடைக்காமல் போனது போலவே, ஜெயதேவரைப் பற்றிய பல விவரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. கீத கோவிந்தத்திலிருந்து கிடைக்கும் விவரங்கள்;-அவருடைய தந்தை போஜதேவர். தாயார் ராமாதேவி, வாமாதேவி அல்லது இராதாதேவி, மனைவி, பத்மாவதி (அல்லது ரோஹிணீ), நண்பர் பராசரர், கீத கோவிந்தப் பாடல்களைப் பாடிய மற்றோர், அவருடன் சமகாலத்தில் வாழ்ந்த வடமொழிக் கவிகளான உமாபதிதரர், சரணர், ஆசார்ய கோவர்த்தனர் தோயீ கவிராஜர், ஜெயதேவரின் கிராமமாகிய கேந்து பில்வம் ஆகியவையே. கீத கோவிந்தத்தின் பழைய பிரதி ஒன்றின் இறுதிக் குறிப்பில் வங்க மன்னன் லக்ஷ்மண ஸேனன் ஜெயதேவருக்குக் 'கவிராஜர்' என்ற விருதை அளித்ததாகக் காணப்படுவதை ஜார்ஜ் புஹ்லர் என்ற மேனாட்டு, ஆசிரியர் குறிப்பிட்டிருக்கிறார். (வனமாலி தாசர் எழுதிய ஜெயதேவ சரிதத்திற்கு ஹரப்ரஸாத் சாஸ்திரி எழுதிய முன்னுரை இந்நூலில் பின்னர் குறிப்பிடப்பெறும்)

இடைக்காலத்தில் வடநாட்டில் வாழ்ந்த வைணவப் பெரியார்களைப் பற்றிய "பொன் மயமான வரலாறுகளிலும், வைணவ ஆசாரிய பரம்பரையிலும் ஜெயதேவரைப்பற்றிய கர்ண பரம்பரையான சிலகதைகள் வழங்கி வருகின்றன. ஆயினும் இவற்றிற்கு சரித்திர ஆதாரம் எதுவும் இல்லை. இடைக்காலத்து வங்க இலக்கியத்திலும் ஜெயதேவரைப் பற்றிய ரசமான சில வாழ்க்கைக் குறிப்புக்கள் தோன்றின. கி. பி. 15ம் நூற்றாண்டில் தோன்றியதும், சிறிது வரலாற்று அடிப்படை கொண்டதும், வங்க மொழிக்கலப்பும் வட

மொழிப் பிழைகளும் கொண்ட 'சேக சுபோதயம்' என்ற நூலில் 'ஜெயதேவரைப் பற்றிக் காணப்படும் சில கதைகளுக்குச் சரித்திர ஆதாரம் இருக்கலாமென்று தோன்றுகிறது. குருநானக் அவர்களுக்கு பூர்வாசாரியராக ஜெயதேவர் என்ற ஒரு மகான் இருந்ததாக சீக்கியர்கள் ஒப்புக்கொள்கின்றனர். சிறந்த வைணவ ஆசாரியர் என்று சீக்கியரால் கருதப்படும் இந்த ஜெயதேவர் பழைய ஹிந்தி அல்லது அபப்ரம்ச மொழியில் எழுதிய சில செய்யுள்கள் 'குரு கிரந்தத்தில்' சேர்க்கப்பட்டுள்ளன. ஜெயதேவரைப்பற்றிப் பழைய நூல்களில் காணப்படும் தகவல்கள் வேறு எதுவும் இல்லை.

வங்க மொழியில் இடைக்காலத்தில் ஜெயதேவரின் வாழ்க்கையைப் பற்றி எழுதப்பட்ட காவியங்களுள் வனமாலிதாசர் எழுதிய ஜெயதேவ சரிதம்' குறிப்பிடத்தக்கது. (கி. பி. 17ம் நூற்றுண்டின் முற்பகுதியில் இயற்றப்பட்ட நூல். கல்கத்தா வங்கீய சாகித்திய பரிஷத்திற்காக அதுல கிருஷ்ண கோஸ்வாமியால் பதிப்பிக்கப் பெற்றது. வங்காள ஆண்டு 1312. கி. பி. 1905. ஹரப்ரஸாத் சாஸ்திரியின் முன்னுரையுடன்: பக்கம் 34). ஜெயதேவர், அவருடைய மனைவி பத்மாவதி ஆகியோர் கிருஷ்ண பகவானிடம் பக்தி பூண்டொழுகிய புனித வரலாறு இதில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. சரித்திரம் என்ற கோணத்திலிருந்து ஆராய்ந்தால் இதற்கு அதிக மதிப்பில்லை. கி. பி. 12ம் நூற்றுண்டில் வாழ்ந்த ஜெயதேவரை வனமாலி தாசர் தம்முடைய சமகாலத்தவராக இறக்கிவிடுகிறுர். வர்த்தமான சம்ஸ்தானத்தின் மன்னர் ஒருவரையும் அவர் குறிப்பிடுவதிலிருந்து அவருக்குத் தெரிந்த இந்து அரசர் அவர் ஒருவரே என்றும் தோன்றுகிறது.

வடமொழி இலக்கியத்தில் ஜெயதேவர் என்ற பெயருடன் பல கவிகள் இருந்திருக்கின்றனர். அவர்களுள் கீத கோவிந்தத்தின் ஆசிரியரைத் தவிர மற்றவர்களைப்பற்றிய தகவல்கள் போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லை. அலங்கார சாஸ்திர விற்பன்னரான அபிநவ குப்தர் (சுமார் கி. பி. 1000) யாப்பிலக்கணத்தில் சந்தங்களைப் பற்றி சூத்திரங்கள் எழுதிய ஜெயதேவர் ஒருவரைக் குறிப்பிடுகிறுர். ஹர்ஷடர் என்பவர் (சுமார் கி. பி. 900) மேற்கூறிய சூத்திரங்களுக்கு உரை எழுதியிருக்கிறுர். ஆகவே இந்த ஜெயதேவர் கீத கோவிந்தத்தின் ஆசிரியருக்குக் குறைந்த பட்சம் முந்நூறு ஆண்டுகள் முற்பட்டவர். இராமாயணக் கதையை அடிப்படையாகக் கொண்டு, 'பிரஸந்ந ராகவம்' என்ற வடமொழி நாடகத்தை எழுதிய மற்றொரு ஜெயதேவரும் இருந்திருக்கிறுர். இவர் கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த அந்தணர், இவருடைய தந்தை மகாதேவர். அன்னை சுமித்ரா. குரு ஹரி மிச்ரா என்பவர். இவர் கீத கோவிந்தத்தின்

ஆசிரியரான ஜெயதேவரின் காலத்தை அடுத்தே வாழ்ந்திருந்தவர் என்று தோன்றுகிறது. ஏனெனில் சுமார் கி. பி. 1257ல் காஷ்மீர் தேசத்துக் கவி கல்ஹணர் தொகுத்த "ஸூக்தி முக்தாவளி" என்னும் வடமொழித் தனிப்பாடல் திரட்டில் "பிரஸந்ந ராகவ" நாடகத்திலுள்ள செய்யுட்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த ஜெய தேவர்எங்கு பிறந்து வளர்ந்தார் என்பது தெரியவில்லை. இவர் வடக்கு மகாராஷ்டிர நாடான விதர்ப்ப தேசத்தில் வாழ்ந்தவர் என்றும், "சந்திராலோகம்" என்ற யாப்பிலக்கண நூலை எழுதியவர் என்றும் சிலர் கருதுகின்றனர். ஆயினும் இந்நூல் வங்க நாட்டில் அதிகம் பரவவில்லை.

III. ஜெயதேவர்—வங்காளம், ஒரிஸ்ஸா, மிதிலா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர் என்று ஒவ்வொருவரும் உரிமை பாராட்டல்.

கீத கோவிந்த ஆசிரியரான ஜெயதேவர் வங்க நாட்டில் வீரபூமி மாவட்டத்திலுள்ள கேண்டுலி (பழைய பெயர் கேந்து பில்வம்) என்ற சிற்றூரைச் சேர்ந்தவர் என்பதே பெரும்பான்மை யோரின் கருத்து. ஆயினும் அவர் வங்க நாட்டின் வேறு பகுதி களிலோ, இந்தியாவின் கிழக்குப் பகுதிகளிலோ தோன்றியவர் என்றும் சிலர் உரிமை பாராட்டுகின்றனர். வங்க நாட்டின் வட கிழக்குப் பகுதியில் (தற்பொழுது பங்களாதேசத்தில்) உள்ள பாகுரா அல்லது போக்ரா என்ற ஊரில் பிறந்தவர் என்ற கூற்றிற்குப் போதிய ஆதாரம் இல்லை. இக்காரணத்தினுல் இதைப் பலர் ஆதரிக்கவில்லை. கேண்டுலி என்ற சிற்றூரிலிருந்து பதினுறு மைல் தொலைவிலுள்ள பைரப் என்ற ஊரிலிருந்த தீரேந்திர நாதபால் என்பவரே இக்கருத்தை வெளியிட்டவர். இவ்வூரில் இந்துக்களின் மக்கள் தொகை அதிகம். முற்காலத்தில் இவ்வூரில் ஜெயதேவரின் நினைவாக ஆண்டுதோறும் ஒரு விழா கொண்டாடப் பெற்று வந்ததாக அறிகிறோம். மகான் ஜெயதேவரின் பெயர் அமைந்த ஒரு பெரிய குளம் அங்கு உள்ளது. பாழடைந்த நிலையிலுள்ள இவ்வூர் மக்கள் ஜெயதேவரின் குடும்பத்தார்க்குரிய மனை இக்குளத்தின் அருகிலிருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். கேண்டுலி என்ற இவ்வூரில் இடிந்துபோன பழங்கோயில்களின் பகுதிகளும், உடைந்த சிற்பங்களும் காணப்படுகின்றன. ஜெயபூர் ஹாட் என்ற ரயில் நிலையத்திலிருந்து இவ்வூர் சுமார் ஒன்பது மைல் தொலைவில் உள்ளது. இந்தக் கேண்டுலியைப் பற்றி நமக்குத் தெரிந்தது இவ்வளவே. †

புவனேசுவரத்திலுள்ள ஒரிஸ்ஸா மாநிலப் பொருட்காட்சி சாலையின் 'வடமொழி ஏட்டுச் சுவடிகளின் விவரமான பட்டியல் (இரண்டாம் பாகம்)' என்ற நூல் கேதார் நாத் மகாபாத்ரா அவர் களால் எழுதப்பட்டு, ஒரிஸ்ஸா சாகித்திய அகாடமியாரால் புவனேசுவரத்தில் 1960ல் பிரசுரிக்கப்பட்டது. இந்நூலில் ஜெய

---

† இது தொடர்பாக டாக்டர் ஹரே கிருஷ்ண முகர்ஜி (சாகித்ய ரத்னம்) அவர்கள் எழுதிய "கவி ஜெயதேவரும் கீத கோவிந்தமும்" என்ற வங்காளி நூலைப் பார்க்கவும். நான்காவது பதிப்பு. ஆக்ரஹாயன 1372. பக்கங்கள் 36-37 அடிக் குறிப்பு.

தேவரையும் அவர் இயற்றிய கீத கோவிந்தத்தையும் குறித்துப் பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து எழுதப்பட்ட நீண்ட கட்டுரை ஒன்று காணப்படுகிறது. பக்கம் (XXXVI-LVI). புலமை நிரம்பிய இக்கட்டுரையில் ஜெயதேவரும், அவருக்குச் சம காலத்தவர்களான சில கவிகளும் ஒரிஸ்ஸா நாட்டைச் சேர்ந்தவர்களே என்று இலக்கியச் சான்றுகளையும் மற்ற ஆதாரங்களையும் கொண்டு வாதிக்கப்பட்டுள்ளது. ஜெயதேவரின் கிராமமாகிய கேண்டுலி இப்போது பூரி மாவட்டத்தில் பாலி பட்னு போலீஸ் நிலையத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட கேண்டுலி என்ற பேரூரே என்று கூறப் பட்டுள்ளது. ஜெயதேவர் புராணக் கதைகளின் ஆதாரத்தின் மீது விஷ்ணுவை வருணித்திருப்பதும் ஒரிஸ்ஸா நாட்டு மரபை ஒட்டியவை என்று சிற்பங்களில் காணப்படும் விக்கிரக தத்து வங்களை முன்னிட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது பிற்காலத்து ஒரியா மொழி இலக்கியம் கீத கோவிந்தத்தைப் பெரிதும் பின்பற்றுகிறது என்பதில் ஐயமில்லை. ஆகவே, ஜெயதேவர் ஒரிஸ்ஸா நாட்டைச் சேர்ந்த கவி என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், கீத கோவிந்தத்தின் பெருமை அது தோன்றிய வுடனேயே பாரத தேசமெங்கும் பரவலாயிற்று. பிற்கால வங்காள இலக்கியம், குஜராத்திய இலக்கியம் முதலியனவும் அதை முதல் நூலாகக் கொண்டே இயற்றப்படவாரம்பித்தன ஜெயதேவர் வீரபூமி மாவட்டத்தில் உள்ள கேண்டுலியைச் சேர்ந்தவர் என்ற பரவலான செவி வழிச் செய்தியைக் கொண்டே நாம் அவருடைய ஆதிக்கத்தைத் தீர்மானிக்க முற்படுவது சரியல்ல. எனினும், ஜெயதேவராலேயே இயற்றப்பட்டவையெனக் கருதப்படும் சில சுலோகங்கள் (இவை இந்நூலின் ஆறும் பகுதியில் அச்சிடப் பெற்றுள்ளன) ஸ்ரீதர தாஸரால் தொகுக்கப்பெற்ற ஒரு வட மொழித் தனிப்பாடல் திரட்டில் காணப்படுகின்றன. இவற்றி லிருந்து ஜெயதேவர் வங்க நாட்டைச் சேர்ந்தவர் என்றும் கி.பி. 1203ம் ஆண்டு வரையில் பாகீரதி நதிக்கரையிலுள்ள நவத்வீபத்தைத் தலைநகராகக் கொண்டு அரசு செய்த மன்னர் லக்ஷ்மண ஸேனரின் ஆஸ்தான கவிஞரில் ஒருவராகத் திகழ்ந்தவர் என்றும் நாம் முடிவு கொள்ள இடமுண்டு. மேற்கூறிய ஆண்டில் பக்தியார் கில்ஜி என்பவன் தலைமையில் படையெடுத்த ஒரு துருக்கியப் பட்டாளம் பீகார் வழியே வந்து நவத்வீபத்தைத் தாக்கி, லக்ஷ்மண ஸேனரைக் கிழக்கு வங்கம் நோக்கி ஓடச் செய்து விட்டது. இதன் பின்னர் துருக்கியர் வங்க நாட்டில் இந்து மன்னரின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, நாடு முழு வதையுமே கைப்பற்றிக் கொண்டு விட்டனர். எனினும் கிழக்கு

இந்தியாவில் ஒரிஸ்ஸா பிரதேசமும், மிதிலையும் வடமொழிக் கல்வியில் சிறந்த பகுதிகளாக விளங்கி வந்தன. சம்ஸ்கிருத இலக்கியத்திலேயே மிகச் சிறந்த புலவர்கள் சிலர் ஒரிஸ்ஸா நாட்டைச் சேர்ந்தவர்கள்.

ஆயினும், வங்க நாட்டின் வீரபூமி மாவட்டத்தில் அஜய நதிக் கரையிலுள்ள கேண்டுலி என்ற சிற்றூரில் சென்ற எண்ணூறு ஆண்டுகளாக நடைபெற்றுவரும் ஒரு விழா, ஜெயதேவரையும் அவர் இயற்றிய கீத கோவிந்தத்தையும் மக்கள் என்றும் மறக்காமல் இருக்குமாறு செய்து வருகிறது. இவ்வூர் ஜெயதேவரின் பெயருடன் இரண்டறக் கலந்து விட்டது என்றே கூறவேண்டும்.

இத்துணை வாதங்களுக்கிடையே, டாக்டர் ஹரே கிருஷ்ண முகர்ஜி அவர்கள் வீரபூமிபகுதியிலுள்ள கேண்டுலியே ஜெயதேவர் வாழ்ந்த ஊர் என்பதை நிலைநாட்டும் மற்றொரு சான்றை என் கவனத்திற்குக் கொண்டு வந்தார். கோபிசரணதாஸ வித்யா பூஷணர் என்ற பண்டிதர் கி. பி. 1746-ம் ஆண்டில் (வங்காள ஆண்டு 1153) "ஹரி நாமாம்ருத வியாகரணம்" என்னும் நூலிற்கு முன்னரே முற்றுப் பெறுதிருந்த ஓர் உரையை எழுதி முடித்தார். வங்க லிபியில் எழுதப்பெற்ற இவ்வேட்டின் இறுதிக் குறிப்பில் இவர் கீத கோவிந்தத்தின் ஆசிரியரான ஜெயதேவர் வசித்து வந்த கேண்டுலி என்ற கேந்து பில்வமே தாம் வாழ்ந்தவூர் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்கு வங்காள மாநிலத்தில் கேண்டுலி இன்றும் ஒரு முக்கிய மான யாத்திரைத்தலமாக விளங்கி வருகிறது. அங்கு ஜெய தேவரின் நினைவாக ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் விழாவிற்கு வைணவ சன்னியாசிகளும், பரதேசிகளும், பாவுல் என்றழைக்கப் பெறும் பக்கிரிகளும் ஆயிரக்கணக்கில் வந்து கூடுகின்றனர்.

மிதிலை நாட்டில் 'கேண்டோலி' என்ற பெயருடைய ஒரு கிராமம் இருப்பதாகவும், அந்நாட்டு மக்கள் ஜெயதேவரை 'திரஹூத' அல்லது 'திரபுக்தி' என்ற பெயர்களையுடைய மிதிலா நாட்டினர் என்று கூறுவதாகவும் ஸ்ரீ மஹாபாத்ரா அவர்கள் குறிப் பிட்டிருக்கிறார். 'பக்த மாலா டீகா' என்ற நூலில் காணப்பெறும் ஐதிகப்படி ஜெயதேவரின் மனைவியின் தந்தை தமது புதல்வியை புரீ ஜகந்நாத ஆலயத்தில் தேவதாஸியாக அர்ப்பணம் செய்ய முற்பட்டதாகவும், ஜகந்நாதராகிய விஷ்ணு பகவான் அவருடைய கனவில் தோன்றி அவளை ஜெயதேவருக்கு மணம் செய்விக்குமாறு கட்டளையிட்டதாகவும் காணப்படுகிறது.

'சேக சுபோதயம்' என்ற நூலில் மற்றொரு ஐதிகம் கூறப் பட்டுள்ளது. (சேக சுபோதயம் அல்லது புனித ஷேக் மகானின் வருகை' என்பது மகம்மதியர்களின் தூண்டுதலின்மீது எழுதப்பட்ட ஒரு புத்தகம். கி. பி. 1203ல் பக்தியார் கில்ஜியின் தலைமையில் துருக்கியர் படையெடுத்ததற்கு முன்பு, வங்க மன்னன் லக்ஷ்மண ஸேனனின் சபைக்கு வருகை தந்த ஒரு மகம்மதியப் பெரியாரின் வாழ்க்கையையும் அவர் புரிந்த அற்புதச் செயல்களையும் விவரிக்கும் நூல் அது. நூல் வங்கமொழி மிகுதியாகக் கலந்த கொச்சையான வடமொழியில் எழுதப்பட்டுள்ளது. கி பி. 12–13-ம் நூற்றாண்டு களில் வழங்கி வந்த கர்ண பரம்பரைச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டு 15ம் நூற்றாண்டின் இறுதியிலோ, 16ம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ எழுதப்பட்ட நூல். இது டாக்டர் சுகுமார் ஸேன் அவர்களால் வங்காளி லிபியில் பதிப்பிக்கப்பெற்று, 1920-ல் இருஷிகேசப் பதிப்பு மாலையில் குறிப்புக்களுடன் பிரசுரிக்கப்பட்டது. இரண்டாம் பதிப்பு-தேவநாகரி லிபியில், வங்காளி மொழி பெயர்ப்பு, குறிப்புக்களுடன், கல்கத்தா ஏஷியாடிக் ஸொஸைட்டி யினால் பிப்ளியோதிகா இந்திகா எண் 286 ஆக 1963ல் வெளியிடப் பெற்றது) இதில் ஜெயதேவரின் மனைவி பத்மாவதி ஒரு சிறந்த பாடகி என்று கூறப்பட்டுள்ளது. கணவனும் மனைவியும் சேர்ந்து மிதிலா நாட்டைச் சேர்ந்த புடன்மிச்ரா என்பவருடன் ஓர் இசைப் போட்டியில் ஈடுபட்டனர். தமது மனைவி நாட்டியக்கலையில் சிறந்து விளங்கியவள் என்பதை ஜெயதேவரே தம்மை "பத்மாவதீ சரண சாரண சக்ரவர்த்தீ" (பத்மாவதியின் பாதங்களை நடனத்தில் ஈடுபடச் செய்யும் சக்கரவர்த்தி) என்று கூறிக்கொள்கிறார். பத்மாவதியை ஜகந்நாதப்பெருமானின் ஆலயத்திற்கு தேவதாசியாக அர்ப்பணம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் அவளுடைய பெற்றோர் அவளுக்கு இசையிலும் நாட்டியத்திலும் சிறந்த பயிற்சி அளித்திருக்கலாம். பின்னர் அவள் ஜெயதேவரை மணந்திருக்க லாம். வங்க நாட்டு வரலாறுகளின்படி இவ்விருவரின் இல்லற வாழ்க்கை மகிழ்ச்சி நிரம்பியதாக அமைந்திருந்தது. கணவனும் மனைவியும் கிருஷ்ண பக்தியில் நிகரற்று விளங்கினர். பத்மாவதிமீது தமக்கிருந்த பேரன்பையும் தாம் அவளைப்பற்றி அடைந்திருந்த பெருமையையும் ஜெயதேவர் தம் காவியத்தில் சில இடங்களில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

IV. கீத கோவிந்தத்தைத் தவிர ஜெயதேவர் எழுதிய மற்ற நூல்கள்: ஸ்ரீதர தாசரின் ஸதுக்தி கர்ணாமிருதத்தில் காணப்பெறும் சுலோகங்கள்.

ஜெயதேவருக்கு சமகாலத்தவரும், வடுதாஸரின் புதல்வரும், சிறந்த பண்டிதரும், கவியும், ஜமீன்தாராக விளங்கியவருமான ஸ்ரீதரதாஸர் சகவருடம் 1127ல் (கி.பி. 1206) "ஸதுக்தி கர்ணாம்ருதம்' என்ற வடமொழி சுலோகத்திரட்டைத் தொகுத்தார் வங்க நாட்டில் இயற்றப் பெற்ற வடமொழி இலக்கியத்தைப் பயில் வதற்கு இத்திரட்டு இன்றியமையாதது. பீகாரிலிருந்தும் வட இந்தியாவிலிருந்தும் படையெடுத்து வந்து, வங்க நாட்டைக் கைப்பற்றி அங்கு இஸ்லாமிய சகாப்தத்தைத் தோற்றுவித்த துருக்கி யரின் வருகைக்கு முன்பு கௌட தேசம், வங்கதேசம் (மேற்கு வங்காளம், கிழக்கு வங்காளம்) ஆகியவற்றின் கவிகளின் உள்ளத்தை அறிந்து கொள்ள இந்நூல் மிகவும் உதவுகிறது. "ஸதுக்தி கர்ணாம்ருதம்" முழுவதும் 1933ம் ஆண்டில் பண்டித ராமாவதார சர்மா அவர்களாலும், பண்டித ஹரதத்த சர்மா அவர்களாலும் பதிப்பிக்கப்பெற்று லாகூரிலிருந்து வெளியிடப் பெற்றது. அண்மை யில், 1965ம் ஆண்டில் இதன் புதிய பதிப்பு ஒன்று பேராசிரியர் டாக்டர் ஸுரேஷ் சந்திர பானர்ஜி அவர்களால் கல்கத்தா கே. எல். முக்கியோபாத்தியாய நூலகத்திலிருந்து வெளியிடப் பட்டுள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்னர் கி பி. 1876ம் ஆண்டில் ராஜேந்திர லாலா மித்ரா இதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதினர். பின்னர் கி. பி. 1880ம் ஆண்டில் ஜெர்மானிய அறிஞர் தியோடார் ஔப்ரெஹ்ட் என்பவர் இரண்டு ஏட்டுப் பிரதிகளின் துணை கொண்டு திரட்டை ஆராய்ந்து ஜெர்மன் மொழியில் கட்டுரைகள் எழுதி அதை மேலைநாடுகளுக்கு அறிமுகம் செய்து வைத்தார். இப்பண்டிதர் ஸதுக்தி கர்ணாமிருதத்தை நன்கு பரிசீலனை செய்திருந் தார். இதைப்பற்றி அவர் எழுதியிருந்த குறிப்புக்களைக் காலம் சென்ற டாக்டர் எப். டபிள்யூ தாமஸ் அவர்கள் பிற்காலத்தில் மற்றொரு முக்கியமான வடமொழித்திரட்டான 'கவீந்திர வசந ஸமுச்சயம்' என்ற நூலைப்பதிப்பிக்கும்போது தாராளமாகப் பயன் படுத்திக்கொண்டார் ஸதுக்திகர்ணாமிருதத்தில் பல விருத்தங்களில் புனையப்பட்டுள்ள சுமார் 2400 வடமொழி சுலோகங்கள் உள்ளன. இவை ஐந்து பகுதிகளாக (பிரவாகங்கள்) பிரிக்கப்பட்டுள்ளன. சுமார் ஐந்நூறு சுலோகங்களுக்கு இயற்றியவர்களின் பெயர்கள்

கிடைக்கவில்லை. அல்லது அவை மறைந்துபோயிருக்கலாம். எஞ்சியுள்ள சுலோகங்களை இயற்றியுள்ள சுமார் ஐந்நூறு கவிகளின் பெயர்கள் நமக்குக் கிடைத்துள்ளன. இவ்வைந்நூறு கவிகளுள் மூந்நூறு கவிகளுக்குமேல் கௌட-வங்க நாடுகளைச் சேர்ந்தவர்களென்று தோன்றுகிறது. மிகப்பெரிய இத்திரட்டின் ஐந்து பகுதிகள் (பிரவாகங்கள்) கீழ்வருமாறு:

(i) அமர ப்ரவாஹம் அல்லது தேவ ப்ரவாஹம். அதாவது தேவர்களைப்பற்றிய பகுதி;

(ii) சிருங்காரப் ப்ரவாஹம் அல்லது காதலைப்பற்றிய பகுதி.

(iii) சாடுப்ரவாஹம் அல்லது புகழ்ச்சி, முகஸ்துதி பற்றியது.

(iv) அபதேச ப்ரவாஹம் அல்லது சாக்குரைத்தல், வஞ்சம் பற்றியது.

(v) உச்சாவச ப்ரவாஹம் அல்லது மேல்கீழ் இவற்றைக் குறித்தது. ப்ரவாகம் எனப்படும் இத்தகைய ஒவ்வொரு பெருக்கின் கீழும், வீசீ எனப்படும் பல அலைகள் உள்ளன. ஒவ்வொரு வீசியிலும் ஐந்து சுலோகங்கள் உள்ளன. முதல் பிரவாகமான அமர ப்ரவாஹத்தில் 95 வீசிகளும், ச்ருங்கார ப்ரவாஹத்தில் 179 வீசிகளும், சாடு ப்ரவாஹத்தில் 54 வீசிகளும், அபதேச ப்ரவாஹத்தில் 72 வீசிகளும் உச்சாவச ப்ரவாஹத்தில் 76 வீசிகளும் உள்ளன.

இந்த பிரவாகங்களில் சேர்க்கப்பட்டிருக்கும் வடமொழிச் செய்யுள்கள் பலவற்றில், கி.பி. 1200ல் நிகழ்ந்த துருக்கியரின் படையெடுப்புக்கு முன் வாழ்ந்த வங்க நாட்டு மக்களின் கவிதை உணர்ச்சியும், இனிய பண்பாடும் தெளிவாகக் காணப்படுகின்றன. பிற்காலத்தில் இடைக் காலத்தில் தோன்றிய கவிதை மரபுக்கும் வங்க நாட்டுக் கவியுலகின் சூழ்நிலைக்கும் அடிப்படையான தத்துவம் இந்த சுலோகங்களில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. பின்னர் தோன்றிய இடைக் காலத்து வங்காள இலக்கியத்திற்கும், நவீன யுகத்தின் இலக்கியத்திற்கும் எதிர் நோக்கு இவற்றில் காணப்படுகிறது. ஸதுக்தி கர்ணாமிருதம் என்ற நூல் வடமொழித் தொகுப்பாக இருப்பினும், பிற்கால வங்க மொழிக் கவிதைகளுக்கு இதுவே அடிப்படை என்பது திண்ணம்.

இந்நூலின் வெவ்வேறு பிரவாகங்களில் வரும் முப்பத்தொரு சுலோகங்கள். "ஜயதேவஸ்ய" அல்லது "ஜெயதேவருடைய" என்ற தலைப்பின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. கீத கோவிந்தத்தின்

ஆசிரியரைத் தவிர, ஜெயதேவர் என்ற பெயரையுடைய மற்ற இருவருள் வடமொழி விருத்தங்களைப் பற்றி எழுதிய முதல் ஜெயதேவர் ஒரு கவி என்று எங்கும் காணப்படவில்லை. 'பிரஸந்ந ராகவ'த்தின் ஆசிரியரான இரண்டாம் ஜெயதேவர் நமது ஜெய தேவருக்கு சம காலத்தவராக இருந்திருக்கலாம், எனினும் ஸதுக்தி கர்ணாமிருதம் தொகுக்கப்பட்ட காலத்தில் அவருடைய பெயரும், புகழும் வங்கதேசம் வரை பரவியிருந்ததாகத் தெரியவில்லை. நூலைத் தொகுத்த ஸ்ரீதர தாசருக்கு கீத கோவிந்தத்தின் ஆசிரியரைத் தவிர வேறு ஜெயதேவர்களைப் பற்றித் தெரிந் திருந்ததால் அவர் நிச்சயமாக அவர்களைப் பற்றிக் குறிப்பிட் டிருப்பார். லக்ஷ்மண ஸேன மன்னரின் ஆஸ்தான கவியாக இருந்த ஜெயதேவரின் கீத கோவிந்தத்திலிருந்து ஐந்து சுலோகங்களை எடுத்து எழுதியிருக்கும் ஸ்ரீதர தாசர், ஜெயதேவரின் பெயரின் கீழ் தந்திருக்கும் முப்பத்தொரு சுலோகங்களில் மற்றொரு ஜெய தேவரின் பெயரைக் குழப்பியிருக்க முடியாது. இவ்வைந்து சுலோகங்களும் ஜெயதேவரின் கீத கோவிந்தத்தைச் சேர்ந்தவை என்பதில் சிறிதும் ஐயம் இல்லையாதலாலும், ஸ்ரீதர தாசர் லக்ஷ்மண ஸேனனின் ஆஸ்தானத்தில் ஓர் உயர் அதிகாரியாக இருந்ததாலும், ஸதுக்தி கர்ணாமிருதத்தில் அவர் எடுத்து எழுதியிருக்கும் முப்பத் தொரு சுலோகங்களும் நமது ஜெயதேவருடையனவே என்று திண்ணமாகக் கூற முடியும். (ஸதுக்தி கர்ணாமிருதத்தின் முன்னுரையில் ஸ்ரீதர தாசர் தமது தந்தை வடுதாசர் லக்ஷ்மண ஸேன மன்னரால் மிகவும் கவுரவிக்கப்பட்டவர் என்று கூறுகிறார்). ஸதுக்தி கர்ணாமிருதத்தில் ஜெயதேவருக்கு சமகாலத்தவரும், கீத கோவிந்தத்தில் குறிப்பிடப் பெற்றுள்ளவருமான உமாபதி தரர் இயற்றிய தொண்ணூற்றொரு சுலோகங்கள் காணப்படு கின்றன. காதலைப் பற்றி 700 சுலோகங்கள் கொண்ட தொகுப் பாகிய "ஆர்யா ஸப்த சதியின்' ஆசிரியரான ஆசார்ய கோவர்த் தனரின் சுலோகங்கள் ஆறும், கவிசரணர் பாடிய சுலோகங்கள் இருபத்தொன்றும் உள்ளன. தோயீ இயற்றிய இருபது சுலோகங் களில் இரண்டு அவருடைய புகழ்பெற்ற காவியமாகிய 'பவந தூத'த்தைச் சேர்ந்தவை. (மகாகவி காளிதாசனின் "மேக தூத' காவியத்தைப் பின்பற்றி எழுதப்பட்ட சுவைமிக்க இந்நூல் அச்சிடப் பெற்றுள்ளது.) மேற்கூறிய கவிகள் நால்வரும் ஜெய தேவரால் தமது கீத கோவிந்தத்தில் குறிப்பிடப்பட்டவர்கள். மேற்கூறிய சுலோகங்களைத் தவிர லக்ஷ்மண ஸேனரின் குமாரராகிய கேசவ ஸேன இளவரசர் இயற்றிய பதினொரு சுலோகங்களும் கவி ஹலாயுதர் பாடிய ஐந்து சுலோகங்களும் ஸதுக்தி கர்ணா மிருதத்தில் உள்ளன. இவ்விருவரும் ஜெயதேவருக்கு சம காலத்

தவர்கள். இவற்றைத் தவிர ஜெய தேவரின் காலத்திற்கு ஏறக் குறைய முன்பின்னாக வாழ்ந்த பல்வேறு கவிகளின் கவனங்களும் மேற்கூறிய நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

இ. பி. பதினாறும் நூற்றாண்டின் மத்தியில் வங்காளத்தின் சிறப்பு மிக்க வைணவ ஆசாரியரான ரூபகோஸ்வாமியவர்கள் பிருந்தாவனத்தில் வசித்து வந்தார். அச்சமயம் அவர் 'பத்யாவலீ' என்ற பெயருடன் தொகுத்த வைணவ சமயப் பாடல்களில் மேற்கூறிய கவிகள் அனைவருடைய சுலோகங்கள் பல காணப்படுகின்றன.

ஸ்ரீதர தாசரால் எடுத்தெழுதப்பட்டுள்ள ஜெயதேவரின் சுலோகங்களுள் வீர ரஸத்தை வருணிக்கும் சுலோகங்களும் காணப் படுகின்றன. கீத கோவிந்தத்தில் காதலை வருணிக்கும் சிருங்கார ரசம் ஒன்றுதான் காணப்படுகிறது. தற்காலத்தில் ஜெயதேவர் வங் காளத்திலும் கிழக்கு இந்தியாவிலும் ஒரு வைணவக்கவி என்றும் கிருஷ்ண பக்தர் என்றுமே கருதப்படுகிறார். ஆயினும் ஸ்ரீதர தாசர் எழுதியுள்ள முப்பத்தொரு சுலோகங்களில் சிவபெருமான துதியாக உள்ள சில பாடல்களும் உள்ளன. ஜெயதேவர் கண்ணன் குழலிசை யில் மட்டும் மயங்கிக் கவிதை பாடவில்லை என்றும், போர்க்களத்தில் ஆயுதங்கள் ஒன்றோடொன்று மோதுவதையும், கொம்புகள் முழங்கு வதையும் வருணித்துக் கவிதை இயற்றியுள்ளார் என்பதையும் இவற் றிலிருந்து நாம் அறிகிறோம். போர்க்களத்தையும் எக்காளங்களின் முழக்கத்தையும் வருணிக்கும் சிறந்த பல செய்யுட்கள் இத்தொகுப் பில் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து ஜெயதேவர் ஆதியிலி ருந்தே வைணவ பக்தராகவும் மகானாகவும் இருந்திருப்பார் என்று தோன்றவில்லை. ஸ்மார்த்தர் அல்லது சைவ பிராம்மணராகவும், இல்லத்தாராகவும் இருந்து, புராணங்களில் போற்றப்படும் கணே சர், சூரியன், விஷ்ணு, சிவன், உமை ஆகிய ஐந்து அல்லது ஆறு தெய் வங்களை ஒரே பக்தியுடன் வழிபட்டவராகவே தோன்றுகிறது. தென்னிந்தியாவில் குமரன் அல்லது கார்த்திகேயன் எனப்படும் கட வுள் ஆறாவது தெய்வமாகக் கருதப்படுகிறார். (ஆகவே "பஞ்சோ பாஸர்கள்" என்றால் 'ஐந்து தெய்வங்களை வணங்குபவர்கள்" என் றும் "ஷடுபாஸகர்கள்" என்றால் "ஆறு தெய்வங்களை வணங்குபவர் கள்" என்றும் அழைக்கப்படுகிறார்கள்). பிற்காலத்தில் மிகவும் செல் வாக்குள்ள சமயப் பிரிவாக நிலைபெற்ற வங்க நாட்டு வைணவர்கள் (இவர்களுக்கு கௌடீய வைஷ்ணவர்கள் என்றும் நவத்வீப வைஷ் ணவர்கள் என்றும் பெயர்) ஜெயதேவரை ஒரு சிறந்த வைஷ்ணவக் கவியென்றும், மகானென்றும் புகழ் பெறுமாறு செய்தனர். ஆதி யிலேயே அவர் இவ்வாறு புகழ்படைத்திருந்தார் என்று கூறுவதற்

இல்லை. சைதன்யருக்குப் பிற்காலத்தில் வங்க நாட்டில் தோன்றிய வைணவ சமூகத்தைப் போலவும் சமயப் பிரிவைப் போன்றதுமான ஒரு சமூகம் கி பி. 1100—1200ம் ஆண்டுகளுக்கிடையே தோன்றியது என்ற கருத்தை நாம் ஒப்புக்கொள்ளமுடியாது. காலஞ்சென்ற மகாமகோபாத்தியாய ஹரப்ரஸாத் சாஸ்திரியவர்கள் கவி வித்தியாபதி இயற்றிய 'கீர்த்திலதா' என்ற நூலைப் பதிப்பித்தபொழுது தம் முன்னுரையில் "மிதிலை நாட்டினராகிய வித்தியாபதி வங்க நாட்டில் வைஷ்ணவ மகாஜனங்கள் என்று அழைக்கப்பட்ட சமயப் பிரிவைச் சார்ந்த கவி அல்லர்" என்று கூறியிருக்கிறார். (வைஷ்ணவ மகாஜனங்கள் என்ற பிரிவினர் கிருஷ்ணன் இராதை இவர்களின் தெய்வீகக் காதலை அடிப்படையாகக் கொண்டு, பக்தி, சிருங்காரம் இரண்டும் கலந்த கவிதைகளை இயற்றியவர்கள். இக்கவிதைகள் ஆன்மீக முறையில் கடவுளை வழிபடுவோரால் பஜனைகளிலும், மத சம்பந்தமான ஆர்வத்திற்காகவும் பாடப்பெறும்). வித்தியாபதி ஒரு சாதாரண ஸ்மார்த்த பிராமணர், இடைக்காலத்திற்குப்பின் போற்றப்பட்ட தேவதாகணங்களுள் விஷ்ணு-சிவன், லக்ஷ்மி-உமை, இராதை-கங்கை என்ற வேறுபாடில்லாமல் அனைவரையும் வழிபட்டவர். ஜெயதேவர் இயற்றிய 'கீத கோவிந்தம்' கிழக்கிந்தியாவில் பிற்காலத்தில் தொன்றிய வைஷ்ணவ சமயப்பிரிவுகளால் சிறந்த மத நூலாகக் கருதப்பட்ட போதிலும், ஜெயதேவரும் வித்தியாபதியைப் போல் பல தெய்வங்களை வழிபட்ட ஒரு சாதாரண பக்த கவியாக இருந்திருக்க வேண்டும்.

V. வரலாற்று நாயகராகிய ஜெயதேவர் சமய சார்பற்ற ஒரு சிருங்கார கவி: ராதா கிருஷ்ணர்களின் பக்தரும் மகானும் தெய்வீகக் காதலை வருணிக்கும் கவியும் இவரே: கீத கோவிந்த காவியத்தின் முதல் சுலோகம்.

ஜெயதேவர் இயற்றியுள்ள சில சுலோகங்களுக்கு விளக்கங்களும் உரைகளும் எழுதப்பட்டபோது ஒரு குறிப்பிட்ட சமய சார்புடைய கொள்கைகள் அவற்றின் மீது சாட்டப் பெற்றதால் மிகவும் சிக்கலான ஒரு நிலை தோன்றிவிட்டது.

கீத கோவிந்தத்தின் முதல் சுலோகம் வருமாறு:

"மேகைர் மேதுரம் அம்பரம் வநபுவச்யாமாஸ் தமால த்ருமைர்
நக்தம் பீருரயம் த்வமேவ ததிமம் ராதே ! க்ருஹம் ப்ராபய ,
இத்தம் நந்த நிதேசதஸ் சலிதயோ : ப்ரத்யத்வ குஞ்ஜ த்ருமம்
ராதா மாதவயோர் ஜயந்தி யமுநா கூலே ரஹ : கேலய : "

(வானம் மேகங்களினால் மூடப்பட்டுள்ளது பச்சிலை மரக்கிளைகளின் அடர்த்தியால் காடுகள் கருநிறம் பூண்டன. இரவு வந்தது. "இச்சிறுவன் அச்சம் அடைபவன். ஆதலால் இராதையே! நீயே இவனை வீடு சேர்ப்பிக்க வேண்டும்" என்று நந்தகோபர் கட்டளையிடவும் அங்கிருந்து புறப்பட்ட இராதையும் மாதவனும் (கிருஷ்ணனும்) யமுனைக்கரையில் ஒவ்வொருகொடி வீட்டிலும் புரிந்த காதல் விளையாட்டுக்கள் வெற்றி பெறுவதாக!)

இதன் எளிய பொருள் :

கிருஷ்ணனிடம் அன்பு பூண்ட வளர்ப்புத் தந்தையாகிய நந்தரின் கட்டளைப்படி, மேக மூட்டத்தினால் இருண்ட இருட்டைக் கண்டு பயந்து தனியே வீடு திரும்ப அஞ்சிய கிருஷ்ணனை இராதை வீடு சேர்ப்பித்தாள். திவ்விய காதலர்களாகிய அவ்விருவரும், சாமானியக் காதலர்களைப் போலவே அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். இந்த லீலை அல்லது திருவிளையாடலை ஆதாரமாகக் கொண்டு கவி ஜெயதேவர் ஒரு பக்தனின் சுதந்திரத்துடன் ஒரு சிறு கதையைப் படைக்கிறார். சந்தேகம் சிறிதுமற்ற நந்தகோபர், காதலர் இருவரும் தனியே கூடுவதற்கு ஒரு வாய்ப்பை அளித்து, அவர்களுடைய விருப்பை நிறைவேற்றி வைக்கிறார்.

ஆயினும் எளிமையும் இயற்கையும் நிறைந்த இந்த சூழ்நிலையைப் பிற்காலத்தில் பக்திப்பெருக்கில் ஆழ்ந்து போன வைணவப் புலவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அந்தச்சந்தர்ப்பத்தில் நந்த கோபர் அங்கிருந்தார் என்ற கருத்தே அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே ''நந்த நிதேசத'' என்ற சொற்றொடருக்கு இயற்கையாக அமையும் பொருளாகிய 'நந்தனின் கட்டளையால்' எனபதை விட்டுவிட்டு, 'மகிழ்ச்சி தரும் செய்தி'', அல்லது ''காதலர்களுக்கு மகிழ்வூட்டும் நோக்குடன்'' என்ற பொருளை அமைத்து, சுலோகத்தில் முதல் இரண்டு வரிகளும் நந்தகோபர் மொழிந் தவையல்ல, இராதையின் தோழி அல்லது கண்ணனுக்கு நண்பன் கூறியவை என்று எழுதிவிட்டனர்,

ஜெயதேவருடைய காலத்திலேயே தொகுக்கப்பட்ட ''ஸதுக்தி கர்ணும்ருதம்'' என்ற தனிப்பாடல் திரட்டில் மேற்கூறிய சுலோகத்தையே மாதிரியாகக் கொண்ட இரண்டு செய்யுட்கள் காணப்படுகின்றன. இவற்றுள் ஒன்று இளவரசர் கேசவஸேன ராலும் மற்றொன்று லக்ஷ்மணஸேன மன்னராலும் இயற்றப் பட்டவை என்று கூறப்படுகிறது ஜெயதேவர் இயற்றிய கீத கோவிந்தத்தின் முதல் சுலோகத்தைப் போலவே தாமும் ஒன்று எழுத வேண்டும் என்று விரும்பிய இளவரசர் கேசவஸேனர் கிருஷ்ணனின் வளர்ப்புத் தாயாகிய யசோதை கபடமில்லாமல் புரிந்த ஒரு செயலால் கண்ணனுக்கும் இராதைக்கும் காதல் புரிய வாய்ப்புக் கிடைத்ததென்று கற்பனை செய்கிறார். சார்தூல விக்ரீடிதத்தில் அமைந்த கேசவஸேனரின் சுலோகம் பின்வருமாறு:

'' ஆஹூதாத்ய மஹோத்ஸவே (மயோத்ஸவே) நிசிக்ருஹம்
சூந்யம் விமுச்யாகதா

க்ஷீப : ப்ரேஷ்ய ஜந : கதம் குல வதூரேகாகிநீ யாஸ்யதி ?

வத்ஸ த்வம் ததிமாம் நயாலயமிதி ச்ருத்வா யசோதாகிரோ

ராதா மாதவயோர் ஜயந்தி மதுர ஸ்மேராலஸா த்ருஷ்டய : ''

(''இன்று விழாவிற்காக என்னால் அழைக்கப்பட்ட இராதை தனது இல்லத்தை விட்டு இங்கு வந்திருக்கிறாள். அவளுக்குத்துணை செல்ல வேண்டிய வேலைக்காரர்கள் மதுமயக்கத்தில் உள்ளனர். உயர்குலப் பெண்ணாகிய அவள் தனியே எங்ஙனம் வீடு திரும்புவாள்? ஆகவே, மகனே! நீயே இவளை வீடு சேர்ப்பிக்கவேண்டும்'' என்று யசோதை உரைத்ததைக்கேட்ட இராதையும் மாதவனும் (கண்ணனும்) இனிய புன்சிரிப்புடன் ஒருவரையொருவர் நோக்கிய பார்வைகள் வெற்றியுடன் விளங்குக!)

இளவரசர் கேசவஸேனர் இயற்றிய இந்த சுலோகத்தைக் கீத கோவிந்தத்தின் முதல் சுலோகத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் "நந்தநிதேசத" என்பதற்கு 'நந்தகோபரின் கட்டளைப்படி' என்ற பொருளே பொருந்துமே தவிர, பிற்காலத்து வங்க நாட்டு வைணவ பக்தர்கள் எழுதிய உரை ஒவ்வாது என்பது விளங்கும். சாதாரணமாக எல்லோருக்கும் விளங்கக்கூடிய இப்பொருளே பொருத்தமானது என்பதற்கு காங்ரா முதலிய பகுதிகளைச் சேர்ந்த பல சித்திரங்கள் சான்றுக அமைகின்றன. இவற்றில் கீதகோவிந்தத்தின் முதல் சுலோகத்தில் வருணிக்கப்பட்டுள்ள காட்சி அப்படியே சித்திரிக்கப்பட்டுள்ளது. காட்டில் மாடுகள் மேயும் பின்னணியில், முதிய மன்னராகிய நந்தகோபர் இராதை யுடன் கண்ணனை அனுப்பும் நிகழ்ச்சி தெளிவாக வரையப் பட்டுள்ளது.

லக்ஷ்மண ஸேன மன்னரால் இயற்றப்பட்டதாக ஸதுக்தி கர்ணாம்ருதத்தில் சேர்க்கப்பட்டுள்ள சுலோகமும் கீழே தரப்படு கிறது. அஃது எதனைப் பின்பற்றி எழுதப்பட்டதென்பது எளிதில் விளங்கும்.

" க்ருஷ்ண ! த்வத் வநமாலயா ஸஹக்ருத :
கேநாபி குஞ்ஜோதரே
கோபீ குந்தல பர்ஹ தாம ததிதம் ப்ராப்தம் மயா
க்ருஹ்யதாம்
இத்தம் துக்த முகேந கோப சிசுநாக்யாதே த்ரபாநம்ரயோ :
ராதா—மாதவயோர் ஜயந்தி வலித ஸமேராலஸா
த்ருஷ்டய ;"

"(கிருஷ்ணா! அங்கே ஒரு கொடி வீட்டில் உனது வனமாலையுடன் பின்னிக் கிடந்த கோபியின் கூந்தல் குஞ்சம் கிடந்தது. இதைப் பெற்றுக்கொள்." என்று பால் மணம் மாறாப் பாலகன் ஒருவன் கூறியதைக் கேட்டு வெட்கத்தால் தலை குனிந்த இராதை மாதவன் (கண்ணன்) ஆகிய இருவரின் அழகிய புன்னகையும், கடைக்கண் பார்வையும் வெற்றியுடன் விளங்கட்டும்!)

இதில் லக்ஷ்மண ஸேன மன்னரின் கற்பனை வேறு விதமாக அமைந்துள்ளது. காதலர்களாகிய இராதையும் கண்ணனும் சந்தித்த கொடி வீடு பால் மணம் மாறாத (துக்தமுகேந) அல்லது கள்ளம் கபடற்ற (தக்தமுகேந) ஒரு சிறுவனின் பேச்சால் அம்பல மாகி விடுகிறது.

இத்தகைய சுலோகங்களின் நான்காம் வரியில் பல்லவி போல் வரும் ''ராதா மாதவயோர் ஜயந்தி'' என்ற சொற்றொடர் கவனிக்கத்தக்கது. மன்னரின் சபையில் செய்யுள் இயற்றுவதில் நடந்த மகிழ்ச்சிகரமான ஒரு போட்டியை இம்மூன்று சுலோகங் களும் சுட்டிக்காட்டுவதாகக்கொள்ளலாம். இதில் மன்னரும் இளவரசரும் தலைசிறந்த கவியாகிய ஜெயதேவரும் கலந்து கொண்டனர் என்றும் நாம் ஊகிக்கலாம். அங்கிருந்த மற்ற சபையோர் போட்டியை ரசித்து ஆரவாரம் செய்திருக்க வேண்டும், தனிப்பாடல் திரட்டைத் தொகுத்த ஸ்ரீதர தாசர் வருங்கால சந்ததியினருக்காக மேற்கூறிய செய்யுள்களை எழுதி வைத்தார் போலும்!

இராதையும் கண்ணனும் புரிந்த தெய்வீகக் காதல் லீலைகளுள் ஒரு கட்டத்தைக் குறிப்பிடுவதே கீத கோவிந்தத்தின் முதல் சுலோகத்தின் தனிச்சிறப்பாகும். அச்சமயத்தில் கண்ணனின் வளர்ப்புத்தந்தை நந்தகோபர் வந்து குறுக்கிடுவதைப் பிற்கால வைணவ சமூகம் விரும்பவில்லை. இங்கிலாந்து தேசத்தில் வழங்கி வரும் ஆர்தர் மன்னரின் கதையில் ராணி க்வினிவியருக்கும் வீரன் லான்ஸ் லாட்டிற்கும் இடையே நடந்த காதல் சம்பவத்தில் வீரன் காலஹாட் குறுக்கிட்டதை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஆயினும் கவிதை என்ற கோணத்திலிருந்து ஆராய்ந்தால் கீத கோவிந்தத்தின் முதல் சுலோகம் ஓர் இருண்ட கார்கால இரவை வருணிக்கும அழகிய செய்யுளாக அமைகிறது.

பாரத நாட்டின் சிறந்த பல ஆசிரியர்களும் திறனாய்வாளர் களும் இந்த சுலோகத்தின கவிதை நயத்தை மிகவும் புகழ்ந்து எழுதியுள்ளனர். ஜெயதேவரின் கீத கோவிந்தத்தில் வரும் இயற்கை வருணனை இளவேனிற் காலத்தின் மகிழ்ச்சி நிரம்பிய பின்னணியில் அமைகிறது. ஆதவனின் ஒளியும், பசுமையான செடி கொடிகள், பல்வித வண்ணமலர்கள் ஆகியவற்றின் எழிலும், அதில் இடம்பெறுகின்றன. மலர்களின் நறுமணத்திற்கிடையே வண்டுகள் முரலும் ஓசையும், புள்ளினங்கள் பாடும் இன்னிசையும் ஒலிக் கின்றன. ஆயினும், முதல் சுலோகத்தின் தொடக்க மொழிகளோ இருண்ட சாந்தமான ஒரு நிலையை நம் அகக்கண்முன் நிறுத்து கின்றன. இதன் உட்கருத்தை விளக்க விமரிசகர்கள் முயன்றுள்ளனர். ஒன்று மட்டும் தெளிவாக விளங்குகிறது. சுலோகத்தின் முதல் சொற்களிலேயே ஒப்பற்ற கவிதை நயம் மிளிர்கிறது. அவற்றின் சுருக்கத்திலேயே ஒரு சித்திரம் அமைந்

துள்ளது. அவை நமக்கு ஜப்பான் தேசத்து டங்காவின் ரசிகத் தன்மை நிறைந்த அழகையும் சித்திர வேலைப்பாட்டையும் நிலைவுறுத்துகின்றன.

" மேகைர் மேதுரம் அம்பரம்
வந புவ ச்யாமாஸ் தமாலத்ருமைர்
நக்தம் "

" வானம் கருமுகில்களால் மூடப்பட்டுள்ளது.
பச்சிலை மரங்களின் அடர்த்தியால்
காடுகள் கருநிறம் பூண்டன;
இரவு வந்தது."

ஜெயதேவரின் காவியக் கலையிலிருந்து தோன்றிய இந்த சுலோகத்தின் ஒரு சிறு பகுதி நம்முள் எழுச்சி பெறச் செய்யும் மொழிகளின் மாயா ஜாலத்தையும் சித்திர ஜாலத்தையும் ரவீந்திரநாத டாகுர், பாலேந்திரநாத டாகுர் முதலிய சிறந்த இலக்கியப் படைப்பாளர்கள் உற்சாகத்துடன் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள். இப்பகுதியை நாம் சுலோகத்திலிருந்தும், காவியத்திலிருந்தும் தனியே பிரித்தால்கூட அதனுள் அடங்கியிருக்கும் இனிய கவிதைச் சுவையும் பெருமிதமும் சிறிதும் குறையாமல் இருப்பது ஒரு விந்தையே எனலாம்.

VI. ஸதுக்தி கர்ணாமிருதத்தில் காணப்பெறும் ஜெயதேவரின் 26 சுலோகங்களும் கீத கோவிந்தமுமே அவர் இயற்றிய கவிதைகள்—பல நடைகளில் எழுதவல்ல கவிஜெயதேவர்

ஜெயதேவரின் மாபெரும் சாதனையாகிய கீத கோவிந்தத்தை நாம் ஆராயப்புகுமுன், ஸதுக்தி கர்ணாமிருதத்தில் காணப்பெறும் அவருடைய 26 சுலோகங்களைப் பரிசீலனை செய்தால், காதல், சிருங்காரம் ஆகியவற்றைத் தவிர பிற உணர்வுகளைப் பற்றியும் அவர் கவி பாடியிருப்பதை அறிகிறோம். அவருடைய கவிதையின் அடி நீரோட்டமாக வைணவமும் பக்தியும் இருப்பது உண்மையே. ஆனால் கீத கோவிந்த காவியத்தில் தலைதூக்கி நிற்கும் ரசமும், இலக்கியச் சுவையும் சிருங்காரம் எனப்பெறும் காதலைப் பற்றியவையே தவிர பக்தி, தியானம் முதலியவற்றைக் குறிக்கும் சாந்த ரசம் அல்ல. ஸதுக்தி கர்ணாமிருதத்திலிருந்து நாம் கீழே எழுதியிருக்கும் சுலோகங்களிலிருந்து, சிருங்கார ரசத்தைக் கையாளுவதில் தலைசிறந்தவரான ஜெயதேவர் மற்ற ரசங்களைச் சித்தரிப்பதிலும் நிபுணர் என்பது எளிதில் விளங்கும். அவர் பல கலைவல்ல மேதை என்பதற்கும், ஸம்ஸ்கிருதக் கவிதை மரபிலிருந்து சிறிதும் வழுவாமல் ரசங்கள் அனைத்தையும் சுலபமாக அமைக்கக் கூடியவர் என்பதற்கும் இவை சான்றாக உள்ளன. அவருடைய இசை ஏழு நரம்புகள் கொண்ட யாழிலிருந்து தோன்றியது. ஒரே தந்தியுடைய கருவியிலிருந்து இசைக்கப்பட்டதல்ல.

ஸதுக்தி கர்ணாமிருதத்தில் காணப்பெறும் இந்த சுலோகங்கள் சாதாரணமாகப் பலருடைய கவனத்திற்கு வந்தவையல்ல. இவற்றுடன் கீத கோவிந்தத்தையும் நாம் சேர்த்துக் கொண்டால் ஜெயதேவரின் இலக்கியப் படைப்புக்கள் அனைத்தும் நமக்குக் கிடைத்து விடுகின்றன. ஆகவே ஜெயதேவரைக் குறித்த ஆராய்ச்சிக்கு இந்த சுலோகங்கள் மிகவும் உதவுகின்றன. கீத கோவிந்தத்தின் பற்பல பதிப்புக்களும் கைப் பிரதிகளும் நமக்குக் கிடைக்கின்றன. ஸதுக்தி கர்ணாமிருதத்திலிருந்து கீழே தரப்பட்டுள்ள சுலோகங்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பு எழுதப்படவில்லை, ஏனெனில். வடமொழி அறிந்தவர்கள் அவற்றின் சாரத்தை எளிதில் நுகர முடியும். ஆகையால் விசேஷ குறிப்புக்கள் மட்டும் சேர்க்கப் பட்டுள்ளன. (ஸதுக்தி கர்ணாமிருத சுலோகங்களுக்கு இம்மொழி பெயர்ப்பில் தமிழில் பொழிப்புரை எழுதப்பட்டுள்ளது.)

ஜெயதேவர் இயற்றியதாக ஸதுக்தி கர்ணாமிருதத்தில் காணப் பெறும் சுலோகங்கள் பின்வருமாறு:

(1) ஸதுக்தி கர்ணாமிருதம் 1 / 4 / 4
மகாதேவர் (சிவபெருமான்)

"பூதி வ்யாஜேந பூமிம் அமர புர ஸரித் கைதவா தம்பு விப்ரல்—
லாலாடாக்ஷிச் சலேந ஜ்வலந மஹிபதி ச்வாஸ லக்ஷ்யம் ஸமீரம்
விஸ்தீர்ணகோர வக்த்ரோதர குஹர நிபேநாம்பரம் பஞ்ச பூதைர்
விச்வம் சத்வத் விதந்வந் விதரது பவத:
ஸம்பதம் சந்த்ர மௌலி:"

பொழிப்புரை : *திருநீறு என்ற சாக்கினால் மண்ணையும், கங்கை என்ற பெயரினால் நீரையும், நெற்றிக்கண் என்ற பெயரால் நெருப்பையும் ஆதிசேடனின் மூச்சுக் காற்று என்ற பெயரால் காற்றையும். பரந்த வாயின் துளை என்ற பெயரால் விண்ணையும் ஆக ஐம்பூதங்களையும் கொண்டு உலகைப் படைக்கும் பிறை சூடிய பெம்மான் உங்களுக்குச் செல்வத்தை அளிப்பாராக.*

(இது ஸம்ஸ்கிருத நாடகங்கள், கல்வெட்டு சாசனங்கள் முதலியவற்றில் கையாளப் பெறும் சிறந்த நடையில் சிவபெருமானின் அருளை வேண்டி பிரார்த்தனை வடிவில் எழுதப்பட்ட செய்யுள்).

(2) ஸதுக்தி கர்ணாமிருதம் 1 / 50 / 3 திருமாலின்
பத்தாவதும இறுதியுமான கல்கி அவதாரம்

"கல்கீ கல்கம் ஹரது ஜகத: ஸ்பூர்ஜதூர் ஜஸ்வி தேஜா
வேதோச்சேத ஸ்புரித துரித த்வம்ஸநே தூமகேது;
யேநோத் க்ஷிப்ய க்ஷண மஸிலதாம் தூமவத் கல்மஷேச் சாந்
ம்லேச்சாந் ஹத்வா தலித கலிநா காரி ஸத்யாவதார:"

(நாத்திகத்தையும் தீய நெறியையும் பரவச் செய்யும் மிலேச்சர்களை ஒழிக்க திருமால் எடுக்கவிருக்கும் கல்கி அவதாரத்திற்கு பிரார்த்தனை)

பொழிப்புரை : ஒளிமிக்கவரும், மறைகளுக்கு அழிவு நேர்ந்தபோது அதற்குக் காரணமான பாவத்தைத் தொலைப்பதில் நெருப்பே போன்றவரும், பிறருக்குத் தீங்கு விளைவிப்பதில் ஊக்கமுள்ள மிலேச்சர்களைத் தம் வாளால் எறிந்து கலியுகத்தைப் போக்கி மீண்டும் கிருதயுகத்தைத் தொடங்குபவருமான கல்கி அவதாரம் எடுத்த பகவான் நம் பாவங்களை அகற்றுவாராக.

(3) 1/59/4 க்ருஷ்ணபுஜ: (கண்ணனின் தோள்)

" ஜய ஸ்ரீ விந்யஸ்தைர் மஹித இவ மந்தார குஸுமை:"
(கீத கோவிந்தம் 11/34)

பொழிப்புரை : வெற்றித் திருமகளால் பொழியப்பெற்ற மந்தார மலர்களால் போற்றப்பட்ட.

(4) 1/60/5 கோவர்த்த நோத்தார: (கோவர்த்தன கிரி எடுத்தல்)

" முக்தே-நாத, கிமாத்த? தந்வி, சிகரி ப்ராக் பார புக்நோ புஜ :
ஸாஹாய்யம், ப்ரிய, கிம் பஜாமி ஸுபகே
தோர் வல்லி மாயா ஸய"
இத்யுல்லாஸித பாஹு மூல விசலத்ச் சேலாஞ்சல வ்யக்தயோ
ராதாயா : குசயோர் ஜயந்தி சலிதா கம்ஸத்விஷோ த்ருஷ்டய:"

(இந்த சுலோகத்தில் கண்ணன் தன் உள்ளங்கையினுல் கோவர்த்தன பர்வதத்தைத் தூக்கிய நிகழ்ச்சி சிருங்கார ரஸத்துடன் கலந்து வருணிக்கப்படுகிறது. ஜெயதேவரின் ஸம காலத்தவரான கவி உமாபதிதரர் இதே நடையில் இயற்றிய மற்ெருரு சுலோகமும் ஸதுக்தி கர்ணுமிருதத்தில் காணப்படுகிறது. ஸதுக்தி கர்ணுமிருதத்தில் உமாபதிதரரின் சுலோகத்தின் எண் 1/55/3. ரூப கோஸ்வாமியவர்கள் 16வது நூற்ருண்டில் தொகுத்த பத்யாவலித் திரட்டில் இதன் எண் 259. இது ஹரிக்ரீடா அல்லது கண்ணனின் காதல் விளையாட்டு என்ற தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளது. ஸமஸ்யாபூர்த்தி (ஒரு வரியைக் கொண்டு மீதிச் செய்யுளை முடித்தல்) என்ற போட்டியின் போது தரப்படும் வரியைப் போல் இவ்விரு சுலோகங்களின் நான்காவது வரியின் முடிவும் ஒரே மாதிரியாக உள்ளது குறிப்பிடத்தக்கது. சார்தூல விக்ரீடித விருத்தத்தில் ஜெயதேவர், லக்ஷ்மண ஸேனர், கேசவ ஸேனர் ஆகியோரால் இயற்றப்பட்ட மற்ற சில சுலோகங்களும் இவ்விதமே முடிகின்றன.)

" ப்ருவல்லீ சலனை: கயாபி நயனோந் மேஷை: கயாபி ஸ்மிதா
ஜ்யோத்ஸ்நா விச்சுரிதை: கயாபி நிப்ருதம் ஸம்பாவி தஸ்யா த்வனி
கர்வோத் பேத க்ருதாவஹேல விநய ஸ்ரீ பாஜி ராதா நதே
ஸாதங்காநு நயம் ஜயந்தி பதிதா: கம்ஸத்விஷோ த்ருஷ்டய:"

மேற்கண்ட சுலோகங்களின் பொழிப்புரை: "பருவ மங்கையே! என்ன சொல்கிருய்?" என்று கண்ணன் கேட்க, "கோவர்த்தன கிரியைத் தாங்குவதால் உனது கை வளைந்து விடப் போகிறது. நான் சிறிது உதவி செய்யலாமா?" என்று இராதை விடை தர

"நன்று. உன் தோளைக் காட்டுவாயாக" எனக் கண்ணன் கூற, அவளும் தன் கைகளைச் சிறிது தூக்க அச்சமயம் அவளை உற்று நோக்கி நகைத்த அக்கண்ணனின் பார்வைகள் விளங்கட்டும்."

ஒருத்தி தன் புருவங்களை நெரித்துக் கண்ணனைப் பார்க்கிறாள். மற்றொருத்தி மலர நோக்கி விழிக்கின்றாள். வேறொருத்தி புன் சிரிப்புடன் நோக்குகிறாள் இன்னொருத்தி அசையாமல் உற்றுக் காண்கிறாள். இந்நிலையில் இவர்கள் எவரையும் பாராமல் தன்னிடந்தான் கண்ணனுக்குக் காதல் என்னும் செருக்கோடு அலட்சியத்துடன் இருக்கும் ராதையின் களை பொருந்திய முகத்திலே பதிகின்ற கண்ணனின் பார்வைகள் விளங்கட்டும்.

(5) 1/35/5 : பஹுரூபகச்சந்த்ர : (சந்திரனின் பல கோணங்கள்)

"க்ரீடா கர்ப்பூர தீபஸ் த்ரிதச ம்ருக த்ருசாம்
காம ஸாமராஜ்ய லக்ஷ்மீ
ப்ரோத்க்ஷிப்தை காத பத்ரம் ச்ரம சமந சலங் சாமரம் காமிநீநாம்
கஸ்தூரீ பங்க முத்ராங்கித மதந வதூ முக்த கண்டோபதாநம்
த்வீபம் வ்யோ மாம்பு ராசே ஸ்புரதி ஸுரபுரீ
கேலி ஹம்ஸ: ஸுதாம்சு:"

(நிலவைப் பற்றிய விரிவான வருணனை)

பொழிப்புரை : தேவமாதர் விளையாடுவதற்குத் தக்க கருப்பூரத்தாலான விளக்கோ, அல்லது மன்மதனுடைய சாம்ராஜ்ய லக்ஷ்மிக்கு விரிக்கப்பட்ட குடையோ, அன்றி அழகு மகளிரின் அசைவைப போக்க அசைந்து வரும் சாமரமோ, அல்லது கஸ்தூரி இழைக்கப் பெறற இரதி தேவியின் தலை அணையோ, விண் கடலில் ஒரு தீவோ அன்றி விண்ணுலகில் உள்ள அரச அன்னமோ என்று எண்ணப்படும் முழு நிலவு விளங்குகிறான்.

(6) 2/37/4 : வாஸக ஸஜ்ஜா

(தலைவனை எதிர்நோக்கிக் கோலம் புனைந்து நிற்கும் தலைவி)
" அங்கேஷ் வாபரணம் கரோதி (தநோதி) பஹுச :"
(கீதகோவிந்தம் 5/11)

(தனது அங்கங்களில் ஏராளமான அணிகளைப் பூண்டு நிற்பவள்)

(7) 2/72/4 : அதர : (உதடு)

" விபாதி பிம்பாதர வல்லிரஸ்யா:
ஸ்மரஸ்ய பந்தூக தநுர் லதேவ
விநாபி பாணேந குணேந யேயம்
யுநாம் மநாம்ஸி ப்ரஸபம் பிநத்தி"

(*அழகு மங்கையின் இதழ்*)

பொழிப்புரை : *காமனுடைய செம்பருத்தி மலர்களாலான வில் போன்ற இப்பெண்ணின் கோவைப்பழம் ஒத்த செவ்விதழ்கள் அம்புகள் இன்றியே இளைஞர்களின் நெஞ்சைப் பிளப்பதாக விளங்குகின்றன.*

(8) 2/77/5 ரோமாவலீ (உரோம வரிசை)

" ஹரதி ரதிபதேர் நிதம்ப பிம்ப ஸ்தந தட
சங்க்ரம ஸங்க்ரமஸ்ய லக்ஷ்மீம்
த்ரிவலி பத தரங்க நிம்ந நாபீ ஹ்ரத பதவீம் அதிரோம
ராஜிரஸ்யா :

(*இளமைப் பருவத்தின் உரோம வரிசை*)

பொழிப்புரை : *அம்மங்கையின் மயிர் ஒழுங்கு மூவடுக்கு மடிப்புக்களாலாகிய அலைகளுடன் கூடிய ஆழமான மடுவில் உள்ளதாய் அல்குல் பகுதியில் விளையாட்டால் நேர்ந்த ஒளியைப் போக்கிவிடுகிறது.*

(9) 2/132/4 : ரதாரம்ப ; (கூடலின் தொடக்கம்)

" உந்மிலத் புலகாங்குரேண நிபிடாச்லேஷே நிமேஷேந ச"

காதல் விளையாட்டின் தொடக்கம்.

பொழிப்புரை : *இறுகத் தழுவிய காலத்தும், மயிர்க்கூச்செறிந்த போதும், கண்கள் இமையாமல் இருந்த நேரத்திலும் இவையாவும் தடையாக அமையாமல் கூடல் நிகழ்ந்தது.*

(10) 2/134/4 விபரீத ரதம் (புணர்ச்சியின் மிகுதி)

"மாரங்கே ரதிகேளி" (கீதகோவிந்தம் 12/12)

(*கூடலின் போது தலைவனைப்போல நடித்தல்*)

(11) 2/137/5 உஷஸி ப்ரியா தர்சநம்

(விடியற்காலையில் காதலியைக் காணல்)

"அஸ்யா: (தஸ்யா:) பாடல பாஸி ஜாங்கிதம் உரோ" (கீதகோவிந்தம் 12/4)

(இரவுப் புணர்ச்சிக்குப் பின்னர் மறுநாள்காலை தலைவியின் தோற்றம்)

(12) 2/170/5 சரத் கஞ்ஜந:

(கூதிர் காலத்தில் வலியன் என்ற பறவை)

மதுரமதுரம் கூஜந் நக்ரே பதந் முஹுருத்பதந்
அவிரத சலத் புச்ச: ஸ்வேச்சம் விசும்ப்ய சிரம்ப்ரியாம்
இஹ ஹி சரதி க்ஷீப: பக்ஷௌ விதூய மிலந்முதா
மதயதி ரஹ: குஞ்ஜே மஞ்ஜு ஸ்தலிமதி கஞ்ஜந:"

(கொடிவீட்டில் காதல் பறவை வலியன்)

பொழிப்புரை: *கூதிர் காலத்தில் இங்கே வலியன் என்ற பறவை இனிதாகப் பாடிக் கொண்டு மேலும் கீழும் பறந்து கொண்டு இடைவிடாமல் வாலையாட்டிக் கொண்டு நெடு நேரமாகத் தன் பேடையோடு சிறகுகளை உதறிக்கொண்டு மகிழ்வுடன் அழகிய புதரில் இருந்து அனைவருக்கும் மோகத்தை உண்டு பண்ணுகிறது.*

(13) 3/5/4 தர்ம: (அறம்)

"யூபை ருத்கட கண்டகைரிவ மக
ப்ரோதபூத தூமோத்கமைர்
அப்யந்தம் கரணௌஷதைரிவ பதே
நேத்ரேச ஜாத வ்யதை:
யஸ்மிந் தர்ம பரே ப்ரசாஸதி தப:
ஸம்பேதிகீம மேதிகீம
ஆஸ்தாம் ஆக்ரமிதும் விலோகிதுமபி
வ்யக்தம ந சக்த: கலி:

(வேள்வி கடமையைச் செய்யும் அரசன்)

பொழிப்புரை: *வேள்வித்தீயிலிருந்து எழும் புகைச்சுருள்கள் ஆங்காங்கு நாட்டப்பட்டிருந்த யூப தூண்கள்போல உயர்ந்து கண்களை மறைக்கும் மருந்துப் புகை போல் கலிபுருடனை*

வருத்துகின்றன. ஆகவே அறத்தில் நோக்குடைய அரசனே! உன் தவ வலிமையால் நீ இவ்வுலகை ஆளும்போது கலி புருடன் அதைக் கண்களால் காண முடியாது. அவன் இவ்வுலகை எங்ஙனம் ஆக்கிரமிப்பான்?

(14) 3/9/4 கர : (கரம்)

'' தேஷாம் அல்பதர: ஸ கல்ப விடபீ
தேஷாம் ந சிந்தாமணிச்
சிந்தாமப்யுபயாதி காம ஸுரபிஸ்
தேஷாம ந காமாஸ்பதம்
தீநோத்தார துரீண புண்ய சரிதோ
யேஷாம் ப்ரஸந்நோ மநாக்
பாணிஸ்தே தரணீந்திர ஸுந்தர யச:
ஸம்ரக்ஷிணோ தக்ஷிண:

(நேர்மையான அரசனின் கைவண்மை)

(15) 3/9/5 கர : (கரம்)

'' தேவ! த்வத் கர பல்லவோ விஜயதாம்
அச்ராந்த விச்ராநந
க்ரீடா ஸ்கந்தித கல்ப வ்ருக்ஷ விபவ :
கீர்த்தி ப்ரஸூநோஜ்வல
யஸ்யோத்ஸர்க ஜலச்சலேந கலிதா
ஸ்யாந்தாந தாநோதக
ச்ரோதோபிர் விதுஷாம் லலாட லிகிதா
தைந்யாக்ஷர ச்ரேணய:''

(கொடை மன்னனின் கைவலிமை)

பொழிப்புரை : அரசே! உன் புகழைப் பறைசாற்றும் கொடையில் சிறந்து எளியவர்களைக் கைதூக்கிவிடும் உன் வலக் கரத்தைக் கண்டவருக்குக் கற்பகத்தரு அற்பமாகும். சிந்தாமணி அவர் சிந்தையில் என்றும் இருப்பதில்லை. காமதேனுவையும் அவர்கள் நாடுவது இல்லை.

மன்ன! இடைவிடாமல் தானம் செய்வதால் கற்பக தருவின் பெருமையையும் மீறிவிட்ட புகழ் மிக்க உன் கையால் தானம் செய்யுங்காலத்தே விடும் நீரினால் புலவர்களின் தலைமீது எழுதப் பெற்ற கெட்ட எழுத்துக்கள் அழிந்து விடுகின்றன.

(16) 3/10/4 சரண : (பாதம்)

" லக்ஷ்மீ விப்ரம ஸத்ம பத்மஸுபகம்
கே நாம நோர்வீ புஜோ
தேவ! த்வத் சரணம் வ்ராஜந்தி சரணம்
ஸ்ரீ ரக்ஷணாகாங்க்ஷிண:
சாயாயாம் அநுகம்ய ஸம்யக் அபயா:
த்வத் வீர்ய ஸுர்யாதப
வ்யாப்தாம ப்யவநீம் அடந்தி ரிபவ:
த்யக்தாத பத்ரா : ஸுகம்"

(வலிமை பொருந்திய மன்னனின் பாதம்)

பொழிப்புரை : *மன்னவா! திருமகளின் விளையாட்டு வீடு போன்றதான தாமரையை ஒத்த உன் திருவடிகளைச் சரணகப் பற்றித் தங்கள் செல்வத்தைக் காத்துக்கொள்ள விரும்பும் பகை அரசர்கள் அனைவரும் உன் நிழலில் ஒதுங்கி அச்சம் தவிர்ந்து உன் வீரியமாகிய வெயிலில் இவ்வுலகைக் குடையின்றியே சுற்றி வருகிறுர்கள்.*

(17) 3/11/5 ப்ரிய வ்யாக்யாநம் (மன்னனின் புகழ்)

" லக்ஷ்மீ கேலி புஜங்க! ஜங்கம ஹரே!
ஸங்கல்ப கல்பத்ரும!
ச்ரேயஸ் ஸாதக ஸங்க! ஸங்கர கலா
காங்கேய! வங்க ப்ரிய!
கௌடேந்த்ர! ப்ரதி ராஜநாயக! ஸபா
லங்கார! கர்ணார்ப்பித
ப்ரத்யர்த்தி க்ஷிதிபால! பாலக ஸதாம்
த்ருஷ்டோஸி துஷ்டா வயம்.

(*வங்கம், கௌடம் ஆகிய நாடுகளை ஆளும் ஒப்பற்ற அரசனுடைய புகழ்மாலை*)

பொழிப்புரை : *திருத்தக்க செல்வம் உடைய அரசனே! இவ்வுலகில் நடமாடும் திருமாலே! விரும்பியவற்றை அளிக்கும் கற்பகமே! நன்மை தருபவனே! போரில் பீஷ்மரையொத்தவனே! வங்க தேசத்து அதிபனே! கௌட நாட்டு மன்னனே! பகையரசர்களின் சபைக்கு அணி போன்றவனே! பகைவரையும் காப்பவனே! சான்றோர்க்குத் துணைவனே! நாங்கள் உன்னைக் கண்டோம்.* எங்கள் வருத்தம் நீங்கியது,

(18) 3/15/5 தேசாச்ரய (நாடுகள் சேர்த்தல்)

" த்வம் சோலோல்லோல லீலாம் கலயஸி குருஷே
கர்ஷணம் குந்தலாநாம்
த்வம் காஞ்சிங்யஞ்சநாய ப்ரபவஸி ரபஸாத்
அங்க ஸங்கம் கரோஷி
இத்தம் ராஜேந்திர! வந்திஸ்துதிபி ருபஹிதோத்
கம்பமே வாத்ய தீர்க்கம்
நாரீணமப் யரீணம் ஹ்ருதயமுதயதே
த்வத் பதாராதநாய "

(சோழம், குந்தலம், காஞ்சி, அங்கம் ஆகிய நாடுகளை வென்ற மன்னனுக்குப் புகழ்மாலை)

பொழிப்புரை : *மன்னவனே! நீ சோழர்களை வெளியேற்றுகின்றாய். குந்தல நாட்டவரை ஈர்க்கின்றாய். காஞ்சி மாநகரைத் தன தாக்கிக் கொள்கின்றாய். விரைவில் அங்கநாட்டையும் வளைத்துக் கொள்கின்றாய். இத்தகைய செயல்களால் நீ, துதிபாடும் கவிஞர் களையும் மகளிரையும் பகைவர்களையும் உன்னை வணங்க வேண்டும் என்ற நினைவை அவர் மனத்தே உண்டாக்குகின்றாய்.*

(19) 3/19/5 விக்ரம: (வீரம்)

" சிக்ஷந்தே சாடு வாதான் விதததி யவஸான்
ஆநநே காநநேஷு
ப்ராம்யந்தி ஜ்யாகிணங்கம் விததி சிபிரம்
குர்வதே பர்வதேஷு
அப்யஸ்யந்தி ப்ரயாணம் த்வயி சலதி சமூ-
சக்ர விக்ராந்தி பாஜி
ப்ராண த்ராணய தேவ! த்வதரிந்ருபதயச்
சக்ரிரே கார்மணநி "

(பெருமிதம் நிறைந்த மாவீரனான மன்னன்)

(20) 3/20/5 பௌருஷம் (ஆண்மை)

" பீஷ்ம க்லீபகதாம் ததார ஸ்மிதி
த்ரோணேந முக்தம் தநுர்
மித்யா தர்மஸுதேந ஜல்பித மபூத்
துர்யோதநோ தூமத :
சித்ரேஷ்வேவ தநஞ்ஜயஸ்ய விஜய.
காரண. ப்ரமாதீ தத:
ஸ்ரீமந் நஸ்தி ந பாரதேபி பவதோ
ய. பௌருஷைர் வர்ததே "

(மகா பாரத வீரர்களை விட வீரத்தில் சிறந்த மன்னன்)

பொழிப்புரை : அரசே! உன் பகைவர்கள் உன்னைப் போற்றிப் புகழுரைகள் கூறக் கற்கிறார்கள். போரில் மண்ணைக் கவ்வினர். காட்டில் திரியப் பழகினர். மலைகளில் கூடாரம் அடித்துக் கொள்ளக் கற்றுக் கொண்டனர். உன்னை வணங்கவும் பழகிக் கொண்டனர். நீ படையெடுத்தவுடன் இவ்வளவையும் அவர்கள் கற்கத் தொடங்கினர்.

பீஷ்மர் ஓர் அலியால் கொல்லப்பட்டார். துரோணர் திடீரென்று வில்லையும் அம்புகளையும் எறிந்து விட்டார். தருமரும் ஒரு பொய் உரைத்தார். துரியோதனன் கொழுப்பு மிதந்தவன். அருச்சுனன் ஏமாந்த சமயத்தில் எதிரியை வென்றான். கர்ணனும் தக்க சமயத்தை நழுவ விட்டான். ஆகவே, மன்னனே! மகாபாரதத்தில் கூட உன்னைப் போன்ற மாவீரன் கிடைப்பது அரிது.

(21) 3/23/5 தேஜ: (பிரகாசம்)

" ஏகம் தாம சமீக்ஷு லீநமபரம்
ஸூர்யோத்பல ஜ்யோதிஷாம்
வ்யாஜாதத்ரிஷு கூட மந்ய துததௌ
ஸமகுப்தம்ஔர்வாயதே
த்வத்தேஜஸ்தபநாம்சு மாம்ஸல ஸமுத்-
தாபேந துர்கம் பயாத்-
வார்க்ஷம் பார்வதம் ஔதகம் யதி யயுஸ்-
தேஜாம்ஸி கிம் பாரத்திவா: "

(மன்னனின் பேரொளி மண்ணுலகிலோ இயற்கையிலோ காணும் பிரகாசத்தைவிட அதிகமானது)

பொழிப்புரை : அரசனே! ஓர் ஒளி வன்னி மரத்தினில் ஒளிந்து கொண்டது. மற்றொன்று சூரியகாந்தக் கல்லில் மறைந்தது. காட்டுத் தீ மலைகளால் மறைக்கப்பட்டது. வடவைத்தீ கடலில் புகுந்தது. இவையாவும் எதனால்? உனது வீரத்தைக் கண்டு அஞ்சி இவை அனைத்தும் தங்களைக் காத்துக் கொண்டன.

(22) 9/29/5 ஆஸ்சர்ய கட்க (வியப்பூட்டும் வாள்)

" ஸ்ரீ கண்ட மூர்த்தி: ஸரலாங்க யஷ்டி:
மாகந்த மாமூலம் அஹோ வஹந்தி
ஸ்ரீமந்! பவத் கட்க தமால வல்லீ
சித்ரம் ரணே ஸ்ரீபல மாதநோதி"

(வியப்பை அளிக்கும் மன்னனுடைய போர்வாள்)

பொழிப்புரை : *அரசே! உன் வாள் பகைவரின் திருவை அழிக்கும். பச்சிலைமரம் போல வளைந்த அவ்வாள் உனக்கு வெற்றித் திருவை அளிக்கும்.*

(23) 3/31/13 தூர்ய த்வநி: (முரச முழக்கம்)

"குஞ்ஜத் க்ரௌஞ்ச நிகுஞ்ஜ குஞ்ஜர கடா
விஸ்தீர்ண கர்ண ஜ்வரா:
ப்ராக் ப்ரத்யக் தரணீந்த்ர கந்தரஜரத்
பாரீநத்ர நித்ரா த்ருஹ :
லங்காங்க த்ரிகுத் ப்ரதி த்வநி கநா:
பர்யந்த யாத்ரா ஜயே
யஸ்ய ப்ரேமு ரமந்த மந்தர ரவை:
ஆசா ருதோ கோஷண:"

(வெற்றி வேந்தனின் எக்காள முழக்கம்)

பொழிப்புரை : *அன்றில் பறவைக்கூட்டம், யானைக்கூட்டம் இவற்றின் செவிகளுக்கு மிக்க துன்பம் கொடுப்பதாயும், கிழக்கு மேற்கு மலைகளிலுள்ள குகைகளில் உறங்கும் கிழச்சிங்கங்களின் உறக்கத்தைக்கெடுப்பதாயும், இலங்கையிலுள்ள திரிகோண மலையிலிருந்து எதிரொலிப்பதாயும் விளங்கும் முரசுகள் அரசனுடைய வெற்றிப் பயணத்தின் போது ஒலித்தன.*

(24) 3/34/4 தூர்ய த்வநி (கொம்புகளின் முழக்கம்)

"யஸ்யாவிர் பூத பீதி ப்ரதிபட ப்ருதநா
காப்பிணீ ப்ரூண பார
ப்ரம்ச ப்ரேசாபி பூத்யை ப்லவ நமிவ பஜந்
நம்ப ஸாம்போநிதீநாம்
ஸம்பாரம் ஸம்ப்ரமஸ்ய த்ரிபுவநமபிதோ
பூப்ருதாம் பிப்ரதுச்சை:
ஸம்ரம்போ ஜ்ரும்பநாய ப்ரதிரணமபவத்
பூரி பேரீ நிநாத:"

(மன்னனுடைய போர்க்களக் கொம்புகளின் பேரொலி. 'ப' என்ற எழுத்தில் அமைந்துள்ள மோனையைக் கவனிக்கவும்)

பொழிப்புரை : *அரசனுடைய வெற்றிப் பயணகாலத்தில் முழங்கிய கொம்புகளின் ஒலி பகைவரின் படைவீரர்களுடைய மனைவியரின் கருச்சிதைவுக்குக் காரணமாகவும் கடல் பொங்கும் போது ஏற்படும் ஓசை போலவும் மூவுலக மன்னர்களுக்கும் பரபரப்பை அளிப்பதாகவும் இருந்தது.*

(25) 3/34/5 தூர்யத்வநி: (கொம்புகளின் பேரொலி)

" விகட்டயங்நேஷ ஹடா தகுண்ட
 வைகுண்ட கண்டீரவ கண்ட கர்ஜம்
பயங்கரோ திக்கரிணும் ரணுக்ரே
 பேரீ ரவோ பைரவ து:ச்ரவஸ்தே"

(போர்க்களத்தில் மன்னனின் கொம்புகளின் பேரொலி)

பொழிப்புரை : *போர்க்களத்தில் முரசொலி நரசிம்மாவதாரம் எடுத்த பகவானின் குரலிலிருந்து எழுந்த கர்ஜனைக்கு மேலாகவும் திசையானைகளுக்கு அச்சத்தை உண்டு பண்ணுவதாகவும் கால பைரவருடைய பேரொலி போலவும் பயங்கரமாக இருந்தது.*

(26) 3/38/3 யுத்தம் (போர்)

" சத்ருணும் காலராத்ரௌ ஸமிதி ஸமுதிதே
 பாண வர்ஷாந்தகாரே
ப்ராக்பாரே கட்கதாராம் ஸரிதமிவ ஸமுத்
 தீர்ய மக்நாரி வம்சாம்
அந்யோந் யாகாத மத்த த்விரத கனகடா
 தந்த வித்யுச் சடாபி;
பச்யந்தீயம் ஸமந்தா தபி ஸரதி முதா
 ஸாம்யுகீநம் ஜயஸ்ரீ:

(போர் வருணனை)

பொழிப்புரை : *அரசே! உனது வெற்றித்திருமகள் பகைவருடன் போர் என்ற ஊழிக்கால இரவில் அம்பு மழை பொழியும் போது இருட்டில் வாள்களுடைய நுனிகளாகிய ஆற்றில் பகைவரின் வம்சத்தை மூங்கிலாகக் கொண்டு தாண்டி ஒன்றோடொன்று மோதும் யானைத் தந்தங்களாகிற மின்னொளியில் வழியை அறிந்து சஞ்சரிக்கிறாள்,*

(27) 3/39/4 யுத்த ஸ்தலீ (போருக்குப்பின்)

" நிர்யந் நாராச தாரா சய கசித பதம்-
 மத்த மாதங்க ஜாதம்
ஜாதம் யஸ்யாரி ஸேநா ருதிர ஜலநிதா
 வந்தரீப ப்ரமாய

ஸுப்தா யஸ்மிந் ரதாந்தே ஸஹஸ ஸஹசரைர்
நாலவந் நாக நாஸா
ரந்த்ர த்வந்த்வைக பாத்ரே ருதிர மதுரஸம்
ப்ரேத காந்தா: பிபந்தி"

(போர்க்களத்தில் பேய்கள் நடமாடும் கோரக்காட்சி)

பொழிப்புரை : *மன்னனே! உனது அம்பு மழை பொழிவதால் கீழே விழுந்த யானைக்கூட்டம் பகைவர் படைகளாகிய குருதிக்கடலில் தீவுகள் போலாயின. அதில் கணவரோடு ஆடிக்களித்த பேய்கள் தங்கள் களைப்பு நீங்க யானைகளின் துதிக்கைகள் என்னும் குழாய்கள் மூலம் உதிரமாகிய கள்ளைப் பருகுகின்றன.*

(28) 3/40/5 திக் விஜய: (திசைகளை வெல்லுதல்)

" ஏக: ஸம்க்ராம ரிங்கத் துரககுர ரஜோ
ராஜிபி: நஷ்டத்ருஷ்டிர்
திக் யாத்ரா ஜைத்ர மத்த த்விரத பர நமத்
பூமி பக்நஸ்த தாங்ய:
வீரா: கே நாம தஸ்மாத் த்ரிஜகதி ந யயு:
க்ஷீணதாம் காணகுப்ஜ
ந்யாயாதே தேந முக்தாவபய மபஜதாம்
வாஸவோ வாஸுகிச்ச"

(*வீர மன்னனின் வெற்றிப்புறப்பாடு*)

பொழிப்புரை : *நீ போருக்குக் கிளம்பிய போது யானை, குதிரை முதலிய படைகள் எழுப்பிய தூசுகளால் ஆயிரம் கண் படைத்த இந்திரனும் பார்வையை இழந்தான். அதே போல யானைப்படைகளின் வருகையால் அழுந்திய பூமியாலே வாசுகி உடலெங்கும் காயம் அடைந்தான். இந்நிலையில் குருடன், நொண்டி என்ற நியாயத்தால் உன் படைக்கு எதிராக எந்த வீரனும் நிற்கமாட்டான். இந்திரனும் வாசுகியுமே உன்பால் சரண் புகுந்தார்கள் அல்லவா?*

(29) 3/52/5 ப்ரசஸ்த கீர்த்தி (மன்னன் புகழ்)

" மலிநயதி வைரிவதநம் ஸ்வஜநம் ரஞ்ஜயதி
தவளயதி தாத்ரீம்
அபி குஸும விசத மூர்த்திர் யத் கீர்த்திச்
சித்ரம் ஆசரதி.

(*அரசனுடைய வெற்றிகளுக்குப் புகழ் மாலை*)

பொழிப்புரை : *அரசே! உன் புகழ் பகைவரின் முகத்தை ஒளி மழுங்கச் செய்கிறது. உன் மக்களைப் பொன் மயமாகப் பொலிவுறச் செய்கிறது. உலகம் முழுவதையும் வெண்மை யாக்குகிறது. இது ஒரு விசித்திரமான செயலன்றோ?*

(30) 5/16/4 திச: (திசைகள்)

'' அஸ்து ஸ்வஸ்த்யயநாய திக் தநபதே:
கைலாஸ சைலாச்ரய
ஸ்ரீ கண்டாபரணேந்து விப்ரம திவா
நக்தம் ப்ரமத் கௌமுதீ
யத்ராலம் நலகூபராபி ஸரஞு ரம்பாய
ரம்பா ஸ்புடத்
பாண்டிம் நேவ தநோஸ் தநோதி விரஹ
வ்யாக்ராபி வேசக்ரஹம்.

(பத்துத் திசைகளும் மன்னனைப் புகழ்தல்)

பொழிப்புரை : *மன்னனே! வெள்ளிமலையை இருக்கையாகக் கொண்ட சிவனுக்கு அணியாக இரவும் பகலும் விளங்கும் நிலவினுல் வெளுத்த குபேரனின் திசையான வடக்கு உனக்கு நன்மை பயப்பதாக! அந்த விரும்பிய மலையில்தான் நளகூபரன் தன்னை இனம் கண்டு கொள்ள பிரிவாற்ருமையால் வருந்திய ரம்பை தன் உடலில் உள்ள பசலை நோயைக் கொண்டே உருவத்தை ஏற்றுக் கொண்டாள்.*

(31) 5/18/2 வீர: (வீரன்)

'' தாத்ரீம் ஏகாத பத்ராம் ஸமிதி க்ருதவதா
சண்ட தோர்தண்ட தர்பாத்
ஆஸ்தாநே பாத நம்ர ப்ரதிபட முகுடா
தர்ச பிம்போத ரேஷு
உத் ஷிப்தச் சத்ர சிஹ்நம் ப்ரதி பலிதமபி
ஸ்வம் வபுர் வீக்ஷ்ய கிஞ்சித்
ஸாஸூயம் யேந த்ருஷ்டா: க்ஷிதிதல விலஸந்
மௌலயோ பூமி பாலா:''

(தோல்வியுற்ற *மன்னர்கள் வெற்றி கொண்ட அரசனைப்* **போற்றுதல்)**

பொழிப்புரை : புவி முழுவதையும் தன் புயவலியால் வென்று ஒரு குடைக்கீழ் கொண்டு வந்த பின்னர் தன் அவையில் தன் அடிகளில் விழுந்து வணங்கி எழும் சிற்றரசர்களின் மணி முடிகளில் பதிந்த தனது நிழலையே தனக்கு எதிராக எழுந்த மற்றொரு பேரரசன் என எண்ணிப் பொருமையுடன் நோக்கு கிறுன் அரசன்.

ஸதுக்தி கர்ணமிருதத்திலிருந்து எடுக்கப்பட்டு மேலே தரப் பட்டுள்ள சுலோகங்களிலிருந்து ஜெயதேவர் சிருங்கார ரசத்தை மாத்திரம் வருணித்து எழுதிய கவி அல்லர் என்பது தெளிவாகிறது. வடமொழி அணி நூலில் கூறப்பட்டுள்ள மற்ற ரசங்களாகிய வீரம், இரௌத்ரம், அற்புதம், சாந்தம் முதலிய ரசங்களையும் மிக்க திறமை யுடனும் அழகுடனும் அவர் கையாண்டிருக்கிறுர். மேற்கூறிய திரட்டில் காணப்படும் முப்பத்தொரு சுலோகங்களுள் ஐந்து ஜெயதேவரின் கீத கோவிந்தத்திலிருந்து எடுக்கப்பட்டவை. மற்ற இருபத்தாறு சுலோகங்களின் நடையைக் கவனித்தால் ஜெயதேவர் வேறு இரண்டு அல்லது மூன்று நூல்களையும் எழுதியிருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. அவற்றுள் ஒன்று கிருஷ்ணனுடைய சரிதத்தைப் பற்றியது. 2, 7, 8, 12 ஆகிய எண்களையுடைய சுலோ கங்களைப் பார்த்தால் அவை கீத கோவிந்தத்தைப் போல கண்ணனைப் பற்றிய ஒரு காவியத்தைச் சார்ந்தவையாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. மற்ற ஓரிரண்டு நூல்கள் மன்னன் லக்ஷ்மண ஸேனரின் பிரதாபங்களைப் பற்றியவையாக இருந்திருக்கலாம். லக்ஷ்மணஸேனர் ஒரு சிறந்த போர் வீரராகத் திகழ்ந்தவர். 13 முதல் 31 வரையிலுள்ள சுலோகங்கள் அவருடைய வீரத்தை வருணிப்பவை. இவை இரண்டாவது அல்லது மூன்றுவது காவியத்தி லிருந்து எடுக்கப்பட்டிருக்கலாம். வீரராகிய லக்ஷ்மணஸேனர் தென்னிந்தியாவை நோக்கிப் படையெடுத்ததாகக் கூறப்படுகிறது. தோயீ என்ற கவிஞர் எழுதிய 'பவந தூதம்' என்ற இலக்கியத்தில் இப்படையெடுப்பு வருணிக்கப்படுகிறது. இஃது எத்துணையளவு வரலாற்று உண்மையை அடிப்படை கொண்டது என்று கூற வியலாது. மன்னன் புகழையே பாடும் ஒரு கவியின் கற்பனையாக வும் இருக்கலாம். அரசன் ஒரியா நாட்டின் மீது படையெடுத்தை (இதற்கும் ஆதாரம் இல்லை) தமிழ் நாட்டின் தெற்கு எல்லை வரை சென்று வெற்றி பெற்றதாகக் கவி மிகைபடக் கூறியிருக்கலாம். லக்ஷ்மண ஸேனரின் ஆஸ்தான கவிகளுள் ஒருவரான ஜெயதேவரும் தோயீ கவிராஜரைப் பின்பற்றி மன்னரின் விஜய யாத்திரையைக் குறித்து வேறு விதமான ஒரு நீண்ட காப்பியத்தை இயற்றியிருக்க லாம். மேற்கூறிய திரட்டில் காணப்பெறும் மற்ற சுலோகங்கள்

(1, 4, 5, பெரும்பாலும் 12, 13) ஒரு குறிப்பிட்ட காப்பியத்தைச் சேராத தனிப் பாடல்களாக இருக்கலாம். அரசர்களின் அவைகளி லும் வடமொழி ரசிகர்களிடையிலும் ஜெயதேவரின் கவிதைக்குப் பெருமதிப்பு இருந்திருந்தால்தான் தொகுப்பாசிரியரான ஸ்ரீதர தாசர் ஜெயதேவருடைய இத்துணை சுலோகங்களைத் தமது திரட்டில் சேர்த்திருப்பார். மகா ரசிகராகிய லக்ஷ்மண ஸேனரின் ஆஸ்தானத்தில் வங்க நாட்டைச் சேர்ந்த பல பெருங் கவிஞர்கள் வீற்றிருந்தனர் ஜெயதேவருடைய சுலோகங்களை மற்ற கவிகளு டைய சுலோகங்களுடன் சேர்த்து ஸ்ரீதரதாஸர் தொகுத்திருப்பதி லிருந்து ஜெயதேவர் வங்கநாட்டுடனும், நவத்வீபத்தைத் தலைநக ராகக் கொண்டு ஆண்டு வந்த அரச வம்சத்துடனும், நெருங்கிய தொடர்பு கொண்டவர் என்பது தெளிவாகிறது.

VII. ஜெயதேவருடைய கவிதையின் திக்விஜயம்—பாரத நாடு முழுவதும், உலகின் மற்ற பகுதிகளிலும்.

ஜெயதேவரின் புகழ் மிக விரைவிலேயே பாரத நாட்டின் பகுதிகள் அனைத்திலும் பரவியதாகத் தோன்றுகிறது. வடமொழிப் பண்டிதர்களும் புதிதாகத் தோன்றிய தேசீய மொழிப் புலவர்களும் பெரிதும் விரும்பிய ஒரு தேவையை அவருடைய 'கீத கோவிந்தம் நிறைவேற்றியது. சாஸ்திரீய வடமொழிக் கவிதையின் தத்துவத்திற்கும், அபப்பிரம்ச மொழிகள், புதிய இந்திய ஆரிய மொழிகள் ஆகியவற்றிற்கும் இடையே ஏற்பட்ட மணவாழ்க்கைபோல் அமைந்தது ஜெயதேவரின் காவியம். இந்து மதத்தின் பக்தி இயக்கத்தின் மறுமலர்ச்சிக்குப் பயன்பட்ட புராணக் கதைகள், காதல் கற்பனை ஆகியவை எழில் மிகுந்த வடிவில் கீதகோவிந்தத்தில் அமைக்கப் பெற்று விளங்கின. காவியம் தோன்றி நூறு ஆண்டுகளுக்குள்ளேயே அதன் சுலோகங்களுள் ஒன்று மிகத் தொலைவில் இருந்த குஜராத் நாட்டின் ஒரு கல்வெட்டில் பிரார்த்தனை வடிவமாகச் செதுக்கப்பட்டது. இது பட்டன் (அநஹில வாடா) என்ற ஊரில் சம்வத் 1348 (கி. பி. 1292) ஆண்டில் வரையப்பட்டது. (முன்னர் குறிப்பிடப் பெற்ற மனமோகன் சக்கரவர்த்தி அவர்களின் கட்டுரையைப் பார்க்கவும்.) கீதகோவிந்தத்தின்பால் மக்கள் கொண்டிருந்த நன்மதிப்பு வங்காளம், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களில் எத்துணை உயர்ந்ததாக இருந்ததோ அத்துணையளவு அது குஜராத், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலும், பாஞ்சால நாட்டுப் பகுதிகளிலும், வடஇந்தியச் சமவெளிகளிலும் இருந்தது. அக்காலம் முதலே கீதகோவிந்தத்திலிருந்து அடிகளும் கருத்துக்களும் வங்காளி, ஒரியா, இந்தி, குஜராத்தி முதலிய மொழிகளின் கவிதைகளில் இடம் பெற ஆரம்பித்தன. வங்க மொழியின் இடைக்காலக் கவிஞர்களுள் மிகப் பழமையானவரான படு சண்டிதாஸர் (கி. பி. 1400) இயற்றிய "ஸ்ரீ கிருஷ்ண கீர்த்தநம்" என்ற நூலில் கீதகோவிந்தத்தின் இரண்டு இசைப்பாடல்கள் விளக்கப்பட்டிருப்பதுடன் அதன் பல அடிகள் ஜெயதேவரின் நடையைப் பின்பற்றியே எழுதப்பட்டுள்ளன. பழங்கால குஜராத்தி கவிதையாகிய "வஸந்த விலாஸ்"த்தில் பல செய்யுட்கள் கீதகோவிந்தத்தின் (செய்யுட்கள் 7, 19, 32, 36, 69) சுலோகங்களின் எதிரொலிபோல் காணப்படுகின்றன. (வஸந்த விலாஸம் கி. பி. 1450ல் எழுதப்பட்டதென்று பேராசிரியர் காந்திலால் பி. வியாஸ் அவர்களும், ஏறக்குறைய கி. பி. 1350ல் எழுதப்பட்டதென்று ஸ்ரீ ஜின விஜயாஜீ அவர்களும்

கருதியுள்ளனர்.) கீதகோவிந்தத்தைப் பற்றி விரிவான ஓர் ஆராய்ச்சி நூலை எழுதியுள்ள சாகித்திய ரத்ன டாக்டர் ஹரே கிருஷ்ண முகர்ஜி அவர்கள் ஜெயதேவரின் காவியத்திற்கு நாற்பது உரைகள் இருப்பதாகப் பட்டியல் கொடுத்திருக்கிருர். (வங்க மொழியில் நான்காவது பதிப்பு—வங்க ஆண்டு 1472—ஆக்ஹாயணம்.) இவற்றுள் மிக்க தொன்மையுடைய "ரஸிகப்ரியா" என்ற உரை மேவாட் நாட்டு அரசர் கும்பராணு (1433—1468) அவர்களால் எழுதப்பட்டது. இது மிக விரிவானதும் புலமை நிரம்பியதுமான நூல் ஆகும். வடமொழிநூல்களுள் பற்பல உரைகள் எழுதப் பெற்ற காப்பியங்களில் கீதகோவிந்தம் ஒன்ருகும். இவ்வுரைகள் தென்னிந்தியா உட்பட பாரதநாட்டின் பல பகுதி களிலும் எழுதப் பெற்றன. கீதகோவிந்தத்தின் அமைப்மைப் பின் பற்றி வெவ்வேறு கவிகளால் வடமொழியில் இயற்றப் பெற்ற காவியங்கள் ஏறக்குறைய 15 உள்ளன. முதல் நூலின் சிறப்பிற்கு இதுவே போதிய சான்ருகும். இவற்றைத் தவிர தேசீய மொழி களிலும் இதுபோன்ற சில காவியங்கள் உள்ளன. இடைக்காலத்து வங்க மொழியிலும், ஒரியா மொழியிலும் கீதகோவிந்தத்தை ஒட்டியும், அதன் மொழி பெயர்ப்பாகவும் உள்ள சில நூல்கள் இருந்தன. ரஸமயதாஸ், ஜகத்சிம்மர், ரகுநாத தாசர் ஆகியோருடைய வங்காளி மொழி பெயர்ப்புகளை டாக்டர் ஹரே கிருஷ்ண முக்கியோபாத்தியாயர் சிறப்பாகக் குறிப்பிடுகிருர். மன்னர் பிரதாபருத்திரரின் கட்டளைப்படி கி. பி. 1499ல் புரீ ஜகந்நாத ஆலயத்தில் செதுக்கப்பட்ட ஒரு கல்வெட்டிலிருந்து அவ்வாண்டு முதல் தேவதாசிகளும் கோயில் நர்த்தகர்களும் பாடகர்களும் கீதகோவிந்தத்தைத் தவிர வேறு எந்த நூலிலிருந்தும் கீதங்களையும் சுலோகங்களையும் பாடக் கூடாதென்ற ஆணை பிறப் பிக்கப்பட்டதாக அறிகிருேம். (வங்கநாட்டு ஏஷியாடிக் ஸொஸைட்டியின் LX11ம் தொகுதியில், 1893, பக்கங்கள் 96—97ல் மனமோகன சக்ரவர்த்தி எழுதியுள்ள கட்டுரையைப் பார்க்கவும்.) அபபபிரம்சம், பழைய இந்தி இவற்றின் சித்திரக்கலையிலும் (பழைய குஜராத்தி, ராஜஸ்தான் ஓவியங்களிலும்) மத்திய இந்தியக் கலையிலும், ராஜஸ்தானம், பண்டேல்கண்ட், பஸோஹ்லி, சம்பா, காங்க்டா ஆகிய பகுதிகளின் பிற்கால இந்தி ஓவியக் கலையிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களான வங்காளம், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, ஆந்திரபிரதேசம் முதலிய பகுதிகளிலும் கீதகோவிந்தத்தின் செல்வாக்கு பெரிதும் காணப்படுகிறது.

ஐரோப்பிய நாட்டு அறிஞர்கள் வடமொழியைப் பற்றி அறிந்து அதைப் பயிலத் தொடங்கியவுடன் ஜெயதேவரின் கவித்

திறனை ரசிக்கலாயினர். அவருடைய காவியம் ஸர் வில்லியம் ஜோன்ஸினுல் (1746—1794) ஆங்கிலத்திலும். பின்னர் பிரீட்ரிக் ருகர்ட்டினுல் (1788—1866) ஜெர்மன் மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டது. பிற்காலத்தில் மற்ற மொழி பெயர்ப்பாளர் களால் பிரெஞ்சு, ஆங்கிலம், ஜெர்மன், பிற ஐரோப்பிய மொழிகள் ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டது. தற்பொழுது கீத கோவிந்தம் உலக இலக்கியங்களில் தலைசிறந்த ஒரு காவியமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

VIII. கீத கோவிந்த காவியம் அதன் பாடல்களைப் பொறுத்த வரையில் இடைக்கால இந்திய ஆரிய இலக்கியத்தின் பிற்காலம் அல்லது புதிய இந்திய ஆரிய இலக்கியத்தின் முற்காலம் ஆகியவற்றின் பிரதி பிம்பமா?

கீத கோவிந்தத்தில் பண்டைய வடமொழிக்கவிதை. அபம்பிரம்ச கவிதை, தொடக்கக்கால மொழிக் கவிதை ஆகிய வற்றின் தத்துவம் அடங்கியுள்ளது. அதன் பன்னிரு சருக்கங்களில் 24 கீதங்கள் அடங்கியுள்ளன. அதாவது 24 பதங்கள் காவியத்தி னூடே செருகப்பட்டுள்ளன. காவியத்தில் கதையை வருணிக்கும் பகுதிகளின் சுலோகங்கள் விருத்தம், நடை, கருத்துக்கள் முதலிய அம்சங்களில் பண்டைய வடமொழி மரபைச் சிறிதும் வழுவாமல் பின்பற்றுகின்றன. ஆயினும் அதன் கீதங்களில் அபப்பிரம்ச மொழிக் கவிதை, புதிய இந்திய ஆரிய மரபு ஆகியவற்றின் பாதிப்பு நன்கு தெரிகிறது. அவற்றின் சந்தங்கள் அபப்பிரம்ச அல்லது பழைய மொழி நடையை ஒத்திருக்கின்றன. இந்த கீதங்கள் ஆதியில் அபப்பிரம்ச நடையிலோ அல்லது பழைய மொழி (அதாவது பழைய வங்காளி) நடையிலோ எழுதப்பட்டிருக்கலாம் என்று சில ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். (லாஸ்ஸன் என்ற ஆசிரியர் எழுதிய "கிராமாடிக் டேர் ப்ராக்ருத் ஸ்ப்ராஹேன்" என்ற நூலைப்பற்றி பிஸ்கல் குறிப்பிட்டிருப்பதையும், கீத கோவிந் தத்தின் வங்காளிமொழி பெயர்ப்பிற்கு விநய சந்திர மஜு்ம்தார் எழுதியுள்ள முன்னுரையையும் பார்க்க). ஜெயதேவர் ஆதியில் அபப்பிரம்ச அல்லது பழைய வங்காளி மொழியில் எழுதிய கீதங்கள் மிகவும் புகழ் பெற்றிருக்க வேண்டும். அது காரணமாக அவற்றிற்கு ஒரு நிரந்தரமான வடிவை ஏற்படுத்தி பாரத தேசமெங்கும் அவற்றைப் பரவச் செய்ய வேண்டும் என்று ஜெயதேவர் அவற்றை வடமொழியில் மொழி பெயர்த்திருக்கலாம். இஃது ஓர் ஊகமே எனினும் இதற்குப் பின் வரும் நான்கு உண்மைகள் அடிப்படையாக அமைகின்றன.

(i) பண்டைய வடமொழி மரபிற்கு மாறாக அபப்பிரம்சம் அல்லது பழைய மொழியின் பாதிப்பு கீத கோவிந்தத்தின் 24 பதங்கள் அல்லது கீதங்களில் தெளிவாகத் தெரிகிறது. இது அவற்றைப் படித்தவுடனேயே விளங்குமாதலால் இதை மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை.

(ii) ஜெயதேவர் இயற்றியுள்ள கீதங்களில் பலவற்றை நமக்கு நினைவுறுத்தும் பாடல்கள் அபப்பிரம்சம் (அவஹட்டா அல்லது அபப்பிரஷ்டா), பழைய பாஷா முதலிய பிரதேச மொழிகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன. எடுத்துக்காட்டாக, பிராகிருத பைங்கலம் (15ம் நூற்றுண்டின் இறுதி) மாநஸோல்லாஸம் அல்லது அபிலஷிதார்த்த சிந்தாமணி (12ம் நூற்றுண்டின் முற்பகுதி) முதலியன. (இது தொடர்பாக நான் எழுதியுள்ள ''வங்கமொழி யின் தோற்றமும் வளர்ச்சியும்'' என்ற நூலைப் பார்க்க. முதற்பாகம். முதற் பதிப்பு—கல்கத்தா 1926; மறுபதிப்பு 1970, ஜார்ஜ்ஆலன் அன்வின் லிமிடெட்—பக்கங்கள் 123—37. மூன்றும் பாகம், முதற் பதிப்பு1972—ஜார்ஜ் ஆலன் & அன்வின் லிமிடெட்—பக்கங்கள் 29—31 டாக்டர் ஸுகுமார் ஸேன்'' வங்கமொழியில் எழுதியுள்ள வங்கமொழியின் வரலாறு'' முதற்பாகம் பார்க்கவும்)

(iii) கீதங்களின் சில அடிகளை அபப்பிரம்ச மொழியில் அமைத்துப் பாடினுல் இன்னும் சிறப்பாக ஒலிக்கின்றன. அடிகளில் வரும் நிறுத்துமிடங்களும் பழைய வங்க மொழியின் மரபை ஒத்திருக்கின்றன. (உதாரணமாக இரண்டாம் சருக்கத்தில் ஐந்தாவது பாடலில் வரும் 'ஸ்மரதி மநோ மமக்ருத பரிஹாஸம்' என்ற அமைப்பு அபப்பிரம்ச மொழியில், ''ஸுமரயி மந மம கிய பரிஹாஸம்'' (எங்களுடன் விளையாடிக் கேலி செய்தவனை என் மனம் நினைக்கிறது.) என்ற அமைப்பில் அழகாக ஒலிக்கின்றது. மற்ருேர் உதராணமாக 'ஸ்ரீ ஜயதேவ கவேரிதம் குருதே முதம் மங்கள முஜ்வல கீதி'' (கவி ஜெயதேவர் பாடிய இக்காதல் கீதங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கட்டும்) என்ற அடியில் ஒரு மாத்திரை அல்லது மோரோ அதிகமாக இருக்கிறது. இதை அபிப்பிரம்ச மரபில் ஸ்ரீ ''ஜயதேவ கவேர் இதா குருதே முதா'' என்று மாற்றிவிட்டால் அக்குறைபாடு நீங்கி விடும். இதை டாக்டர் ஸுகுமார் ஸென் அவர்கள் குறிப்பிட்டிருந்த போதிலும், ஜெய தேவரின் கீதங்கள் ஆதியில் வடமொழியைத் தவிர வேறு ஒரு மொழியில் இயற்றப்பட்டன என்ற கருத்தை அவர் ஒப்புக் கொள்ளவில்லை) இந்த கீதங்களின் விருத்தங்களைப் போலவே நாட்டு மொழிகளிலும் கிழக்கிந்திய மொழிகளிலும் விருத்தங்கள் உள்ளன.

(iv) இறுதியாக, கீத கோவிந்தம் ஒரு வரலாற்றுக் காவியமாக இருப்பினும் அதில் ஒரளவு நாடக அமைப்பும் காணப்பெறுகிறது, இராதையின் தோழியும், இராதையும், கிருஷ்ணனும் பாடும் பாடல்கள் சில உரையாடல் வடிவத்தில் உள்ளன. இவை யாத்ரா எனப்பெறும் பழைய வங்காளி இசை நாடகங்களின் வளர்ச்சிக்குக்

காரணமாக இருந்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை. இசைக் கருவிகளின் இசையைப் பின்னணியாகக் கொண்டு பண்டைய காலத்தில் பாட்டு-தரு-உரைநடை உரையாடல் முதலியவற்றைக் கலந்து அமைக்கப்பட்ட நாடக வடிவைப் பின்பற்றியதாகவும் இருக்கலாம். அன்றேல், மிதிலை, வடக்குபீஹார் முதலிய பிரதேசங்களில் வழங்கி வந்ததும், வடமொழியிலும் பிராகிருத மொழியிலும் (வடமொழி நாடகங்களைப் போலவே) உரைநடைப் பேச்சுக்கள்) செய்யுள் நடைப்பாடல்கள் அடங்கிய நாடக மரபுடன் தொடர்பு கொண்டதுமாக இருக்கலாம். இப்பாடல்களை ஸர் ஜார்ஜ் ஏப்ரகாம் கிரியர்ஸன் என்ற ஆராய்ச்சியாளர் கவனித்துக் குறித்திருக்கிறார். (அவர் எழுதிய ''மைதிலி இலக்கணமும் பிறமொழிப் பாடல் திரட்டும்'' என்ற நூலைப் பார்க்கவும்.) 14-ம் நூற்றாண்டின் முதல் காற்பகுதியில் வாழ்ந்த உமாபதி உபாத்தியாயர் என்பவர் எழுதிய 'பாரிஜாத ஹரணம்' என்ற இதுபோன்ற ஒரு நாடகத்தை கிரியர்ஸன் அவர்களே 1917ம் ஆண்டில் பாட்னாவிலிருந்து 'பீகார், ஒரிஸ்ஸா ஆராய்ச்சிக் கழகத்தின்' சஞ்சிகையில் வெளியிட்டார். இம்மரபு பின்னர் நேப்பாளத்திற்குச் சென்றது. படானிலிருந்து நேவாரி அரச சபைகளிலும் பக்த கிராமம் என்ற பட்காமிலும், கிழக்கு நேப்பாளத்தில் காஷ்ட மண்டபம் என்ற காத்மாண்டுவிலும் இம்மரபு சிறிது மாற்றப்பட்டது. உரையாடல்கள் கொச்சையான வங்க மொழியிலோ மைதிலி மொழியிலோ அமைக்கப் பெற்றன. பாடல்கள் மைதிலி மொழியிலோ கிழக்கு இந்தியாவைச் சேர்ந்த இந்தி மொழியான கோஸாலியிலோ பாடப்பெற்றன. அரங்கிற்கு வேண்டிய வழிமுறைகள் டிபேடோ—பர்மன் வகையைச் சேர்ந்த நேவாரி மொழியில் தரப்பட்டன. இடைக்காலத்து வங்க மொழியின் முக்கியமான காவியமும், அநந்த படு சண்டிதாஸர் இயற்றியதும், இராதா—கிருஷ்ணர்களின் காதலை விவரிப்பதுமான 'கிருஷ்ண கீர்த்தனம்' என்ற நூலில் விரிவுரைப்பகுதிகள், உரையாடல்கள் ஆகிய இரண்டும் உள்ளன. உரையாடல்களில் இரண்டு அல்லது மூன்று உறுப்பினர்கள் செய்யுள் மூலமாகவே பேசுவதையும், விடை தருவதையும் ஒருவரையொருவர் நகையாடுவதையும் காண்கிறோம்.

மேற்கூறியவற்றில் ஒரு கோட்பாடு அடங்கியுள்ளது. அதாவது, அபப்பிரம்சம் அல்லது அவஹட்டா என்ற தேசிய மொழிகளிலிருந்த பாடல்களைச் சிறிது மாற்றி வடமொழியில் அமைத்து கீத கோவிந்தம் உருவாக்கப்பட்டது என்பது. நாட்டுமொழிப் பாடல் களுக்கு வடமொழி வடிவத்தின் மூலம் பெருமதிப்பு ஏற்படும் என்று கருதி இவ்வாறு செய்திருக்க வேண்டும். கி. பி. முதல் ஆயிரம்

ஆண்டுகளில் அபப்பிரம்ச கவிதைகளை வடமொழியாக மாற்றும் வழக்கம் மிகவும் பரவியிருந்தது. கீத கோவிந்தத்தின் ஆதி வடிவத்தில் பாடல்கள் அபப்பிரம்சத்திலும், மற்ற பகுதிகள் இலக்கிய வடமொழியிலும் இருந்திருக்கலாம் என்று நாம் ஊகிக்க இடமுண்டு. பின்னர் கிழக்கிந்தியாவில் அக்காலத்தில் நிலவி வந்த மரபின்படி பாடல்களை வடமொழியில் மாற்றியது எளிதாகவே இருந்திருக்கும். ஏனெனில் மாற்றியமைக்கப்பட்ட ஓரிரண்டு அடிகளில் பழைய அபப்பிரம்ச வடிவின் சாயல் காணப்படுகிறது. எஞ்சிய அடிகள் வடமொழி இலக்கணத்திற்கு ஏற்ற ஒலி நயத்தோடு மாற்றப்பட்டுள்ளன.

IX. ஜெயதேவர் இயற்றியதாகக் கருதப்படுபவையும், சீக்கியரின் குருகிரந்த ஸாஹிப் எனப்படும் ஆதி கிரந்தத்தில் காணப் படுபவையுமான இரண்டு துதிப் பாடல்கள்

கீத கோவிந்தத்திலுள்ள செய்யுள்களையும் பாடல்களையும் தவிர ஜெயதேவர் வேறு நீண்ட காவியம் எதையாவது இயற்றியுள்ளாரா என்பது நமக்குத் தெரியவில்லை. அவர் இயற்றியதாகக் கூறப்படும் சில செய்யுள்கள் ஸதுக்தி கர்ணாமிருதம் என்ற தொகுப்பில் காணப் படுவதை மேலே குறிப்பிட்டோம். இவற்றிலிருந்து வீரம் முதலிய ரசங்களை வருணிப்பதிலும் அவர் திறமையுடையவர் என்பதைக் கவனித்தோம். ஒரு வேளை அவர் ஒன்றிரண்டு வேறு நீண்ட நூல் களை இயற்றியிருந்து, அவற்றிலிருந்து மேற்கண்ட பாடல்கள் திரட்டப்பட்டிருக்கலாம். அல்லது அவற்றை சந்தர்ப்பத்திற் கேற்றவாறு ஆசுகவியாகப் பாடியிருக்கலாம். வடஇந்திய பக்தி சம்பிரதாயப்படி தேசிய மொழியில் பாடல்கள் அமைத்த ஜெய தேவர்கள் ஒன்றிற்கு மேற்பட்டவர் இருந்தனர் என்பது ஒரு கொள்கை. ஆயினும் இக்காலத்தில் இவற்றை இயற்றியவர் கீத கோவிந்தத்தின் ஆசிரியரே என்று கூறப்படுகிறது. இவர் அமரரான பின்னர் இரண்டு நூற்றாண்டுகளுக்குள்ளேயே இவர் ஒரு மகானாக வும் வைணவ மதத்தின் பக்த சிகாமணிகளுள் ஒருவராகவும் கருதப் பட்டார்.

பஞ்சாப் மாநிலத்திலும் ஜெயதேவர் அகில இந்தியப் புகழ் பெற்ற ஒரு மகானாகவும் கருதப்பட்டார். சீக்கியர்களின் ஐந்தாவது குருவாகிய குரு அர்ஜுனர் கி. பி. 1605ல் ஆதி கிரந்தம் (குரு கிரந்தம் கிரந்த ஸாஹேப்) என்ற நூலைத் தொகுத்த பொழுது ஜெயதேவரின் முத்திரையுள்ள இரண்டு பாடல்களை அதில் சேர்த்தார். இவற்றுள் ஒன்று அபப்பிரம்சமும் வடமொழியும் கலந்தது. மற்றொன்று பழைய தேசியமொழி. இவற்றின் ஆசிரியர் (ஆசிரியர்கள்?) கீத கோவிந்தத்தை எழுதிய ஜெயதேவர் என்று கருத எள்ளளவும் சான்று இல்லை, சீக்கியரின் மரபு அவ்வாறு கூறுகிறது (இடைக்கால இந்தி நூலான பக்த மாலாவில் காணப்படும் சீக்கியரின் சம்பிரதா யத்தைக் குறித்து எம். ஏ. மாக்காலிப்ஃ எழுதிய சீக்கியரின் மதம் என்ற நூலைப் பார்க்கவும். ஆக்ஸ்போர்டு 1909 — ஆறும்பாகம்)

ஆதி கிரந்தம் என்பதை மத்திய யுகத்து ரிக் வேதம் எனலாம். பஞ்சாபிலும், வட இந்தியாவிலும் சமவெளிகளிலும் வழங்கி வந்த ஏராளமான துதிப்பாடல்கள் 12ம் நூற்றாண்டு முதல் 16ம்

நூற்றுண்டு வரை வாழ்ந்திருந்த வெவ்வேறு மகான்களாலும் பக்தர்களாலும் இயற்றப்பட்டவை. இவற்றைத் தொகுத்தவருக்குக் கிடைத்தவரையில் அவர் ஒப்புக் கொண்ட பாடல்கள் திரட்டப் பட்டன. பாடலாசிரியர்களுள் மிகத் தொன்மையானவர்கள் வங்க நாட்டைச் சேர்ந்த ஜெயதேவர் (12-ம் நூற்றுண்டு), மகாராஷ்டி ரத்தைச் சேர்ந்த நாமதேவர் (13-ம் நூற்றுண்டு), கிழக்கிந்தி யாவைச் சேர்ந்த ராமாநந்தர் (14ம் நூற்றுண்டு,) முதலியோர். கபீர் (15ம் நூற்றுண்டு) அவர்களின் பாடல்களே அதிகமாகக் காணப்படுகின்றன. சீக்கிய குருக்களைத் தவிர கிரந்தத்தில் காணப் படும் பக்தர்களின் தொகை பதினாறாகும்.

குரு கிரந்த ஸாஹேபில் காணப்படும் ஜெயதேவரின் பாடல் களுள் ஒன்று குஜரி ராகத்திலும் மற்றொன்று மாரு ராகத்திலும் உள்ளன. (சீக்கியரின் வரலாற்றில் சிறந்த புலமை பெற்றிருந்த வரும், கல்கத்தா பல்கலைக் கழகத்தில் என்னுடன் தொழில் தோழராகவும் இருந்த காலஞ்சென்ற பேராசிரியர் இந்து பூஷண பானர்ஜியவர்கள் இவ்விரு பாடல்களைப் பற்றிய குறிப்புக்களை எனக்குத் தந்ததை நான் இங்கு நன்றியுடன் நினைவு கூர்கிறேன்). இவ்விரு பாடல்களும் மாக்காலிப் அவர்களால் ஆங்கிலத்தில் மொழிப் பெயர்க்கப்பட்டுள்ள (அவருடைய நூலில் பக்கங்கள் 15 - 17) மூலம் கீழ்வருமாறு :

(i) ஸ்ரீ ஜயதேவ ஜியூ கா பதா (ராகம் குஜரி)

பரமாதி புருக மனோபிமாம் ஸதி ஆதி பாவரதம் |
பரமாத்புதம் பரக்ருதிபரம் ஜதி சிந்தி ஸரபகம் || 1

ரஹெள

கேவல ராமநாம மனோரமம் பதி அம்ருத தடமையம் |
ந தனோதி ஜஸத் மரணேந ஜநம ஜராதி மரண பயம் ||
இச்சஸி ஜமாதி பராபவம் ஜஸ ஸ்வஸதி ஸுக்ருதி க்ருதம் |
பவபூத பாவ ஸமப்யியம் பரமம் பரஸங்நமிதம் || 2

லோபாதி த்ரிசடி பரகருஹம் ஜதி பிதி ஆசணம் |
தஜி ஸகல துஹக்ருத துரமதி பஜு சக்ரதர சரணம் || 3

ஹரி பக்த நிஜ நிஹ கேவலா ரிட கரமநா வசஸா |
ஜோகேந கிம் ஜகேந கிம் தானேந கிம் தபஸா || 4

கோபிந்த கோபிந்தேதி ஜபி தர ஸகல ஸித்திபதம் |
ஜைதேவ ஜயு தஸ ஸ்புடம் பவபூத ஸரபகதம் || 5

மேற்கூறிய பாடல் ஈ. ட்ரம்ப் என்பவரால் ம்யூநிச்சில் 1879ல் வெளியிடப்பட்ட "டீ ஆல்டெஸ்டன் ஹிந்தூயீ கெடிக்டே" என்ற நூலில் (பக்கங்கள் 8—16) "ஸிட்ஸுங் ப்ரிக்டேடேர் பிலஸாபிக் பிலாலாஜிஷ்கேன் உண்ட் ஹிஸ்டாரிஸ்சென் க்ளாஸேடேர் கொநிங்லிஷே பெயரிஷ் அகாடமிடேர் விஸ்ஸன் ஷாப்டென்" என்ற கட்டுரையில் மொழி பெயர்க்கப்பட்டு, உரை எழுதப் பெற்றது. பாடல் வடமொழியில் இருந்த போதிலும் அதை பிரதி செய்தவர்கள் கிழக்கிந்தியாவில் வழங்கிய கொச்சையான அபப்பிரம்ச மொழியில் அதை ஒலித்து அவ்விதமே எழுதியும் விட்டனர். அல்லது மூலத்திலேயே அது அபப்பிரம்சத்தில் எழுதப்பட்டு, பின்னர் வங்காளி அல்லது கிழக்கிந்திய ஒலியில் மாற்றப்பட்டு இறுதியில் சீக்கியரின் ஆதிகிரந்தத்தில் குருமுகி லிபியில் வரையப்பட்டிருக்கலாம். இதன் வடமொழி வடிவம் கீழே தரப்படுகிறது.

பரமாதி புருஷம் அநுபமம் ஸத் ஆதி பாவ ரதம் |
பரமாத்புதம் ப்ரக்ருதி பரம்யத் அசிந்த்யம் ஸர்வகதம் ‖ 1

ரஹாவு (பல்லவி)

கேவலம் ராம நாம மநோரமம் வத அம்ருத தத்வ மயம் |

ந துநோதி யத் ஸ்மரணேந ஜந்ம ஜராதி மரண பயம் ‖

இச்சஸி யமாதி பராபவம் யச: ஸ்வஸ்தி ஸுக்ருத
க்ருதம் (= ஸுக்ருதம்) குருத (?) |

பவபூத பாவ ஸமவ்யயம் பரமம் ப்ரஸந்தம் இதம்
(அல்லது மிதம் = மித = மிது அல்லது முது = ம்ருது ?)
(ட்ரம்ப்) ‖ 2 ‖

லோபாதி த்ருஷ்டி பரிக்ரஹம் யத் அவிதி ஆசரணம்
த்யஜ ஸகல துஷ்க்ருதம் துர்மதிம் பஜ சக்ரதர சரணம் ‖ 3 ‖
ஹரிபக்த:நிஜ நிஷ் கேவல(?) ஹ்ருதா கர்மணா வசஸா
யோகேந கிம் யக்ஞேந கிம் தாநேந கிம் (கிம்) தபஸா ‖ 4 ‖
கோவிந்த கோவிந்தேதி ஜப நர ஸகல ஸித்தி பதம்
ஜயதேவ ஆயாத: தஸ்ய ஸ்புடம் பவபூத ஸர்வ கதம் ‖ 5 ‖

(பொழிப்புரை :- அனைத்திற்கும் ஆதி புருஷனும், இணையற்றவனும், ஸத் முதலிய குணங்கள் நிறைந்தவனும் பரம அற்புதங்கள் உள்ளவனும், இயற்கை வடிவினனும் மனத்திற்கு எட்டாதவனும், அனைத்திலும் நிறைந்திருப்பவனும் ஆன ராமனின் மனோ

கரமானதும் அமுத தத்துவ மயமானதுமான பெயரை உரைப்பாயாக. அவனை நினைப்பதால் மறுபிறப்பு, முதுமை, மரணம் முதலிய அச்சங்கள் நீங்கும். நமனை வெல்ல விரும்புவோரும் புகழ், நன்மை, நற்செயல்கள் முதலியவற்றை விரும்புவோரும் அவனை நினையுங்கள் உலோபம் முதலியவை அகற்றப்படும். நல்லொழுக்கத்தைக் கடைப்பிடியுங்கள் தீமைகளை அகற்றுங்கள். சக்ரதாரியாகிய விஷ்ணுவை சரண் அடையுங்கள். ஹரிபக்தன் தன்னுடைய மாசற்ற மனத்தாலும், செயலாலும், பேச்சாலும் அடைக்கலம் புக்கால் யோகம், வேள்வி, கொடை, தவம் முதலியன தேவையில்லை. மானிடனே! கோவிந்த, கோவிந்த என்ற ஜபம்செய். அதுவே சகல சித்திகளையும் அளிக்க வல்லது. இதுவே ஜெயதேவனின் துணிபு).

மேற்கூறிய சுலோகத்தின் பொருளை அறிந்து கொள்வதில் சிரமம் ஏதுமில்லை. பாடல் முழுதும் ஒரே கருத்து நிலவியிருந்த போதிலும், மொழி ஆங்காங்கே முரண்படுகிறது. அபப்பிரம்சம், பழைய வங்காளி ஆகியவற்றின் குறைகளே இதற்குக் காரணம்.

(ii) பாணீ ஜயதேவ ஜியுகீ (மாரு ராகம்)
சந்த சத பேதியா நாத சத பூரியா
சூர சத கோதஸா தத்து கியா
அபல பல தோடியா அசல சல தப்பியா
அகட கடியா தஹ ஆபியு பியா ॥ 1 ॥

மந ஆதி குண ஆதி வகாநியா
தேரீ துபிதா த்ருஷ்டி ஸம்மாரியா—ரஹாவு
அர்த கௌ அரதியா ஸந்திகௌ ஸரதியா
ஸலல கௌ ஸலலி ஸம்மாநி யாயா
பததி ஜய்தேவ ஜய்தேவ கௌ ரம்மியா
ப்ரஹ்ம நிர்பாண லிவ லீந பாயா ॥ 2 ॥

இது 'பாஷா' என்ற மொழி என்று நிச்சயமாகத் தெரிகிறது. அபப்பிரம்சம் அல்ல. இதன்மூலம் பழைய வங்காளியிலோ, பழைய மேற்கத்திய இந்தியிலோ இருந்திருக்கலாம். இதிலும் கிழக்கிந்திய உச்சாரணத்தின் தொனி காணப்படுகிறது, 1879-ல் ட்ரம்ப் எழுதிய கட்டுரையில் இப்பாடல் காணப்படவில்லை. மாகாலிப் சீக்கியரின் மரபை ஒட்டி இதன் மொழிபெயர்ப்பைத் தமது ஆறுவது பாகத்தில் தந்திருக்கிறார் (பக்கங்கள் 16-17.)

அதையும் பிஸன்ஸிங் ஞானியின் "பகத்வாணி" யிலுள்ள பஞ்சாபி மொழி பெயர்ப்பையும் ஆதாரமாகக் கொண்டு நான் கீழே மொழி பெயர்த்திருக்கிறேன்.

(1) (பேதியா) துளைக்கப்பட்டு (ஸத = ஸத்வ : ப்ராண, மூச்சினால் (சந்த—சந்த்ர) சந்திரன் (இட) இடது மூக்கினால் அதாவது - நான் யோக சாத்திரத்தில் கூறப்பட்டுள்ள பிராணாயாமத்தில் பூரகம் என்ற செயலைச் செய்தேன். (பூரியா) காற்றை நிரப்பிக்கொண்டு, (நாத) இரு நாசித்துவாரங்களுக்கும் மூக்கின் மேல் பாகத்திலிருக்கும் ஸுஷும்நா - அதாவது கும்பகம் என்ற மூச்சை நிறுத்தும் செயலைப் புரிந்தேன். (தத்துகியா) பின்னர் மூச்சைவிட்டு (ஸுர = பிங்கள) வலது மூக்கின் வழியாக ரேசகம் என்பதைச் செய்தேன். (கோடஸ—ஷோடச) பதினாறுமுறை ஓங்காரம் என்னும் பிரணவத்தை உச்சரித்துக்கொண்டு பிராணாயாமம் செய்தேன்.

(அபல) வன்மையில்லாத (தோடியா) உடைந்த அதாவது உடல் வலிமை உடைந்த பின்னர் (அசல) நகர முடியாத நிலைமையில் (சல) மனம் (தப்பியா) நிலைத்தது (அகட) நில்லாத (கடியா) மனம் நிலைக்கச் செய்யப்பட்டது. (தஹா) பிறகு (ஆபியு = அம்ருத) (அம்ருத — அம்ப்ரித — அம்பியா — அம்பியு—அப்பியு— ஆபியு) அமுதம் (பியா) என்னால் பருகப்பட்டது.

மனத்திற்கு மூல காரணமானவனும், சத்துவம், ரஜஸ், தமஸ் முக்குணங்களுக்குத் தலைவனுமாகிய அவனை வருணித்தேன். நானும் நீயும் வேறு என்ற பாவனை (ஸம்மாநியா) ஒழிந்தது. பஞ்சாபி மொழிபெயர்ப்பு — ஸமா ஜாந்திஹை = புகுந்தது. (அர்தா—ஆராத்ய) புகழத்தக்கவர்கள் (ஆராதியா = ஆராதித) வணங்கப்பட்டனர். (ஸர்தி—ஸ்ரத்தின்) நம்பத்தக்கவர்கள் (ஸரதியா—ச்ராத்தித) நம்பப்பட்டனர். (ஸலல = ஸலில) நீர் (ஸம்மானியா) நீருடன் கலந்துவிட்டது.

ஜெயதேவன் (பததி = வததி) சொல்கின்றேன். (ரம்மியா) மகிழ்ச்சியடைந்தேன். (ஜய—தேவ) வெற்றி தரும் தேவனிடம் (லிவா) கிடைத்தது. (நிர்பாண = நிர்வாண) பிரமத்துடன் ஒன்று பட்டு (பாயா) (லீநா) ஐக்கியம் கிடைத்தது).

கி. பி. முதலாயிரம் ஆண்டுகள் வரையில் நிலவி வந்த யோகத்தை அடிப்படையாகக் கொண்ட மதப்பாடல்களின் மரபில் மேற்கண்ட ஜெயதேவரின் 'வாணி' அமைந்துள்ளது. கி. பி. பத்தாம்

நூற்றுண்டிற்கு முன்னும் பின்னும் இத்தகைய பாடல்கள் மிகுதியாக எழுதப்பெற்றன. புத்த மதத்தைச் சேர்ந்த மஹாயாநா ஸஹஜயா (ஸஹஜயாந) மரபில் பழைய வங்காளி மொழியில் எழுதப்பட்ட சர்ய பதங்களின் நடை இவற்றில் காணப்படுகிறது. இது கீத கோவிந்தத்தின் ஆசிரியரான ஜெயதேவருக்கு சமகாலமானது. கோரக்நாதர் (12.13ம் நூற்றுண்டுகள்) முதலிய சைவ சமயக் குரவர்கள், கபீர் முதலிய பக்த கவிகள் ஆகியோரும் இத்தகைய யோகத்தையே கையாண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குரு கிரந்தத்தில் ஜெயதேவரின் பெயரால் காணப்படும் இரண்டாவது பாடலும் கீதகோவிந்தத்தின் ஆசிரியரான ஜெய தேவருடைய பாடலாக இருக்கலாம். இதன் மூலம் அவர் வடமொழியில் மட்டுமன்றி, பாஷா, அபப்பிரம்சம் ஆகிய மொழிகளிலும் சிறந்த கவிஞர் என்று கருதப்படுகிறுர்.

X. ஜெயதேவரின் கீத கோவிந்தத்திலும், இடைக்கால வங்காள இலக்கியத்திலும் 'மங்களம்', 'பதாவலி' முதலிய பாடல்கள்: வங்க நாட்டின் ஆதி கவி ஜெயதேவர்.

ஆரிய இந்தியாவின் மொழி இலக்கியத்தை மிக ஊக்குவித்தது டன், ஜெயதேவர் வங்காளி இலக்கியத்தின் ஆதிப்படைப்பாளர் களுள் ஒருவராகவும் கருதப்படத் தகுந்தவராவர். புத்தமதத்தைச் சேர்ந்த 'சர்ய' கவிகளுக்கு ஏறக்குறைய சம காலத்தவரான ஜெய தேவர் தமது பாடல்களை நூலிலேயே 'கீதங்கள்' என்று குறிப்பிட்ட போதிலும் அவை பதங்கள் என்றும் வழங்குகின்றன. ஆதி கிரந்தத் திலுள்ள அவரது பாடல் 'பதம்' என்றே கூறப்படுகிறது. 'மதுர கோமல காந்த பதாவலீம் ச்ருணு ததா ஜயதேவ ஸரஸ்வதீம்' என்ற அவருடைய அடியிலிருந்தும் (கீத கோவிந்தம் 1.3) அவர் பதாவலி என்ற சொல்லை வழங்கியிருப்பதைக் காண்கிறோம். கி. பி. 950 முதல் 1200 வரை இயற்றப்பட்ட சர்ய பதங்களைப்போல் ஜெய தேவரின் பதங்களும் வங்காள இலக்கியத்தின் மூலமாக அமைகின் றன. மத்திய காலத்து வங்காள இலக்கியத்தை இரு வகைகளாகப் பிரிக்கலாம். (அ) ஒரு கடவுளின் கற்பனை வரலாற்றையோ, வீர னின் வரலாற்றையோ புகழ்ந்து பாடும் நீண்ட காவியங்கள். இவற் றிற்கு 'மங்கள' என்று பெயர். இவை புராணக் கடவுளரையும், தெய்வங்களாகக் கருதப்பட்ட மாந்தரையும் குறித்தவை. உதாரண மாக—சண்டி, ஸ்ரீகிருஷ்ணர், ராமன், வங்க நாட்டு வீரர்களான தர்ம டாகுர், தர்ம பாலர், லாவுஸேன மன்னர், பாம்புகளின் தேவதையான மாநஸா, பிஹுலா (விபுலா) என்பவள் தனது கணவன் லகீந்திரர் (லக்ஷ்மீந்தரர்) மீது கொண்டிருந்த அழியாக் காதல், வியாபாரி தநபதி, அவருடைய மனைவியர் லஹநா (லோபநா) குல்லநா (க்ஷுர்ரநா) மகள் ஸ்ரீமந்த, இவர்களுடைய வீரச் செயல் கள், வேட்டைக்காரன் காலகேது அவன் மனைவி புல்லரா முதலியன (ஆ) இசைப்பாடல்கள், சில காதலைப்பற்றியும் சில பக்தி சம்பந்த மாகவும் உள்ள பதங்கள் (இடைக்கால வங்க இலக்கியத்தில் பதங் கள் முக்கியமான பாகத்தைத் தாங்கி நிற்கின்றன.) பௌத்தர் களின் சர்ய பதங்களைவிட கீத கோவிந்தத்தில் ஜெயதேவர் அமைத் துள்ள பதாவலியே மத்திய கால வங்க இலக்கியப் பதங்களுள் தலை சிறந்தவை. மத்திய வங்காளியில் கவிதை 'மங்களம்' என்றும் 'பதம்' என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. பாரசீக உருதுக் கவிதையில் போர்க்கவிதைகள் 'ரஸ்ம்' என்றும், காதல் பாடல்களும் இசைப்

பாடல்களும் 'பஸ்ம்' என்றும் பிரிக்கப்பட்டிருப்பதை ஒக்கும். சங்க காலத் தமிழ் இலக்கியம் 'புறம்' என்றும் 'அகம்' என்றும் பிரிக்கப் பட்டிருப்பதிலும் இதே தத்துவம் அடங்கியுள்ளது.

வைணவ சமயத் தொடர்பாக இடைக்கால வங்க மொழியிலும் பெரும் அளவில் இக்கால வங்க இலக்கியத்திலும் இயற்றப்பட்டுள்ள இசைக் கவிதைகள் பெரும்பாலும் கீத கோவிந்தப் பாடல்களையே தழுவி எழுதப் பெற்றவை என்று கூறுவது மிகையாகாது. ஆகவே இராதாகிருஷ்ணர்களின் தெய்வீகக் காதலை வருணித்து ஜெயதேவ ரால் இயற்றப்பட்ட காவியம் தூய வட மொழியில் இருந்தபோதி லும், வங்க மக்களிடையே தோன்றிய மங்கள காவியங்களுள் மிகப் பழமையானது என்றே கூறவேண்டும். ஜெயதேவருடைய இந்த ஒரு நூலில் இரு வகை இலக்கிய வடிவங்கள் அடங்கியுள்ளன. இருபத்து நான்கு பதங்களைக் கொண்ட பதாவலியும் அவரே I 25, இரண்டாம் பாடலில் கூறியுள்ளபடி ஒரு மங்கள காவியமும் இதில் அடங்கியுள்ளன. "ஸ்ரீ ஜயதேவ கவேரிதம் குருதே முதல் மங்களம் உஜ்ஜ்வல கீதி" (அதாவது, ஸ்ரீ ஜெயதேவரால் இயற்றப்பட்டதும், காதல் ரசத்தைக் கொண்டதுமான இந்த மங்கள காவியம் அனைவருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்குக; ஆகவே தாம் வாழ்ந்திருந்த பகுதியில் ஜெயதேவர் நீண்ட காவியம் இசைப்பாடல் ஆகிய இரு துறைகளிலும் புகழ் பெற்ற கவியாக விளங்கினர் என்பதை நாம் எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது. சீக்கியரின் குரு கிரந்தத்தில் ஜெயதேவரின் பெயரில் காணப்படும் இரண்டு பாடல்கள் அபப்பிரம்சம் அல்லது பழைய வங்க மொழியில் இருப்பினும் அவை அவருடைய பாடல்களா என்ற ஓர் ஐயப்பாடும் இருந்து வருகிறது. கீதகோவிந்தத்தின் பாடல்களும் ஆதியில் மேற்கூறிய மொழிகளில் இருந்தனவா என்பதும் உறுதியாகக் கூற இயலாத ஒன்ருகும். அபப்பிரம்ச மொழியில் அவருடையன என்றும் உறுதியாகக் கூறக் கூடிய பாடல்கள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லையெனினும், ஜெயதேவர் வங்க நாட்டின் ஆதி கவியென்றும், முகம்மதியரின் ஆதிக்கத்திற்கு முந்தைய காலத்தின் கடைசியான புராதன வடமொழிக் கவியென்றும் கூறுவதற்கு முற்றிலும் நியாயம் உள்ளது.

XI. ஜெயதேவர் ஒரு பக்த கவி என்ற சிறப்பு: பக்த மாலா என்னும் நூலில் அவருக்கு அஞ்சலி.

இந்திய நாட்டின் எல்லா பாகங்களிலும் வடமொழி, பாஷா இலக்கியம் ஆகிய இரு துறைகளிலும் அவருக்குள்ள செல்வாக்கையும், இடைக் காலத்து வைணவ இலக்கியத்தில் அவர் பெற்றிருக்கும் உயர்ந்த நிலையையும் நாம் கருதினுல், பதினாறும் நூற்றுண்டில் நாபாஜி தாசர் என்பவரால் எழுதப்பட்ட பக்த மாலா என்ற நூலில் ஜெயதேவருக்குச் சூட்டப்பட்டிருக்கும் புகழ் மாலை முற்றிலும் பொருத்தமானது என்பது விளங்கும்.

“ ஜயதேவ கவி ந்ருப சக்கவை
கண்ட மண்டலேச்வர ஆதி கவி ||
ப்ரசுர பயோ திஹு லோக கீத கோவிந்த உஜாகர
கோக காப்ய நவ ரஸ ஸரஸ ச்ருங்கார காவு ஆகர ||
அஷ்டபதி அப்யாஸ கரயி திஹி மத்தி பர்ஹாவை
ராதா ரமண ப்ரஸந்ந ஸுநத ஹான் நிச்சய் ஆவை ||
ஸந்த ஸரோருஹ கண்ட கௌ பதுமாவதி ஸுக ஜநக ரவி
ஜயதேவ கவி ந்ருப சக்கவை கண்ட மண்டலேச்வர ஆதி கவி ||

(கவிகளுள் ஜெயதேவரே சக்கரவர்த்தி. மற்ற கவிகள் சிற்றரசர்கள் போன்றவரே. அவருடைய கீத கோவிந்தம் மூவுலகிலும் ஒளி வீசுகிறது. கூடல், கவிதை, நவரசங்கள், காதல்கலை ஆகிய வற்றிற்குக் கருவூலமாகத் திகழ்கிறது. அஷ்டபதிகளை ஓதுபவனின் புத்தி வளர்கிறது. இராதையின் மணாளனுகிய கண்ணன் அவற்றைக் கேட்டு உள்ளம் மலர்ந்து அங்கு தோன்றுகின்றுன். தாமரையில் வதியும் பத்மாவதியின் இதயத்தை மலரச் செய்யும் கதிரவனே ஜெயதேவர். சாதுக்களான தாமரை மலர்களுக்கும் அவரே சூரியன். கவிகளுள் ஜெயதேவரே பேரரசர். மற்ற கவிகள் சிற்றரசர்கள்)

XII. கீத கோவிந்தம்—அதன் 12 சருக்கங்களும் 24 பாடல்களும் 97 சுலோகங்களும்: காவியத்தின் பெயர்.

கீத கோவிந்தம் வடமொழியில் இயற்றப்பட்ட ஒரு சிறு காவியமே எனினும் அதன் தனிச் சிறப்பு மூலம் அதைப்போன்ற மற்ற காவியங்களிலிருந்து வேறுபடுகிறது. வருணனை, விவரணம் ஆகியவை அடங்கிய ஒரு "கண்ட காவியம்" அல்லது 'சிறு காவியம்' என்று அதைக் கூறுவது பொருந்தும். அதன் அமைப்பு வேறு விதமாக இருப்பினும், சொல்லும் பொருளை நோக்கினுல், அது காளிதாசரின் 'ருது சம்ஹாரம்'. 'மேக தூதம்' ஆகியவற்றையும் கடகர்ப்பரம்' அமரு சதகம், பர்த்ருஹரியின் ச்ருங்கார சதகம், பில்ஹணரின் சௌர பஞ்சாசிகா முதலிய சில நூல்களையும் ஒத்திருப்பதைக் காண்கிறோம். அதன் தனிச் சிறப்பு என்னவெனில் அது காதல் நிகழ்ச்சிகளையும், நெருங்கிய கூடல் காட்சிகளையும், உரையாடல், நாடக தத்துவம் ஆகியவற்றையும் ஒருங்கே கொண்ட ஒரு பனுவல் என்பதேயாகும். அதில் வருணனைகள் சாதாரண வடமொழிச் செய்யுளிலும், பாடல்கள் அபப் பிரம்ச மொழிக்கே உரியதான சில எதுகை மோனை அமைப்புடனும் சேர்ந்து அமைந்துள்ளன.

வருணனைப் பகுதிகளிலும், 24 பாடல்களினூடேயும் பன்னிரண்டு சருக்கங்களில் 97 சுலோகங்கள் பரவிக் கிடக்கின்றன. இச்சருக்கங்களில் குறிப்பிடப்பெறும் பொருள் ஒன்றுதான். தொடக்கத்தில் இறைவணக்கமாக ஒரு செய்யுளையும் பின்னர் விஷ்ணுவின் பத்து அவதாரங்களை வருணிக்கும் இரண்டு துதிகளையும் நீக்கிவிட்டால் நூல் உடனே தொடங்குகிறது.

முதற் சருக்கத்தில் நாடக அமைப்பு மிகக் குறைவு. இசைப் பாடல்களே மிக அதிகம். விருந்தாவனத்தில் நிகழ்ந்த இராதா—கிருஷ்ணரின் காதற் கதையின் ஒரு நிகழ்ச்சியே சாராம்சம். விருந்தாவனத்தில் ஆயர் மகளிரான கோபியருடன் கண்ணன் காதல் விளையாட்டுக்களில் ஈடுபடுகிறுன். வசந்த காலத்திற்குரிய சிருங்கார ரசமே உருவெடுத்ததுபோல விளங்கியவன் கண்ணன். வசந்த காலத்தில் இயற்கை அன்னை அணிகின்ற அதிசய வடிவத்தை ஜெய தேவர் தமக்கே உரிய இனிய நடையில் வருணித்துள்ளார், 'மகிழ்ச்சி நிரம்பிய தாமோதரன்' என்னும் பொருள்கொண்ட 'ஸாமோத தாமோதரன்' என்ற முதல் சருக்கம் முடிந்த பின்னர், 'அக்லேச கேசவம்' அல்லது 'துயரமற்ற கேசவன்' என்ற சருக்கம் தொடங்குகிறது. இச்சருக்கத்தில் இரு பாடல்சள் உள்ளன. மற்ற

கோபியருடன் கண்ணன் காதல் விளையாட்டுக்களில் ஈடுபட்டிருப்பதைக்கண்டு பொறுமையும் துயரமும் உற்ற இராதை தன் உயிர்த் தோழி ஒருத்தியுடன் அது குறித்து வருந்துகின்றாள். இவ்வழகிய பாடல்களில் இராதை தனக்குப் போட்டியாக வந்துள்ள கோபியருடன் கண்ணன் புரிந்த லீலைகளை வருணிப்பதுடன், தானும் ஆவலுடன் கழித்த இன்பம் நிறைந்த நாட்களையும் நினைவு கூர்கிறாள். மூன்றும்சருக்கமான 'முக்த மதுசூதனன்' அல்லது 'மோகம்கொண்ட மதுசூதனன்' என்பதில் இராதையைப் புறக்கணித்ததைப்பற்றிக் கண்ணனே. கழிவிரக்கங் கொண்டு அவள் தன்மீது கோபம் கொண்டது நியாயமே என்று எண்ணி வருந்துகின்றான். தன் மனத்திற்குள்ளேயே அவளுடைய மன்னிப்பை வேண்டுகிறான். தானும் அவளும் நெஞ்சங்கலந்து புரிந்த காதல் நிகழ்ச்சிகளை நினைவுபடுத்திக் கொள்கிறான்.

''ஸ்நிக்த மதுசூதனன்'' அல்லது 'நிம்மதியடைந்த கிருஷ்ணன்' என்ற நான்காம் சருக்கத்தில் இராதையின் அந்தரங்கத் தோழி கண்ணனிடம் வந்து இராதை பிரிவாற்றாமையால் மிகவும் வருந்துவதையும், அந்த அவலநிலையில் அவள் துயர் மிகுந்து அவனுடன் கூடுவதையே எண்ணி யெண்ணி உருகுவதையும் விவரிக்கிறாள். இச் சருக்கத்தில் ராதையின் நிலையை வருணிக்கும் இரண்டு பாடல்கள் மிக அழகானவை.

ஐந்தாவது சருக்கமாகிய ''ஸாகாங்க்ஷ புண்டரீகாக்ஷன்'' அல்லது ''விருப்பம் மிகுந்த தாமரைக் கண்ணன்'' என்பதில் இராதை விடுத்த செய்தியின் பயனாகக் கண்ணனுக்கு ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சி விவரிக்கப்படுகிறது. தான் ஒரு கொடி வீட்டில் காத்திருப்பதாகவும், அங்கு இராதையை அழைத்து வருமாறும் கண்ணன் தோழியைக் கேட்டுக் கொள்கிறான். இராதையைச் சந்திக்க முடியாமல் கண்ணன் வருந்தும் நிலையை வருணிக்கும் இரண்டு பாடல்கள் வடமொழியிலுள்ள இசைப் பாடல்களுள் மிகச் சிறந்தவை. இராதையின் தோழி அவளிடம் சென்று தக்க காரணங்கள் கூறி, கண்ணனைச் சென்று அடையுமாறு தூண்டும் சுலோகங்களும் மிக அழகியவை.

'த்ருஷ்ட வைகுண்டன்' அல்லது 'நாணயம் இல்லாத கிருஷ்ணன்' என்ற தலைப்புக் கொண்ட ஆறும் சருக்கத்தில் பன்னிரண்டே சுலோகங்களும் ஓர் அழகிய பாடலும் உள்ளன. கண்ணனின் பிரிவாற்றாமையால் மிகவும் நொந்த ராதை பலவீனமடைந்து தனது நாயகனைக் காண வரமுடியாத நிலையை இது வருணிக்கிறது. அவளுடைய தோழி கண்ணனிடம் சென்று

இராதை வர வியலாத நிலையில் இருப்பதை விளக்கி அவனுடைய வருகைக்காக இராதை காத்திருப்பதைத் தெரிவிக்கிருள்.

ஏழாவது சருக்கம் மிக நீண்டது; காவியத்திலேயே நீண்ட சருக்கங்களில் இது இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. இதற்கு 'நாகர நாராயணன்' அல்லது 'விடபுருஷனுகிய கிருஷ்ணன்' என்று பெயர். இதில் நான்கு பாடல்கள் உள்ளன. நிலவு தோன்றும் பொழுது வருவதாக வாக்களித்த கண்ணன் வாராததால் அதன் விளைவாக இராதை நடுக்காட்டில் அவனை நினைத்து ஏங்கியதையும் இது வருணிக்கிறது. முதல் பாடலை ராதையின் புலம்பல் என்றே கூறவேண்டும். மற்ருெரு கோபியுடன் கண்ணன் உல்லாசமாகப் பொழுது போக்குகின்ருன் என்று அவள் சந்தேகப்படுகிருள். தூது அனுப்பிய தோழி தனியே திரும்பி வருவதைக் கண்டவுடன் இந்த ஐயம் உறுதிப்படுகிறது. இதற்குப் பின்வரும் இரண்டு அழகிய இசைப் பாடல்களில் இராதை தனக்குப் போட்டியாக முளைத்த கோபியுடன் கிருஷ்ணன் கொஞ்சிக் குலவுவதை நேரில் கண்டது போல் வருணிக்கிருள். அந்த மனநிலையில் அவள் தென்றலையும் மன்மதனையும், யமுனை ஆற்றையும் விளித்துத் தன்னை வருத்தாமல் இருக்குமாறு வேண்டுகிருள்.

ஒரே பாடலைக் கொண்ட எட்டாவது சருக்கம் மிகச் சிறியது. இதற்கு "விலக்ஷ லக்ஷ்மீபதி" அல்லது "திகைப்படைந்த திருமகள் கேள்வன்" என்று பெயர். இதில் மற்ருெரு நிகழ்ச்சி குறிப்பிடப் பெறுகிறது. பொழுது புலர்ந்து விட்டது. கண்ணன் பிரிவால் இரவு முழுவதும் உறக்கமின்றித் தவித்த இராதை அவனைச் சந்திக்க ஆவலாக இருக்கின்ருள். ஆயினும் கண்ணன் அவளிடம் சென்று அடிபணிந்த பொழுது அவள் வெகுண்டு, அவனைக் கடிந்து இரவு உறவாடிய அதே மகளிரிடம் திரும்பிச் செல்லுமாறு கூறுகிருள்.

'முக்த முகுந்த' அல்லது 'மோகமடைந்த கண்ணன்' என்பது ஒன்பதாவது சருக்கம். இதில் பதிெனுரு சுலோகங்களும் ஒரு பாடலும் உள்ளன. கண்ணன் திரும்பிச் சென்ற பிறகும் அவனையே நினைத்துக் கொண்டிருந்த இராதையின் மனம் இளகியது. அவன் திரும்பி வரும் போது சினத்தை விடுத்து அவனை அன்புடன் வரவேற்குமாறு தோழி உபதேசம் செய்கிருள்.

'முக்த மாதவ' என்ற பத்தாவது சருக்கமும் மிகச் சிறியதே. ஆனுல் இதில் வரும் ஒரே பாடல் பிரசித்தி பெற்றது. மாலைக் காலம் நெருங்க நெருங்க இராதையின் சினம் ஒருவாறு தணிந்து கொண்டே வந்தது. கண்ணன், மீண்டும் வந்த பொழுது அவளுக்குச் சற்று நாணம் தோன்ற, அவள் பாங்கியரை நோக்கினுள். அதுசமயம்

கண்ணன் அவளுடைய வருத்தத்தைப் போக்கவல்ல சொற்களைக் கூறி, அவளை நலம் பாராட்டி, அவர்கள் இருவரும் இன்பமாகப் போக்கிய நாட்களை நினைவுபடுத்தினன். இச்சருக்கத்தில் வரும் பாடலின் ஒருபகுதியில் கண்ணன் இராதையை நோக்கித் தன்பால் அன்பு செலுத்துமாறும் அவளுடைய அடிகளில் செம்பஞ்சுக் குழம்பு ஊட்டத் தனக்கு அனுமதி தரவேண்டும் என்றும் கெஞ்சுகின்றான். அவள்மேல்தான் கொண்டிருந்த காதல், நஞ்சுபோல் தலைக்கேறி விட்டதால், அதை இறக்குவதற்கு அவளுடைய அடிகளைத் தன் தலைக்கு அணியாக வைத்துக் கொள்ள இசையுமாறும் விண்ணப்பம் செய்கின்றான். (ஸ்மர கரல கண்டனம், மம சிரஸி மண்டனம்; தேஹி பத பல்லவம் உதாரம்).

இப்பகுதியைப் பற்றிப் பொன்னே போன்ற வைணவ மரபில் ஒரு கதை வழங்குகிறது. மேற்கூறிய அடியை ஜெயதேவர் எழுதுமுன அவர் நெடுநேரம் ஆலோசனை செய்து, பரம்பொருளும், உலகிற்கே நாயகனுமான திருமாலின் அவதாரமாகிய கண்ணபிரான் ராதையிடம் இவ்வாறு பேசி அவள் அடியைத் தன் முடிமீது வைக்குமாறு கூறுவது பொருந்துமா என்று தயங்கினாராம். இது ஒரு மகத்தான தெய்வநிந்தனை ஆகுமென்றும் திருமாலின் பெருமைக்கே இழுக்கை விளைவிக்குமென்றும் கருதி நீண்ட யோசனையில் ஆழ்ந்து விட்டாராம். ஆயினும் இக்கருத்தைத் தமது காவியத்தில் அமைப்பது பற்றி அவரால் எந்த ஒரு முடிவுக்கும் வரவியலவில்லை. காலம் கடந்துவிடவே, அவருடைய மனைவி பத்மாவதி அவரை நதிக்குச் சென்று நீராடி, உணவருந்தி, களைப்பாறிய பின்னர் காவியத்தைத் தொடரலாம் என்று கூறினாராம். வாழ்க்கைத் துணைவியிடம் அன்பும் பரிவும் கொண்ட ஜெயதேவர் அவளுடைய உணவு வேலையைத் தாழ்த்தக் கூடாதென எண்ணி, உடன் எழுந்து, அருகிலிருந்த கங்கையாற்றில் நீராடி வரச் சென்றார். ஆயினும் சில நிமிடங்களுக்குள்ளேயே அவர் திருமபி வந்ததைக் கண்ட பத்மாவதி அவருக்கு அன்னம் பரிமாறவும், அவரும் உணவருந்தி, அறைக்குள் சென்று கதவை மூடிக் கொண்டாராம். அவர் உணவருந்திய இலையிலேயே தாமும் உணவு அருந்தத் தொடங்கிய பத்மாவதி ஜெயதேவர் திரும்பவும் வெளியிலிருந்து நீராடிய கோலத்தோடு வருவதைக் கண்டவுடன் வியப்படைந்தார். ஆனல் அவர்தான் உண்மையான ஜெயதேவர். தம் மனைவி தமக்கு முன் உண வருந்துவதைக் கண்டு அவரும் வியப்படையவே இருவருக்கும் திகைப்பு ஏற்பட்டது. இதற்கு முன் வந்த ஜெயதேவர் களைப்பாறிக் கொண்டிருப்பதாகப் பத்மாவதி கூறிய அறைக்குள் இருவருமே சென்று பார்த்தபொழுது அங்கு ஒருவரும் இல்லை. உடனே ஜெயதேவர் தம் கைப்பிரதியைப் பார்க்கவும், 17-வது அஷ்டபதியில்

தாம் எழுதத் தயங்கிய வரியை யாரோ எழுதியிருப்பதைக் கண்டார். கணவனும் மனைவியும் பேச முடியாத ஊமைகளாயினர் இருவருமே ஆழ்ந்த கிருஷ்ண பக்தர்கள் ஆதலால் இந்த அற்புதத்தைக் கண்டு வியப்பில் மூழ்கினர். கிருஷ்ண பகவானே ஜெயதேவருடைய வடிவில் வந்து, தாம் இராதையிடம் கொண்டிருந்த தீராத காதலில் அவளுடைய தாமரை போன்ற பாதத்தைத் தமது முடியின்மீது வைக்குமாறு கேட்பதில் தவறு ஒன்றும் இல்லை என்று கண்ணனே கருதியதை இருவரும் உணர்ந்தனர். தெய்வீகக் காதலின் ஒரு நிலையை இந்நிகழ்ச்சி மூலம் பகவான் தம் அடியார்களுக்கு எடுத்துக் கூறினர். ஜெயதேவரும் அவருடைய மனைவியாரும் இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்து மெய்ம்மறந்து போயினர். ஜெயதேவர் தம் மனைவி உணவருந்திக் கொண்டிருந்த இலையிலேயே உண்ணத் தொடங்கினர். அவளுக்கு முன்னர் உணவு அருந்தியது கண்ணபிரானேயாதலால் அது அவருக்கு புனிதமான பிரசாதமாகக் காட்சியளித்தது இராதா—கிருஷ்ணரிடம் பக்தி பூண்டொழுகும் அடியார்கள் கீத கோவிந்தத்தை ஒரு தெய்வீகக காவியமாகக் கருதுவதுடன் மேற்கூறிய கதையை மிகவும் ரசித்து மகிழ்கின்றனர். தெய்வ நம்பிக்கை என்ற தத்துவத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இக்கதையில் ஓர் அழகு மிளிரத்தான் செய்கிறது.

'ஸாநந்த கோவிந்த' அல்லது 'மகிழ்ச்சி மிக்க கண்ணன்' என்ற அடுத்த சருக்கத்தில் 12 சுலோகங்களும் மூன்று பாடல்களும் உள்ளன. மான் ஒத்த விழிகளையுடைய இராதையை அமைதி கொள்ளச் செய்வதில் கண்ணன் வெல்கிறான். கண்ணனிடம் அன்பு செலுத்தி அவனுக்கு உவகை உண்டாகுமாறு செய்ய இராதையை அவள் தோழியரில் ஒருத்தி வற்புறுத்துகிறாள். மற்றொருத்தி இதே கருத்தை இரண்டாவது பாடலில் உபதேசிக்கிறாள். பின்னர் இராதையும் கண்ணனும் தனியாகக் கொடி வீட்டுக்குச் செல்கின்றனர். இளம் காதலர்களாகிய அவ்விருவரும் அளவளாவியதைப் பற்றி கவிச்சுவை மிக்க வருணனைகள் இங்கு வருகின்றன. தோழிகள் சென்றவுடன், கொடிப்பந்தல் வீடே இராதைக்கும் கண்ணனுக்கும் மணவறையாக அமைகிறது. இன்பமயமான இந்த முடிவை எதிர்பார்த்து அவ்விருவரும் புன்னகை பூக்கின்றனர். அழகிய வடமொழி சுலோகங்களால் இக்காட்சி வருணிக்கப்படுகிறது.

கடைசிச் சருக்கம் 13 செய்யுட்களையும் இரு பாடல்களையும் கொண்டது. காவியத்தின் இனிய முடிவு எழில் கொண்ட சுலோகங்களால் விவரிக்கப்பட்ட போதிலும் சிற்றின்ப வருணனைகளும் காதல் விளையாட்டுக்களும் சற்று மிகையாகவே காணப்படுகின்றன. முதல்

பாட்டு கிருஷ்ணனால் பாடப்படுகிறது. பின்னர் சில அந்தரங்க நிகழ்ச்சிகள் விவரிக்கப்படுகின்றன. இவற்றின் உண்மையான உச்ச நிலையை இதில் காண்கிறோம். எனினும் வைணவ அடியார்களுக்கு இத்தகைய கவிதை மிகவும் பழகிப் போயிருப்பதால் இதற்கு வேதாந்த பரமான பொருள்களையே அவர்கள் கூறுகின்றனர். இதில் எதையும் அவர்கள் விரசமாகக் கருதுவதில்லை. மற்றவர்களுக்கு இதில் திரும்பத் திரும்ப வரும் உடல் உறவு வருணனைகள் சிறிது அலுப்பை உண்டாக்கும் என்றே கூறவேண்டியிருக்கிறது. இதன் தலைப்பு "ஸுப்ரீத பீதாம்பரன்" அல்லது "திருப்தி யடைந்த கிருஷ்ணன்" என்பது.

இந்த பன்னிரு சருக்கங்களின் வடமொழித் தலைப்புக்களில் கிருஷ்ணனின் பலவிதப் பெயர்கள் வருவதிலிருந்து 'கீத கோவிந்தம்' என்ற பெயர் அமைந்த காரணம் நமக்குக் கிடைக்கிறது என்று பேராசிரியர் ஸுகுமாரஸேன் கூறுவதை நான் ஒப்புக் கொள்கிறேன். காவியத்தின் பெயரில் கண்ணனின் மற்றொரு நாமமும் அடங்கியுள்ளது "கீத கோவிந்தம் என்றால் "இதில் பாடப்பெற்ற கிருஷ்ணன்" என்றும், "கிருஷ்ணனின் காதலைப்பற்றிய நூல்" என்றும் பொருள் கொள்ளலாம்.

XIII. கீத கோவிந்தத்தில் வரும் புனிதமில்லாக் காதலும், தெய்வீகக் காதலும்.

வடமொழியின் இனிமையுடன் இணைந்திராத வேறு எந்த மொழியிலும் கீத கோவிந்தத்தின் இணையற்ற கவிதையை மொழி பெயர்க்க முடியாது. அதன் வரிகளை—முக்கியமாகப் பாடல்களின் அடிகளைத்-திரும்பத் திரும்பப் பாடினால் தான் அவற்றின் சுவையை நுகரமுடியும். ஓர் இலக்கிய நூலின் சிறப்பிற்கு அதன் ஓசை நயமே முக்கிய காரணமாக இருப்பது ஒரு குறைபாடுதான்: ஏனெனில் ஓசை நயத்தைவிட அதன் உட்கருத்தே சிறப்பாக அமையவேண்டும். ஆயினும் கீத கோவிந்தத்தின் நூல் நயத்தை ரசிக்க விரும்பு வோர்க்கு அவர்களின் மனப்பான்மை பெரிதும் காரணமாகிறது.

காதல் அல்லது சிருங்காரம், உடல் உறவு அல்லது கூடல், காம விளையாட்டுக்கள் அல்லது பொதுவாக ஆண்—பெண் உறவே கீத கோவிந்தத்தின் கருப்பொருளாக அமைந்துள்ளது. இதற்கு ஓர் இயற்கைப் பின்னணி வருணிக்கப்பட்டுள்ளது. வசந்த காலம். பூத்துக்குலுங்கும் மரங்கள், செடி, கொடிகள், பசுமை நிறைந்த மலைகள், சலசலவென்று ஓடும் நீரோடைகள். மரங்களில் பாடும் புள்ளினங்கள், முரலும் வண்டுகள் ஆகியவை நமது மனக்கண்ணின் முன் காட்சியளிக்கின்றன. ஆயினும் கீத கோவிந்தத்தில் இவை மிகச் சாதாரணமான பழகிப் போன முறையிலேயே வருணிக்கப்படு கின்றன. காளிதாசனின் 'மேக தூத' காவியத்தில் காணப்படுவது போல் இயற்கையின் பல கோணங்களைக் கவியுள்ளம் கொண்டு ஆராயவில்லை. கீத கோவிந்தத்தில் வருணிக்கப் பெறும் காதல், காமம் அல்லது உடல் உறவும், சிருங்காரம் அல்லது கூடலும் அடங்கிய புனிதமில்லாக் காதலேயாகும். வேதாந்தக் கருத்தை அடிப்படையாகக்கொண்ட பிரேமை அல்லது உடலுறவைக் கடந்த காதலுக்கும், இதயங்களை ஒன்றுபடுத்தும் பிரீதிக்கும்—அதாவது காதலின் புனிதமான அம்சங்கள் கீத கோவிந்தத்தில் காணப்பட வில்லை. இதற்குச் சிற்சில விதி விலக்குகள் உள்ளன. எங்கோ சில இடங்களில்—உதாரணமாக நான்காம் சருக்கத்தில் எட்டாவது பாடல் (ஸா விரஹே தவதீநா, பாவநயா த்வயிலீநா), அதே சருக் கத்தில் ஒன்பதாவது பாடல், ஆறும் சருக்கத்தில் பன்னிரண்டாம் பாடல் (முஹுர் அவலோகித மண்டந லீலா, மதுரிபுர் அஹம் இதி பாவந சீலா), பத்தாவது சருக்சத்தில் 19ம் பாடல் (த்வமஸி மம பூஷணம், த்வமஸி மம ஜீவநம்-தேஹி பத பல்லவம் உதாரம்) ஆகி

யன. ஆயினும் கீத கோவிந்தத்தில் வரும் காதலும் காதல் காட்சிகளும் உடலுறவு பற்றியதாகவே இருப்பதால் அவை மாறுதலே இல்லாமல், திகட்டுமளவில் இருப்பதுடன் சிற்சில இடங்களில் கவிதைச் சுவையையும் அழகுணர்வையும் கெடுத்தும் விடுகின்றன. கி. பி. 1894-ல் 'ஸாதநா' என்ற சஞ்சிகையில் ரவீந்திரநாத தாகூரின் மருமானுகிய பாலேந்திரநாத தாகூர் ஜெயதேவரின் கவிதையைப் பற்றி ஆழ ஆராய்ந்து அனுதாபத்துடன் ஒரு திறனாய்வுக் கட்டுரை எழுதினர். 'வேதத்தில் காணப்பெறும் ஊர்வசி-புருரவஸ் காதல் கதையில் வரும் எளிய வருணனை ஒரு தூய ஒளியைத் தோற்றுவித்து நமது மனத்தில் ஏற்படக்கூடிய மாசுகளை அண்டவிடாமல் செய்கிறது. கீத கோவிந்தத்தின் பாவனை வேறுவிதமானது, பாலேந்திர நாத தாகூர் இக்கருத்தை ஒரே வாக்கியத்தில் சுருங்கச் சொல்லி விளக்கியிருக்கிறார். "கீத கோவிந்தத்தில் கீதங்கள் இருப்பது உண்மையே. ஆனல் அதில் கோவிந்தன் (விஷ்ணு) காணப்படுகிறாரா என்பதுதான் ஐயத்திற்கு இடமாக உள்ளது."

வங்க நாட்டில் 19வது, 20வது நூற்றாண்டுகளில் விளங்கி வந்த மாபெரும் எழுத்தாளர்களும் திறனாய்வாளர்களும் கீத கோவிந்தத்தைப் புகழ்ந்து எழுதியுள்ளனர். ஆயினும் அவர்களுடைய புகழ்ச்சி ஒரு வரம்பிற்கு உட்பட்டது. வைணவ சமயத்தில் ஆர்வம் உள்ளவர்கள் மாத்திரம் இதற்கு ஒரு விதிவிலக்கு. பிரமத சௌதுரியின் (பின்னர் காண்க) விமரிசனமும், பாலேந்திர நாத தாகூரின் கருத்தும் வைணவர் அல்லாத பண்டிதர்களால் பொதுவாக ஒப்புக் கொள்ளப்படுகின்றன. கீத கோவிந்தத்தைப் படித்த வங்காளிகளின் கருத்தும் இதுவே "ஸம்ஸ்கிருத பாஷா ஓ ஸம்ஸ்கிருத ஸாஹித்ய சாஸ்த்ர விஷயக ப்ரஸ்தாவ." ஸம்ஸ்கிருத மொழியையும் அதன் இலக்கியத்தையும் பற்றிய கட்டுரை என்ற முன்னுேடியான நூலில் (மூன்றும் பதிப்பு-கல்கத்தா 1863) வடமொழி இலக்கியத்தைச் சீர் தூக்கிப் பார்க்கும் ஆசிரியர் ஈசுவர சந்திர வித்யாசாகர் பின்வருமாறு கூறுகிறார். "இப்பெரும் காவியத்தின் நடை மிக இனியதாகவும், மென்மையாகவும், அழகாகவும இருக்கிறது. இது போன்ற நூல்கள் வடமொழியில் ஏராளமாகக் கிடைப்பதில்லை ஜெயதேவரின் வருணனைகள் நம் உள்ளத்தைக கவர்கின்றன. ஆயினும் செய்யுள் அமைப்பதில் அவருக்குள்ள திறமை கவிதைத் திறனிலும் காணப்பட்டால், அவருடைய கீத கோவிந்தம் உண்மையிலேயே ஒரு சிறந்த காவியமாக அமைந்திருக்கும். காளிதாசர், பவபூதி முதலிய மகா கவிகளைவிட ஜெயதேவர் தரத்தில் குறைந்தவர் என்றே கூறவேண்டியிருக்கிறது. இருந்தாலும் வங்கநாட்டில் தோன்றிய வடமொழிக் கவிகளுள் அவரே தலைசிறந்தவர் என்பதில் ஐயமில்லை."

19-ம் நூற்றுண்டில் வாழ்ந்தவரும், ரவீந்திரநாத தாகூருக்கு முன் வங்க மொழியின் தலைசிறந்த எழுத்தாளருமாகிய பங்கிம் சந்திர சட்டர்ஜி அவர்கள் காதற் கவிதையில் புகழ் பெற்ற ஜெயதேவர், வித்யாபதி ஆகிய இருவருக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறுர். இந்த ஒப்பீட்டில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கும் ஜெயதேவரைப் பற்றிச் சில அடிப்படையான வாதங்களை அவர் குறிப்பிட்டிருக்கிறுர். "ஜெய தேவரைப் போன்ற கவிகளின் படைப்புக்களில் நாம் வெளியுலகுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறேம். வித்தியாபதி முதலிய கவிகளின் படைப்புக்களில் அந்தராத்மா நிலவுவதைக் காண்கிறேம். ஜெயதேவரும் வித்யாபதியும் இராதா-கிருஷ்ணரின் காதல் விளையாட்டுக்களையே வருணித்துள்ளனர். எனினும் ஜெயதேவர் பாடியுள்ள காதல் கீதங்கள் புறக்காதலை விளக்குகின்றன. வித்யாபதியின் பாடல்களும்-முக்கியமாக சண்டி தாசரின் கீதங்களும் நம் அந்தராத்மாவைத் தொடுகின்றன. பாலுறவை மையமாக வைத்துப் பண்படாத இந்திரிய அனுபவங்களை மிகைப்படுத்திக் காட்டும்போது கவிதை சிற்றின்ப மயமாகி விடுகின்றது. வித்தியாபதி முதலியோர் மனிதனின் உள்ளத்தில் விளங்கும் காதலையே கண்டு அதைப் புலன் இன்பத்திலிருந்து பிரித்து விடுகின்றனர். ஆகவே வித்தியாபதி போன்ற கவிகளின் எழுத்துக்களில் இந்திரிய சுகம் காணப்படுவதில்லை. காதல் தூய்மையாக்கப் பெற்று, சிற்றின்ப உணர்ச்சியைக் கடந்து புனிதமான, மிக உயர்ந்த ஒரு நிலையை அடைகிறது" என்கிறுர் பங்கிம் சந்திரர். நம்மை நம்பச் செய்யும் அழகிய நடையில் இவ்வேறுபாட்டைத் தெளிவுபடுத்தி இந்திரிய அநுபவத்தை விவரிக்கும் கவி என்ற நிலையில் ஜெயதேவருக்கு நியாயமாக உரிய புகழை அளிக்கிறுர். மேலும் கி. பி. 1870ல் எழுதப்பெற்ற 'வங்க தேசத்தில் மக்கள் விரும்பும் இலக்கியம்' என்ற ஆங்கிலக் கட்டுரையில் பங்கிம் சந்திரர் கீழ்வருமாறு கூறுகிறுர்: "கீத கோவிந் தத்தில் ஆதிமுதல் அந்தம் வரையில் ஓரிடத்திலாவது ஆண்மகனின் பண்பு காணப்படவில்லை. பெண்மைக்குரிய இயல்பு நிறைய இருக் கின்றது. ஆயினும் உரிய கருத்து எங்கும் இல்லை, ஒரு புதிய தத்துவத்தையும் கவி நமக்குப் போதிக்கவில்லை. சாதாரணமாக உலக இயல்புக் கவிகளோ, சமய போதனைக் கவிகளோ அறத்தை வலியுறுத்தி மனித இனத்தை உயர்த்த முற்படுவர். ஜெயதேவர் வேறு விதமான கவி. ஒரு கோணத்திலிருந்து பார்த்தால் சிறந்த தெனத் தோன்றும் அவருடைய கவிதைத் திறனையோ, அழகிய உருவங்களின் சிறப்பையோ, மென்மையான உணர்ச்சிகளையோ, ஒப்பற்ற கவி நடையையோ நான் மறுக்கவில்லை. ஆயினும் அவர்

பெண்மைக் குணம் மிகுந்த, சிற்றின்பப் பிரியர்களாகிய, ஓர் இனத்தாரின் கவி என்பதைக் கூறியே தீரவேண்டும். (பங்கிம் சந்திரர் தம்மினத்தைச் சேர்ந்த வங்காளிகளைத் தாக்குவதற்குத் தயங்கவில்லை. ஆனால் அவர் சிறிது கடுமையாகவே, நியாயமற்ற முறையில் எழுதியிருக்கிறார்: எஸ். கே. சட்டர்ஜி). இதன் இனிமையும் மென்மை உணர்வும், பல இடங்களில் முற்றிலும் சிற்றின்ப நிறைவும் கொண்டனவாக இருந்தும் அவருடைய சுலோகங்கள் பல பொருளற்றவையாக இருப்பதுடன், சோம்பரும் பெண்மைத் தனமும் மிகுந்த ஒரு சாதியினரின் கருத்துக்களை வெளியிடுபவையாகவும் இருக்கின்றன.'' (பங்கிம் ரசநாவளி-மூன்றும் பாகம்-ஆங்கில நூல்களின் தொகுப்பு-பதிப்பாசிரியர் யோகேச சந்திர பாகல்-1969–சாஹித்ய ஸம்ஸத், கல்கத்தா-பக்கம் 98).

சிறந்த திறனாய்வாளரும், கட்டுரை ஆசிரியரும், நாவலாசிரியருமான பிரமத சௌதுரி (1868-1946) ஜெயதேவரைப்பற்றி வங்க மொழியில் எழுதியுள்ள கட்டுரையை நாம் புறக்கணிக்கமுடியாது. ஜெயதேவரின் கவிதையைப்பற்றி அவர் எழுதிய விரிவான ஆராய்ச்சி நூல் முதன் முதலாக கி. பி. 1890ல் (வங்க ஆண்டு 1297) அச்சிடப் பெற்றது. இதில் ஜெயதேவரின் காவியத்தில் இயற்கை காதல் ஆகியவற்றைக் கவி கையாண்டிருக்கும் முறையைக் கவிதை என்ற கோணத்திலிருந்தும், ரச சாத்திர முறைப்படியும் ஆசிரியர் நுணுகி ஆராய்ந்துள்ளார். புராதன நம்பிக்கைகளையுடைய ஜெயதேவ பக்தர்கள் அவருடைய காவியத்திற்கு அளித்திருக்கும் போலியான ஏற்றத்தை அகற்றுவதே அவருடைய நோக்கம் என்று தோன்றுகிறது. ஆயினும் பிரமத சௌதுரி மக்களால் பெரிதும் போற்றப்படும் கவி ஜெயதேவர் என்பதை ஒப்புக்கொண்டு, அதற்கு சரித்திர சம்பந்தமான காரணங்களைக் காட்டுகிறார். வடமொழிப் பயிற்சியில்லாத சாதாரண மக்களுக்கு ஜெயதேவருடைய இனிய பாடல்களில் ஏற்பட்ட மோகமும், அவர் விவரித்திருக்கும் தெய்வீகக் காதல் புனிதமானது, ஆன்மீகமானது என்ற நம்பிக்கையும் இதற்குக் காரணம் என்று பிரமத சௌதுரி விளக்கியிருக்கிறார்.

ரவீந்திரநாத தாகூர் தம் சுயசரிதையில் (ஜீவந ஸ்மிருதி) தாம் பத்து, பன்னிரண்டு வயதுச் சிறுவனாக இருந்தபொழுது ஜெயதேவருடைய பாடல்களின் ஓசை நயமென்ற வசீகர சக்தியால் ஈர்க்கப்பட்டதாகவும், ஆனால் அச்சிறு வயதில் அவற்றின் பொருள் தமக்கு விளங்கவில்லை என்றும் கூறியிருக்கிறார். பிற்காலத்திலும் அவருக்கு ஜெயதேவருடைய கவிதையில் விசேஷமான ஈடுபாடு இருந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் அவர் கவிதை இயற்றத் தொடங்கிய பொழுது ஜெயதேவருடைய பாடல்களின் ஓசை நயம் அவரை ஆட்

கொண்டதுடன் அதே பாவினங்களைப் பின்பற்றி வங்க மொழியில் கவிதை இயற்றவும் தூண்டியது. கீத கோவிந்தத்தின் முதல் சுலோகத்தின் வடிவமும் பொருளும் அவரை வசீகரித்ததுடன் அதைப் புகழ்ந்து எழுதவும் செய்தன.

மேற்கூறிய ஒருசாரார் கருத்து, மற்றொன்று புராதனக் கொள்கைகளில் நம்பிக்கையுள்ள வைணவ அடியார்களின் கருத்து. இவர்கள் கண்ணனைத் திருமாலின் அவதாரமாகவும், கருணை, அன்பு முதலியவற்றின் உறைவிடமாகவும் நம்புகின்றனர். இவர்கள் ஜீவாத்மாக்கள். பரமாத்மாவாகிய பரம்பொருளுடன் ஒன்று சேரவேண்டும் என்று ஏங்குவதை பிருந்தாவனத்தில் ராதையைத் தலைவியாகக் கொண்ட கோபியர் தங்களை மறந்து கண்ணனிடம் காதல் கொண்டு வழிபட்டதை ஒப்பிடுகின்றனர். அழகும் இளமையும் படைத்த கிருஷ்ணனே புருஷோத்தமன், அவன் ஒருவனே ஆடவர் திலகன். மற்ற ஜீவராசிகள் அனைவரும் பெண்கள் என்ற நிலையில் அவனிடம் காதல் கொள்ள வேண்டும்.

இந்த கிருஷ்ண பிரேமை அல்லது பரம்பொருளாகிற கிருஷ்ணனிடம் அன்பு செலுத்தல்-ஓர் இளைஞனிடம் இளம் பெண் ஒருத்தி தன்னை மறந்து சமர்ப்பணம் செய்வது போன்ற ஈடுபாடு-இக்கால மொழியில் உடல், பொருள், உள்ளம் முதலியவற்றையும் ஒப்படைத்தல்-என்பதேயாகும். இடைக்கால இந்து சாதனைகளுள். அதாவது பரம்பொருளை அடையும்-பெண்மைக் காதலுடன் பரமாத்மாவை அணுகுவது குறிப்பிடத்தக்கது. இவ்வுலகில் நிகழும் உடல் உறவை உதாரணமாகக் கொண்டு, கடவுளிடம் நாம் கொள்ளும் தெய்வீகக் காதல் உருவாகியது. அக்காலத்து வைணவப் பாடல் கீழ்வருமாறு.

"யுவதீநாம் யதாயூநி யூநாம்ச யுவதௌ யதா
மநோ பிரமதே நித்யம் மநோபிரமதாம் த்வயி"

(இளம் பெண் ஒருத்தியின் உள்ளம் ஓர் இளைஞனிடம் மயங்கி இன்பமடைவது போலவும், ஓர் இளைஞனின் நெஞ்சம் ஒரு மங்கையுடன் கலந்து மகிழ்வது போலவும் என் மனம் உன்னிடமே ஒன்றி இன்புறுவதாக).

பழங்காலத்தில் பாரத நாட்டில் ப்ருஹதாரண்ய உபநிஷத் iv, 3, 21 எண்ணுள்ள பகுதியில் முதன் முதலாகக் காணப்படுவது அனைவரும் அறிந்ததே.

"யதா ப்ரியயா ஸ்த்ரியா ஸம்பரிஷ் வக்தோ
ந பாஹ்யம் கிஞ்சந வேத,
ந அந்தரம் ஏவ அயம் புருஷ,
ப்ராக் ஞேந ஆத்மநா ஸம்பரிஷ்வக்தோ
ந பாஹ்யம் கிஞ்சந வேத ந அந்தரம்—
தத்வா அஸ்ய ஏதத் ஆப்த காமம்
ஆத்ம காமம் அ-காமம் ரூபம் சோகாந்தரம், "

(அன்புக்குரிய மனைவியின் தழுவுதலுக்கு உட்பட்டிருக்கும் கணவன் எவ்வாறு அகத்தையும் புறத்தையும் மறந்து விடுகிறானோ, அவ்வாறே அம்மனிதனும், ஆத்மாவின் ஆலிங்கனத்திற்குட்பட்டு அகத்தையும் புறத்தையும் அறியமாட்டான். அவ்வுருவத்தில்தான் விருப்பம் முழுவதும் நிறைவேறுகிறது; ஆத்மாவே அவன் விருப்பம். அதில் அவன் விருப்பமற்ற, துயரற்ற நிலையைப் பெறுகிறான்).

மனிதன் இறைவனிடம் கொள்ள வேண்டிய காதலுக்கு அடையாளம் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உடல் உறவே என்ற கருத்து உலகெங்கும் நிலவியுள்ளது. சீனாவில் தோன்றிய கன்பியூஷியஸ் மதத்திலும், டாவோ மதத்திலும் இதன் அறிகுறிகளைக் காண்கிறோம். (எடுத்துக்காட்டாக—டாவோ மதத்தின் ஆன்மீக மரபையொட்டி கி. மு. 200ம் ஆண்டில் சியு யுவான் என்பவர் இயற்றிய ஒன்பது செய்யுள்கள் என்ற வேதாந்தப் பாடல்கள்) யூதர்களிடையே வழங்கும் ஸாலமனின் 'ஷிர் ஷிரிம்' (பாடல்களின் பாடல்) என்பதிலும் இதைக் காண்கிறோம் பிற்காலத்துக் கிறிஸ்தவ ஆன்மீக மரபிலும் (சிலர் யூதர்களின் பாடலுக்கு வேறுவிதமான பொருள் கூற முற்பட்ட போதிலும்) ஜீவாத்மாவை மணப்பெண்ணிற்கு ஒப்பிட்டு, ஏசு கிறிஸ்துவையோ, கடவுளையோ தெய்வீகக் காதலனாக வருணிப்பது வழக்கில் உள்ளது. இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த 'தஸாவுஃப்' என்ற ஸூபிக்களின் மரபிலும் ஜீவாத்மா காதலனாகவும் (ஆஷிக்) பரம்பொருள் அதன் தெய்வீகக் காதலியாகவும் (மஷூகா) சித்திரிக்கப்பட்டுள்ளது. பரம்பொருள் ஒரு சிறுவனாகவும் ஆஷிக்கின் காதலனாகவும் வருணிக்கப்பட்டுள்ளது.

பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள இந்த உறவை நாம் புரிந்து கொண்டால், வைணவர்கள் உடலுறவைத் தெய்வீகக் காதலாகக் கூறும் கருத்தையும் அறிந்து கொள்ளமுடியும் இவ்விளக்கத்துக்கு அடிப்படையான வேதாந்தக் கருத்தைப் பற்றி வட மொழியிலும் நவீன இந்திய மொழிகளிலும் போதிய ஆதாரங்கள் உள்ளன. அண்மையில் வெளியிடப்பெற்ற கீத கோவிந்தத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு ஒன்றில் காதலைப்பற்றி மேற்கூறிய விளக்கமே தரப்பட்டுள்ளது.

XIV. ஜெயதேவரைப் பற்றிய பரம்பரையான சமய மரபும் உண்மைகளை அடிப்படையாகக் கொண்ட புதிய மரபும்.

ஜெயதேவரையும் அவர் இயற்றிய கீத கோவிந்தத்தையும் பற்றி மிக விரிவானதும், அனைத்தையும் உள்ளடக்கியதுமான வங்காள நூல் பண்டித ஹரே கிருஷ்ண முக்யோபாத்தியாயர் (முகர்ஜி), ஸாஹித்திய ரத்ந, பி. எச். டி அவர்களால் எழுதப் பெற்ற "கவி ஜயதேவ் ஓ ஸ்ரீ கீத கோபிந்த" என்ற புத்தகம். முக்கியோபாத்தியாயர் வங்க நாட்டு வைணவத்தையும் அதன் இலக்கியத்தையும் பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சி செய்த பெரும் புலவர். (அவருடைய நூல்-கல்கத்தா-4வது பதிப்பு-ஆக்ர ஹாயணம்.வங்க ஆண்டு 1372-கி.பி. 1965—ஆசிரியரால் வீரபூமி ஜில்லாவில் குட்மிடா என்ற கிராமத்தில் 'சாரதா குடீரம்' என்ற அவருடைய இல்லத்திலிருந்து பிரசுரிக்கப் பெற்றது. பக்கங்கள் 272+160=432) புதுமை ததும்பும் இந்நூலின் 272 பக்கங்கள் கொண்ட முன்னுரையில் ஜெயதேவரையும் அவருடைய நூலையும் பற்றிய கூறுகள் அனைத்தும் விவாதிக்கப்படுகின்றன. முக்கியமாக வைணவர்களின் அன்பு மதத்தைப் பற்றியுள்ள பகுதியில், பண்டைய மரபில் நம்பிக்கை கொண்ட வைணவர்களின் கோட்பாடுகள் அனைத்தும் அடங்கியுள்ளன. நூலின் இரண்டாம் பாகத்தில்—பக்கங்கள் 1-160—சிறந்த முறையில் பதிப்பிக்கப் பெற்ற கீத கோவிந்தத்தின் மூலமும் "பாலபோதினீ" என்ற பெயருடன் பூஜாரி கோஸ்வாமி அவர்கள் வடமொழியில் எழுதியுள்ள உரையும் அடங்கியுள்ளன. 16-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பிருந்தாவனத்தில் வாழ்ந்த வங்கநாட்டு வைணவ பண்டிதரும், பக்தருமான சைதன்ய தாசர் என்பவரே பூஜாரி கோஸ்வாமி என்ற புனை பெயருடையவர். கௌட தேசம் எனப்படும் வங்கநாட்டில்வங்க; வைணவ மதமும், இலக்கியமும் செழித்து வளர்ந்த 16-ம் நூற்றுண்டில் வாழ்ந்த மகான்களுள் இவரும் ஒருவர்.

மண்ணுலகக் காதல் தெய்வீகக் காதலாகத் தூய்மையாக்கப் பட்டு கீத கோவிந்தத்தில் மிளிர்கிறது என்பதே அதைப் படித்த இந்திய ஆசிரியர்கள், மேனுட்டு ஆசிரியர்கள் ஆகியோரின் பொது அபிப்பிராயம். ஜெயதேவர் வடமொழியில் சிறந்த கவிஞர் என்று அறிஞர்கள் அனைவராலுமே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறார். அண்மையில் வடமொழி இலக்கணம் பற்றி வெளியான ஒரு நூலின்-அமெரிக்க நாட்டில் அலபாமா பல்கலைக்கழகம்—1972—

பேராசிரியர் மான்பிரெட் மெரோபர் என்பவர் எழுதிய தன் ஆங்கில மொழிபெயர்ப்பு இறுதியில் வடமொழி இலக்கியத்திலிருந்து மூன்று சிறு மாதிரிகள் தரப்பட்டுள்ளன. (இவ்வாசிரியர் பின்னர் வடமொழி சொல்லிலக்கண அகராதி ஒன்றையும் எழுதினர்.) முதல் மாதிரி ரிக் வேதத்திலிருந்தும், இரண்டாவது மகாபாரதத்தில் வரும் நளன்-தமயந்தி கதையிலிருந்தும் மூன்ருவது கீத கோவிந்தத்தின் ஒரு பாடலிலிருந்து சில வரிகளும் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன. ஐரோப்பியப் பண்டிதர்கள் பெரும் பான்மையோர் கீத கோவிந்தத்தைப்பற்றி மிகவும் புகழ்ச்சியாகவே எழுதியுள்ளனர். அதன் பாடல்களிலுள்ள ஓசை நயத்திலிருந்து பிறக்கும் இசையும், பெண்மையின் அழகையும் காதலேயும் பற்றிய வருணனேகளும், ஜீவாத்மா கடவுளே அடைவதற்கு அனுபவிக்கும் ஏக்கமும், இயற்கை வருணனேகளும் அவர்களே மிகவும் கவர்ந்து, ஜெயதேவரின் காவியத்தின் மீது கலப்பற்ற பெரும்புகழைச் சொரியுமாறு செய்திருக்கின்றன.

நாம் மேலே கூறிய மனமோகன சக்கரவர்த்தி அவர்கள் ஜெய தேவரைப்பற்றி எழுதிய கட்டுரையைத் தவிர, கவியின் வாழ்க்கை வரலாறு முதலியவற்றுடன் கூடிய மிக விரிவான ஒரு பகுதி எம். விண்டர்நிட்ஸ் அவர்கள் எழுதிய "இந்திய இலக்கிய வரலாறு" என்ற நூலில் (III பாகம், முதற் பகுதி) காணப்படுகிறது. இப்பெரு நூலின் ஜெர்மானிய மொழி மூலத்தின் முதல் பாகம் 1907-ல் வெளி யிடப்பெற்றது. இந்நூலின் முதலாவது இரண்டாவது பாகங்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு ஜெர்மனியைச்சேர்ந்த ஸ்ரீமதி எஸ். கேட்கர் என்பவரால் தயாரிக்கப்பட்டு கல்கத்தா சர்வகலாசாலே யினுல் பிரசுரிக்கப்பட்டது. (முதல் பாகம் 1927-முன்னுரை-வேதம், இதிஹாஸங்கள், புராணங்கள், தந்திரங்கள், இரண்டாம் பாகம், 1933—பௌத்த இலக்கியம், ஜைந இலக்கியம், மூன்ரும் பாகம்— முதற் பகுதி—வடமொழி இலக்கியம்—ஜெர்மானிய மூலம்—1922— ஆங்கில மொழி பெயர்ப்பு டாக்டர் ஸுபத்ரா ஜா—1963-ல் டெல்லி, வாராணசி, பாட்ணு ஆகிய ஊர்களிலிருந்து மோதிலால் பநார்ஸிதாஸ் கம்பெனியால் பிரசுரிக்கப்பட்டது. ஜெயதேவரைப் பற்றிய பகுதி ஸுபத்ரா ஜா அவர்களின் ஆங்கில மொழி பெயர்ப் பில் பக்கம் 142.148ல் வருகிறது). விண்டர்நிட்ஸ் அவர்களின் நூலில் ஜெயதேவரின் வாழ்க்கையையும் மற்ற அம்சங்களேயும் பற்றிக் கிடைக்கும் குறிப்புக்கள் விலே மதிப்பற்றவை. ஐரோப்பா வின் மற்ற வடமொழிப் பண்டிதர்களேப்போலவே விண்டர் நிட்ஸும் ஜெயதேவரின் ஓசை நயத்தில் மோகம் கொண்டவர். ஜெயதேவரின் இனிய பாடல்களேப் பலவற்றை ரோமன் லிபியில் பெயர்த்தெழுதி அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பையும் எழுதியிருக்கிருர். சிற்

சில சுலோகங்களை விட்டிருக்கிறார். கீத கோவிந்தத்தைப்பற்றி அவருடைய முடிவான தீர்ப்பு பின்வருமாறு: "காவியம் சமய சம்பந்தமானது என்பது உண்மையே. கவியின் அபிப்பிராயப்படி பார்த்தால் அதில் வரும் சிருங்காரம் கிருஷ்ண பகவானிடம் அடியார்கள் செலுத்தும் பக்தியின் ஒரு பகுதியே யன்றி வேறில்லை. ஜெயதேவர் இந்தியக் கவிமேதைகளுள் ஒருவர் என்பதை மறுக்க முடியாது. (இக்கருத்தை ராதா-கிருஷ்ணரின் பக்தர்கள் அல்லாத வங்க நாட்டு இலக்கியத் திறனாய்வாளர்களும் மற்ற இந்திய எழுத்தாளர்களும் அடியோடு எதிர்க்கிறார்கள்—எஸ். கே. சாட்டர்ஜி). ஆயினும், ஜெயதேவர் தீவிரமான காமத்தையும், காதல் உணர்ச்சியையும் அடுக்குமோனைகளையும் கலந்து வழங்கியிருக்கும் பாடல்கள் நமது காதில் இன்னிசையாக ஒலித்தபோதிலும், அவருடைய நடை பகட்டாகவும் செயற்கையாகவும் இருப்பது நமக்கு வியப்பையே தருகிறது. இக்காவியம் பாரத நாட்டின் மக்களால் விரும்பப்படுவதில் வியப்பு ஏதும் இல்லை. வெளிநாட்டவரும் அதைப் போற்றுகின்றனர். மூலத்தின் நடையழகை மொழிபெயர்ப்பது மிகவும் கடினம். அதன் கவர்ச்சியின் ஒரு பகுதியையே மொழிபெயர்ப்பில் கொண்டு வர முடிகிறது. வில்லியம் ஜோன்ஸ் என்ற கவியின் ஆங்கில மொழிபெயர்ப்பு பல குறைபாடுகள் உள்ளதெனினும் அதன் சில பகுதிகள் (ஜெர்மானிய மகா கவியாகிய) கேதேயின் உள்ளத்தில் வியப்புணர்ச்சியைத் தோற்றுவித்தன.

ஏறக்குறைய இதே போன்ற புகழ்ச்சியை நாம் ஏ. பாரிடேல் கீத் அவர்களின் சமஸ்கிருத மொழி வரலாறு என்ற நூலில் (ஆக்ஸ்போர்டு யுனிவர்சிடி பிரஸ், முதற்பதிப்பு-1920. பின்னர் ஆறு பதிப்புக்கள்-கடைசிப் பதிப்பு 1966 பக்கம் 190-198) காண்கிறோம். கீத் அவர்கள் கீத கோவிந்தத்தை 'மகத்தான ஒரு சாதனை' என்றும், ஜெயதேவரை 'சமஸ்கிருதக் கவியுலகின் இறுதியான மேதை' என்றும் போற்றுகிறார். அதன் விமரிசனத்தையும் தமது பெருமதிப்பையும் உற்சாகத்துடன் வெளியிடுவதுடன் கீத கோவிந்தத்தின் மூன்று பாடல்களின் பகுதிகளை ரோமன் லிபியில் எழுதி ஆங்கில மொழிபெயர்ப்பையும் கொடுத்திருக்கிறார்.

ஜெயதேவரையும் கீத கோவிந்தத்தையும் பற்றி ஆங்கிலத்தில் எழுதப் பெற்ற கட்டுரைகளுள் மிகவும் நியாயமானதும் நவீன நோக்கைப் பின்பற்றுவதும் ஆனது காலஞ்சென்ற பேராசிரியர் சுசீல குமார் தே அவர்கள் தமது சமஸ்கிருத இலக்கியத்தின் வரலாறு என்ற நூலில் எழுதியிருப்பதேயாகும். (உரை நடை, கவிதை, நாடகம் என்ற பாகம்—கல்கத்தா பல்கலைக் கழகம் 1947—பக்கங்கள் 388-398) இதில் எல்லாப் பொருளும் அறிவுடன் ஆராயப்பெற்று,

ஆதார பூர்வகமான தகவல்களுடனும், பழையது நூல்களின் ஆராய்ச்சியுடனும் மொழி பெயர்ப்புகள் அனைத்தின் உதவியுடனும் சர்ச்சை செய்யப்படுகிறது. திறனாய்வு நியாயமாகவும், ஆர்வத்தின் மிகையின்றியும் செய்யப்பட்டுள்ளது.

ஆங்கில மொழி பெயர்ப்புகளுள் மிகப் பழைய ஸர் வில்லியம் ஜோன்ஸ் அவர்களுடையது. (ஏஷியாடிக் ரிஸர்ச்சஸ் III பாகம், 1786) பின்னர் ஸர் எட்வின் ஆர்நால்ட் அவர்களின் மொழிபெயர்ப்பு (இந்திய கீதங்களின் கீதம், 1861) பல பதிப்புக்களில் வெளி வந்தது. இவை இரண்டுமே மூலத்தை முற்றிலும் அனுசரித்தவை அல்ல. சமீபத்தில் இரண்டு ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் வெளிவந்தன. முதலாவது இலங்கை நாட்டைச் சேர்ந்த ஓவியரும் எழுத்தாளருமான ஜார்ஜ் கேட் அவர்கள் எழுதிய "ஜெயதேவரும் கீத கோவிந்தமும்—ராதாகிருஷ்ணரின் காதல்" என்பது ஆசிரியர் வரைந்த படங்களுடன் 1947ல் பம்பாய், குதுப் இந்தியப் பதிப்பில் வெளிவந்தது. இது கூடிய வரையில் மூலத்தைப் பின்பற்றிய, திருப்திகரமான பதிப்பு. இரண்டாவது நூல் கல்கத்தாவில் பி. லால் அவர்களின் ரைடர்ஸ் ஒர்க் ஷாப்பினால் 1968ல் வெளியிடப்பட்ட மானிகா வர்மா அவர்களின் மொழி பெயர்ப்பு, முன்னுரை, குறிப்புக்களுடன் கூடிய இம்மொழி பெயர்ப்பு சிறிது விரிவானது. ஆயினும் எப். ருகர்ட் அவர்களின் ஜெர்மன் மொழி பெயர்ப்பே உலக முழுவதும் புகழ் பெற்றது. இது முதலில் 1829-லும் பின்னர் 1837-லும் வெளியிடப்பட்டது.

XV. கீதகோவிந்தமும் இடைக்கால இந்திய சித்திரக்கலையும்

வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் வெவ்வேறு சிற்ப மரபைச் சேர்ந்த ஓவியர்களைக் கீதகோவிந்த காவியம் மிகவும் கவர்ந்துள்ளது. இக்காலத்து வடஇந்திய சிற்பக்கலையின் காதல் சம்பந்தமான சிற்பங்கள், கிழக்கிந்தியாவில் பாலர்கள், ஸேனர்கள் காலத்து உருவங்கள், புவநேசுவரம், பூரி, கொநாரக் ஆகிய கோயில்களில் காணப்படும் சிற்பங்கள், கஜுராஹோ கல்வெட்டுச் சிற்பங்கள், தக்காணத்தில் பிற்காலத்திய ராஷ்டிர கூட, சாளுக்கிய சிற்பக்கலை ஆகியவை கீதகோவிந்தத்தில் வரும் காட்சிகளைச் சித்திரிக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இக்காவிய நிகழ்ச்சிகள் குஜராத், ராஜஸ்தான், வடஇந்தியாவில் பிருந்தாவனம், வாராணசி, இமயப்பகுதியில் காங்ரா, சம்பா, மண்டி, பஸோஹ்லி நேபாளம் முதலிய பகுதிகளின் ஓவியர் உள்ளங்களைக் கவர்ந்து மிக அழகிய சித்திரங்கள் பலவற்றை வரையச் செய்திருக்கின்றன. மேலும், ஒரிஸ்ஸா, வங்காளம், அஸ்ஸாம் முதலிய பகுதிகளிலும், ஆந்திரதேசம், கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு முதலிய மாநிலங்களிலும் கீதகோவிந்தத்தின் பாதிப்பைக் காண்கிறோம். சாகித்திய அகாதமியைப் போன்ற மற்றொரு நிறுவனமாகிய லலித கலா அகாதமி கீதகோவிந்தத்தைப் பற்றியும் ராதா-கிருஷ்ணரைப் பற்றியும் ஓவியர்கள் வரைந்த சித்திரங்களைச் சேகரித்து அழகிய முறையில் அச்சிட்டிருக்கிறது. 14-ம் நூற்றாண்டிற்குப்பின் இந்தியாவில் ஓவியக்கலை அளவு கடந்து வளர்ந்தபொழுது வரையப்பட்ட சித்திரங்களைக் கொண்டு நாம் கீதகோவிந்தத்தின் பாதிப்பை ஆராயலாம். ஆனந்த கெண்டிஷ் குமாரஸ்வாமி அவர்கள் இது பற்றிச் செய்துள்ள அரிய ஆராய்ச்சி தவிர, எம். எஸ். ரந்தாவா அவர்களும், முக்கியமாக ராஜபுதன இமாசல மாநில, ஓவியங்களைப்பற்றிச் சிறந்த திறனாய்வு செய்திருக்கிறார்.

இப்புத்தகத்தின் இறுதியில் இந்துக்களின் விக்கிரக தத்துவம் பற்றியும், இராதாகிருஷ்ண பக்தி நெறி பற்றியும் பகுதிXVIIIல் பார்க்கவும்.

XVI. கீதகோவிந்தத்திலிருந்து இரண்டு பாடல்களும் அவற்றின் மொழிப்பெயர்ப்பும்

ஜெயதேவருடைய கவிதையின் இன்னிசை—முக்கியமாக அவருடைய 24 கீதங்கள்—நம்மை மயக்குறச் செய்கின்றன. அவருடைய கவிதையின் சுவையை !வாசகர்களுக்கு விளக்க வேண்டும் என்கிற—இயலாத—ஆசையுண்டாகிறது. எனினும் பண்டைய வைணவர்கள் இப்பாடல்களைத் தெய்வீகக் கவிதையாகக் கருதும் சூழ்நிலையில் மனத்தைச் செலுத்தாத சாதாரண வாசகர்களுக்கு ஜெயதேவரின் பாடல்களுடைய விளக்கமும், காஜுராஹோ கோயில்கள், பூரி, கோநாரக் முதலிய ஒரிஸ்ஸா நாட்டு ஆலயங்கள் முதலியவற்றில் காணப்படும் காதல் சிற்பங்களும் சுவைக்காமல் போகவும் கூடும். வெவ்வேறு சுவை கொண்ட வாசகர்களுக்குப் பாடல்களின் மொழிபெயர்ப்பும் உற்சாகத்தை உண்டு பண்ணுமல் இருக்கலாம்.

பாஷா கவிதை நடையில் நீண்ட விருத்தங்களில் இயற்றப் பட்டுள்ள சில அழகிய பாடல்களை மொழி பெயர்ப்பதை நான் வேண்டுமென்றே நிறுத்திக் கொண்டேன். ஏனெனில் அது சற்று விரசமாகத் தோன்றலாம். அனைவரும் ரசிக்கக் கூடியவை என்று நான் கருதும் குறுகிய பாடல்கள் இரண்டை நான் கீழே தருகின்றேன். இவற்றின் மூலமும் தமிழ் மொழி பெயர்ப்பும் வருமாறு:-

(1) சருக்கம் 1- பாடல் 2-விஷ்ணுவின் பல அவதாரங்களை வருணிக்கும் இரண்டாவது தோத்திரம்.

" ச்ரித கமலா குச மண்டல த்ருத குண்டல
கலித லலித வநமால
ஜய ஜய தேவ ஹரே, (பல்லவி)"

(திருமகளின் கொங்கைகள் மீது உறைபவனே! காதுகளில் குண்டலம் அணிந்தவனே! காடுகளில் பூக்கும் மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்தவனே! ஹரியே! உனக்கு வெற்றி உண்டாகட்டும்).

" தினமணி மண்டல மண்டந பவ கண்டந
முநி ஜந மாநஸ ஹம்ஸ " (2)

(கதிரவனின் மண்டலத்திற்கு அணியானவனே! மறுபிறப்பை ஒழிப்பவனே! முனிவர்களின் உள்ளம் என்னும் ஏரியில் அன்னப் பறவை போல் வீற்றிருப்பவனே)

" காளிய விஷதர கஞ்ஜந ஜந ரஞ்ஜந
யதுகுல நளின திநேச " (3)

(நஞ்சு நிறைந்த காளியன் என்ற பாம்பைக் கொன்றவனே! மக்களுக்கு இனியவனே! யதுகுலம் என்ற தாமரையை மலர்விக்கும் சூரியனே!)

" மதுமுர நரக விநாசந கருடாஸந
ஸுர குல கேளி நிதாந " (4)

(மது, முரன், நரகன் ஆகிய அசுரரை வதைத்தவனே! கருடவாகனனே! தேவர்களின் மகிழ்ச்சிக்குக் காரணமானவனே!)

" அமல கமல தள லோசந பவமோசந
த்ரிபுவந பவந நிதாந " (5)

(மாசில்லாத தாமரையிதழ்களை ஒத்த கண்ணனே! சம்சாரத் தளையை நீக்குபவனே! மூவுலகையும் படைத்தவனே!)

"ஜநக ஸுதா க்ருத பூஷண ஜித தூஷண
ஸமர சமித தச கண்ட " (6)

(ஜனகன் புதல்விக்கு அணி போன்றவனே! தூஷணனை வென்றவனே! பத்துத் தலைகளையுடைய ராவணனைப் போரில் அடக்கியவனே!)

"அபிநவ ஜலதர ஸுந்தர த்ருத மந்தர
ஸ்ரீ முக சந்த்ர சகோர " (7)

(புதிய கார்முகில் போல் அழகியவனே! மந்தரகிரியைத் தாங்கியவனே! திருமகளின் வதனமென்னும் சந்திரனைப் பருகும் சகோரப் பறவையே!)

" தவ சரணே ப்ரணதா வயம் இதி பாவய
குரு குசலம் ப்ரணதேஷு " (8)

(நாங்கள் உன் திருவடியில் என்றும் கிடப்பவர்கள் என்று நீ நினைக்க வேண்டும். ஆகவே வணங்கியவர்களுக்கு நன்மை புரிவாயாக)

" ஸ்ரீ ஜயதேவ கவேரிதம் குருதேமுதம்
மங்களம் உஜ்ஜ்வல கீதி " (9)

(கண்ணபிரானின் திருவிளையாடல்களை விவரிப்பதும் ஜெயதேவ கவியினால் இயற்றப்பட்டதுமான இந்த ஒளிவீசும் கீதம் அனைவருக்கும் மங்களம் தருக.)

குறிப்பு.— முதல் சருக்கத்தின் முதற்பாடல் திருமாலின் பத்து அவதாரங்களையும் வருணிக்கிறது. இரண்டாவது பாடலாகிய மேற்கூறிய பாடலில் ஒருசில அவதாரங்களே துதிக்கப்படுகின்றன. பாரத நாட்டின் முன்னாள் ராஷ்டிரபதியும் பேராசிரியரும், இந்துமதம், கலாச்சாரம் ஆகியவற்றின் சிறந்த உரையாசிரியருமான ஸர்வேபல்லி ராதாகிருஷ்ணன் அவர்கள் இது பற்றி நம் கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கும் ஓர் உண்மையை இங்கு குறிப்பிடவேண்டும். வைதிக பிராம்மணர்களின் கருத்துப்படி புத்தர் மகாவிஷ்ணுவின் அவதாரங்களுள் மரியாதைக்குரிய ஓர் இடத்தைப் பெற்றுள்ளார். ஆயினும் புத்தரின் உண்மையான பெருமையை வைதிக மதத்தினரால் புரிந்து கொள்ள முடியவில்லை. தவறுகள் இழைக்கத் தூண்டும் ஓர் அவதாரமாகவும், வேதத்தில் கூறப்படும் சடங்குகளையும் வேள்விகளையும் எதிர்ப்பவராகவுமே அவர் கருதப்படுகிறார் மகாவிஷ்ணு புத்தராக அவதாரம் எடுத்ததன் நோக்கமே மூடஜனங்களை வேதத்தில் கூறப்படும் அக்கினி காரியங்களையும், மிருக பலியையும் எதிர்க்குமாறு தூண்டி, அதன் மூலம் வேத புருஷனாகிய பகவானின் கோபத்திற்கு அவர்களை ஆளாக்குவதே என்று வைதிகர்கள் கருதுகின்றனர். ஆனால் முதல் சருக்கத்தில் இரண்டு இடங்களில் ஜெயதேவர் புத்த பிரானின் நோக்கத்தை வேறு விதமாக விளக்கி, அஹிம்சையே அவருடைய கொள்கை என்று வற்புறுத்துகிறார். அவர் வேதமார்க்கத்தை எதிர்ப்பவர் அல்லர் என்றும் எல்லா உயிர்களிடத்தும் அவருக்கிருந்த இரக்கமே அவரை வேள்வி நிந்தனை செய்யத் தூண்டியது என்றும் ஜெயதேவர் கூறுகிறார். புத்தர் அஹிம்சையைக் கடைப்பிடித்ததால் உயிர்ப் பலியில் மிருகங்களுக்கு இழைக்கப்படும் கொடுமையை அவர் வெறுத்து வேதங்களில் பச்வாலம்பந அல்லது மிருகபலியை ஆதரிக்கும் பகுதிகளை மாத்திரம் அவர் கண்டித்தார். பேராசிரியர் ராதா கிருஷ்ணன் குறிப்பிட்ட இவ்விஷயம் கீத கோவிந்தத்தின் பழைய உரையாசிரியர்களுள் ஒருவராலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காதலைப் பற்றிய காவியமாக இருந்த போதிலும், கீத கோவிந்தத்தில் சகல உயிர்களிடத்திலும் அன்பு பூண்ட புத்தரின் பெருந்தகைமையை விளக்கிய ஜெயதேவரின் உள்ளப் போக்கு நமக்கு வியப்பையே தருகிறது.

(2) ஐந்தாம் சருக்கத்தில் பாடல் எண் 10. கண்ணனின் நிலையை ராதைக்கு எடுத்துரைத்தல்.

"வஹதி மலய ஸமீரே மதநம் உபநிதாய
ஸ்புடதி குஸுமநிகரே விரஹி ஹ்ருதய தளநாய (1)
ஸகி, ஸீததிதவ விரஹே வநமாலி (பல்லவி)

(தோழி! கான மலர்களாலான மாலையை அணிந்த கண்ணன் உன்னை நினைத்து வாடி மூர்ச்சை அடைகிறான். தென்றல் வீசுகையில் அதன் மீது காதல் கடவுள் பவனி வரவும், மலர்கள் ஏராளமாகப் பூக்கவும் கூடலை விரும்பும் காதலர்களின் உள்ளம் பிளக்கின்றது.

"தஹதி சிசிர மயூகே மரணம் அநுகரோதி
பததி மதநவிசிகே விலபதி விகல தரோதி" (2)

(குளிர்ந்த வெண்ணிலவும் அவன் உடலைச் சுடுகிறது. மலர்கள் விழும் பொழுது மன்மதனின் மலர்க்கணைகளால் தாக்கப்பட்டவன் போல் துடிக்கிறான்)

"த்வநதி மதுப ஸமூஹே ச்ரவணம் அபிததாதி
மநஸி சலித விரஹே நிசிநிசிருஜம்உபயாதி" (3)

(வண்டினம் முரலும் ஒலிகேட்டு அவன் செவிகளை மூடிக் கொள்கிறான். ஒவ்வோர் இரவிலும் அவன் மிகுந்த மனவேதனை அடைகிறான்.)

"வஸதிவிபிந விதாநே த்யஜதி லலித தாம
லுடதி தரணி சயநே பஹு விலபதி தவநாம" (4)

(அழகிய தன் இல்லத்தைத் துறந்து அவன் இப்போது காட்டிலே திரிகிறான். படுக்கையென எண்ணித் தரையில் புரளுகிறான். உன் பெயரைத் திரும்பத் திரும்ப உரைக்கின்றான்)

"பணதி கவி ஜயதேவ விரஹ விலஸிதேந
மநஸி ரபஸ விபவே ஹரிருதயது ஸுக்ருதேந" (5)

(காதலர்களின் பிரிவாற்றாமையை வருணிக்கும் இப்பாடலை நற்செயல்கள் நிறைந்த ஜெயதேவர் இசைக்கும் பொழுது ஒளி வீசும் கண்ணன் அவருடைய உள்ளத்தில் வீற்றிருப்பான்.)

XVII. ராதா கிருஷ்ண வழிபாடும் இந்துக்களின் விக்கிரக தத்துவமும்.

இச்சிறு நூலின் முகப்பில் அச்சிடப்பெற்றிருக்கும் இராதா-கிருஷ்ணரின் படமே இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் சித்திரங்களுள் மிகப்பழமையானது. வங்க நாட்டின் வடமத்தியப் பகுதியில் ராஜஷாஹி ஜில்லாவைச் சேர்ந்த பஹார்ப்பூரிலுள்ள கோயிலில் இடிந்து போன ஸ்தூபியிலிருந்து இது கிடைத்தது. இதன் காலம் கி. பி. ஆறு அல்லது ஏழாவது நூற்றாண்டு. அவர்களுடைய தலையைச் சுற்றிக் காணப்படும் ஒளிவட்டம் அவர்கள் தெய்வீகப் பிறவிகள் என்பதைக் காட்டுகிறது. கிருஷ்ணனைப் பற்றிய வேறு சில கல்வெட்டுக்களுடன் இந்த சிற்பமும் காணப் பட்டது. இதில் கிருஷ்ணன் அழகிய, மெலிந்த ஓர் இளைஞனாகக் காட்டப்பட்டுள்ளார்.

இராதா-கிருஷ்ணரின் காதலைப் பற்றிச் சிறந்த ஒரு காவியத்தை ஜெயதேவர் இயற்றியதற்கு நான்கு அல்லது ஐந்து நூற்றாண்டு களுக்கு முன் வங்க நாட்டில் இந்த சிற்பம் செதுக்கப்பட்டது. இந்திய சிற்பங்களுக்குள் மிக அழகியவற்றுள் இதுவும் ஒன்று.

காலத்தால் இதற்கடுத்தது தமிழ்நாட்டில் மகாபலிபுரத்தில் கி. பி. 7-வது 8-வது நூற்றாண்டில் செதுக்கப்பட்ட சிற்பங்களுள், கிருஷ்ணன் கோவர்த்தன கிரியைத் தாங்குவதாக அமைக்கப் பட்டிருக்கும் காட்சி. இதில் இராதா-கிருஷ்ணர் (பழந்தமிழில் கண்ணன்-நப்பின்னை) வீரத்துடன் காட்சியளிக்கின்றனர். கண்ணனுக்கு இடப்புறத்தில் இராதையும் அவளுக்குப் பக்கத்தில் ஒரு கோபியும் காணப்படுகின்றனர்.

கி. பி. 5-வது 6-வது நூற்றாண்டில் குப்தர்களின் காலத்தில் செதுக்கப்பட்ட சிறிதே தடிப்பான சிற்பங்களில் கண்ணனின் சரிதம் காணப்படினும் இராதை அவன் பக்கத்தில் தோன்றுவது பிற் காலத்தில் தோன்றிய மரபு. கிருஷ்ணனின் நாயகியாக இராதையை வழிபடுவது மிகப் பழைய காலத்திலேயே தோன்றியிருந்த போதிலும், ஏறக்குறைய கி. பி. பத்தாம் நூற்றாண்டில் தான் அது ஒரு தனி முறையாக உருவாகியது. இது சம்பந்தமாகத் தொல் பொருள் ஆராய்ச்சி நிபுணரும், சரித்திர ஆசிரியருமான ராகால்தாஸ் பானர்ஜி எழுதியுள்ள குறிப்புக்கள் மிகவும் பொருத்தமாக உள்ளன. ராதா-கிருஷ்ண வழிபாடு காலப்போக்கில் உருவானதைக் கலை

இலக்கியம் ஆகிய கோணங்களிலிருந்து ஆராய்கிறது இக் கட்டுரை. (இடைக்காலச் சிற்பங்களில் கிழக்கிந்திய மரபு''—ஆசிரியர் ஆர். டி. பானர்ஜி எம். ஏ- 96 படங்களுடன்-ஆர்க்கியலாஜிகல் ஸர்வே ஆப் இந்தியா நியூ இம்பீரியல் ஸீரீஸ்—பாகம் XLVII—மானேஜர் ஆப் பப்ளிகேஷன்ஸ், இந்திய அரசு, புது டெல்லி-1933-பக்கம் 127)

"வங்காளத்திலும் பீகாரிலும் கி. பி. 11, 12-ஆம் நூற்றுண்டைச் சேர்ந்த விஷ்ணுவின் சிலைகள் ஆயிரக்கணக்கில் கிடைத்திருந்த போதிலும், இராதையும் கண்ணனும் சேர்ந்துள்ள ஒரே விக்கிரகம் கிழக்கிந்தியக் கலை மரபைச் சேர்ந்தது என்றே கூற வேண்டும். (இந் நூலில் முகப்பில் காணப்படும் சித்திரம் 1933-ம் ஆண்டு வரையில் கண்டுபிடிக்கப்படவில்லை—எஸ். கே. சட்டர்ஜி) இது எங்கிருந்து கிடைத்தது என்பது தெரியவில்லை. பீகாரில் ஏ. எம். பிராட்லி அவர்கள் சேகரிப்பில் கி. பி. 11-ம் நூற்றுண்டின் மாதிரி என்று கூறப்படுகிறது. (பட்டியலின் பிற்சேர்க்கை பக்கம் 96-எண் 3833). ஆகவே கி. பி. 11, 12-ம் நூற்றுண்டுகளில் கிருஷ்ண வழிபாடு ஒரு சிலராலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது. கிழக்கிந்தியாவில் இராதையும் கண்ணனும் சேர்ந்த சிலைகள் மிகச் சிலவே என்பது ஒரு புறமிருக்க; கி. பி. 13-ம் நூற்றுண்டுக்கு முன் வங்காளத்திலும் பீகாரிலும் கிருஷ்ண விக்கிரகமே கண்டுபிடிக்கப் படவில்லை. இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் இராதா கிருஷ்ண வழிபாடு மக்களிடையே பரவியது, சீர்திருந்த மத குருவாகிய சைதன்யர் தோன்றிய பிறகே எனலாம். . 15-ம் நூற்றுண்டின் தொடக்க முதலே வட கிழக்குப் பகுதிகளில் உலோகத்திலோ கல்லிலோ செய்யப்பட்ட விக்கிரகங்கள், லிங்கங்களாகவோ, துர்க்கை, காளி முதலிய தெய்வங்களாகவோ இராதா கிருஷ்ண விக்கிரகங்களாகவோ இருந்திருக்கின்றன. இக்காலத்தில் உலோகத்தாலோ கல்லிலோ செய்யப்பட்ட விஷ்ணு விக்கிரகங்கள் மிகவும் குறைவு. ஆகவே வடகிழக்கிந்தியாவின் வைணவ சமய வரலாற்றில் 12-ம் நூற்றுண்டு முதல் 15-ம் நூற்றுண்டுவரை ஓர் இடைவெளி காணப்படுகிறது. இதை நிரப்ப விக்கிரகங்கள் கிடையா"

XVIII. கீத கோவிந்தப் பாடல்களில் சந்தங்களும், இசையும்.

ஜெயதேவர் தமது கீத கோவிந்தத்தின் சுலோகங்களிலும் பாடல்களிலும் அமைத்துள்ள பல்வேறு விருத்தங்களைப் பற்றி டாக்டர் ஸுநீதிபூஷண் பட்டாசாரியர் எழுதியுள்ள ஒரு சிறந்த விரிவுரை நாம் முன்னர் குறிப்பிட்ட டாக்டர் ஹரே கிருஷ்ண முகர்ஜியின் வங்காளி நூலில் காணப்படுகிறது. (பக்கம் 54) சுலோகங்கள் பண்டைய வடமொழி விருத்தங்களில் அமைக்கப் பட்டிருந்த போதிலும் அவற்றில் அபப்பிரம்ச மொழியின் பாதிப்பு இருப்பதாக ஸுநீதிபூஷண் பட்டாசாரியார் கூறுகிறார்.

பதங்கள் எனப்படும் பாடல்கள் அபப்பிரம்சம் அல்லது அவஹட்டா என்ற மொழி, புதிய இந்தோ-ஆரிய பாஷா இவற்றின் மாத்ரா விருத்தம் என்ற செய்யுளை ஒத்திருக்கின்றன. இவற்றின் மாத்திரை சரணங்கள் முதலிய அம்சங்களைப் பற்றி டாக்டர் ஹரே கிருஷ்ண முகர்ஜியின் நூலில் விளக்கங்கள் இருப்பதால் அவற்றைப் பற்றி இச்சிறு புத்தகத்தில் குறிப்பிடத் தேவையில்லை.

ஜெயதேவரின் பதங்கள் ஆரம்பத்திலிருந்தே அவருடைய தோழர்களும் இசைப் புலவர்களுமான பராசரர் முதலியோரால் பாடப் பெற்று வந்தன என்று அவரே கூறுகிறார். "சேக சுபோதயம்" என்ற நூலிலிருந்து (பக்கம் 8) ஜெயதேவரும் அவருடைய மனைவி பத்மாவதியும் இசையில் வல்லவர்களாக இருந்தனர் என்று அறிகிறோம். ஆரிய மொழிகள் பேசும் இந்தியாவில் 800 அல்லது 1000 ஆண்டுகளுக்கு முன் வழக்கிலிருந்த இசை முறையில் ஜெய தேவரின் பாடல்கள் பாடப்பெற்று வந்திருக்க வேண்டும். இந்த முறையின் முதிர்ச்சி அடைந்த வடிவம் அக்பர் சக்கரவர்த்தியின் காலத்தில் (16ம் நூற்றாண்டு) துருவபதம் அல்லது துருபத் என்ற பெயரில் வடஇந்திய இந்துஸ்தானி இசையில் வழங்கி வந்தது தான்ஸேன் என்ற இசை மேதை இதற்குப் பரிபூர்ண வடிவத்தைப் படைத்தளித்தார். தென்னிந்தியாவின் கர்நாடக இசையில் பதம் அல்லது கீர்த்தனம் என்ற வடிவம் கர்நாடக தேசத்தில் புரந்தர தாஸரால் 17ம் நூற்றாண்டிலும், ஆந்திரரும், தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்தவருமான தியாகராஜரால் 19 ம் நூற்றாண்டிலும் வடிவம் பெற்றுத் தழைத்தோங்கியது. இசை வடிவங்களை ராகங் களாகவும் ராகினிகளாகவும் பிரிப்பதும் தாளங்களை அமைப்பதுமான இந்திய முறை அக்காலத்திலேயே நிலை பெற்றிருந்தது. பழைய

ராகங்கள், தாளங்கள் ஆகியவற்றின் பெயர்கள் ஜெயதேவரின் ஒவ்வொரு பாடலுக்கு மேலே தரப்பட்டுள்ளன. இவை இந்துஸ்தானி சாஸ்திரீய சங்கீதத்தின் ராகங்கள். கீதகோவிந்தத்தைத்தவிர இவை 11ம் நூற்றாண்டுக்குப் பின்னர் எழுதப்பெற்ற வடமொழி இசை நூல்களிலும், சீக்கியரின் குரு கிரந்தத்திலும் (கி. பி. 1605) காணப் படுகின்றன. ஜெயதேவரின் பதங்களுக்குத் தரப்பட்டுள்ள ராகங்களாவன:—

மாளவம், குர்ஜரி, வஸந்தா, ராமகிரி, கர்ணாட, தேசாகம், தேசவராடி, கொண்டகிரி, பைரவி, வராடி; விபாஸா; தாளங்கள்: ரூபகம், நிஸ்ஸாரா, யதி, ஏகதாலி, அஷ்டதாலி. கீத கோவிந்தத்தின் பதங்கள் இருபத்து நான்கேயாதலால் அதில் வரும் ராகங்களும் தாளங்களும் சிலவே. கி. பி 15-ம் நூற்றாண்டு முதல் 16ம் நூற்றாண்டு வரை தொகுக்கப்பட்ட ஏராளமான துதிப்பாடல் களுக்கும், சீக்கியரின் வேதமான ஆதி கிரந்தப் பாடல்களுக்கும் காணப்படும் ராகங்கள் மிகப் பல. வங்க நாட்டில் பதங்களை சாஸ்திரீய ராகங்களில் பாடும் வழக்கம் (14,15 வது நூற்றாண்டில்) படுசண்டிதாஸர் இயற்றிய ஸ்ரீ கிருஷ்ண கீர்த்தனம் வரை பின்பற்றப்பட்டது.

ஜெயதேவரின் பதங்கள் ஆதியில் மூலராகங்களிலேயே பாடப் பட்டிருக்க வேண்டும் என்று நாம் ஊகிக்கலாம். ஆயினும் சைதன்யரின் தோற்றத்திற்குப் பிறகு இம்மரபு காலப்போக்கில் மறையலாயிற்று. கி. பி. 1594ம் ஆண்டு ராஜஷாஹி மாவட்டத் திலுள்ள கேடுரி என்ற ஊரில் நடந்த வைணவ மாநாட்டில் ஆசாரி யர்களும், பக்தர்களும் ஒன்று கூடி தோத்திர இசையை மாற்றி யமைத்தனர். இப்பொழுது மநோஹர் ஷாஹி, காரன் ஹாடி, ராணி ஹாடி அல்லது ரெநேடி முதலிய பல்வேறுபட்ட பாடும் முறைகள் கலந்த ஒரு புதுமரபு உருவாகியிருக்கிறது. கீர்த்தனீயர்கள் என்ற பதப் பாடகர்கள் ஜெயதேவரின் பதங்களை இம்முறை யிலேயே பாடி வருகின்றனர்.

ஜெயதேவரின் பதங்கள் பாரத தேசமெங்கும் பரவியதால் ஆங்காங்குள்ள இசை முறையில் அமைக்கப்பட்டன. வங்கதேசத்தின் தலைசிறந்த வித்வான்கள் சிலர் இப் பதங்களைப் பாடியதை நான் கேட்டிருக்கிறேன். அது போலவே பூரி ஆலயத்தில் தேவ தாசிகள் ஒரியா மரபில் பாடுவதையும், இந்து மதத்தின் கிழக்கெல்லையாகிய மணிப்பூரிலும் (இம்பால்)வங்க வைணவத்தின் தலைநகர் போன்ற பிருந்தாவனத்திலும், சாஸ்திரிய சங்கீதம் வழங்கும் பூனாவிலும், தமிழ் நாட்டில் ஓர் இளம் தமிழ்ப் பெண்மணி கர்நாடக இசையில்

பாடியதைத் தஞ்சாவூரிலும் கேட்டிருக்கிறேன். இப்போது எங்குமே பாடும் முறை மாறிவிட்டது. மணிப்பூரில் மட்டும் புதிய வங்காளி முறை பின்பற்றப்பட்டது.

வங்க நாட்டில் ஜெயதேவரின் பதங்களின் பழைய இசை முறைக்குப் புத்துயிர் அளிப்பதற்குப் பல முயற்சிகள் செய்யப் பட்டன. காலஞ்சென்ற ஸ்ரீமதி அபர்ணாராய் என்ற பெண்மணி "ப்ரஜ மாதுரி சங்கம்" என்ற மன்றத்தை நிறுவி ப்ருந்தாவனத்தின் பழைய கீர்த்தனீயர்களின் உதவி கொண்டு பெரும் சாதனைகளைப் புரிந்தார். சாஸ்திரீய ராகங்களைப் பாடுவதில் புகழ்பெற்ற ரதீந்திர நாத் கோஷ் அவர்கள் பழைய முறையில் ஹரே கிருஷ்ண முகர்ஜி யுடன் சேர்ந்து பதங்களைக் கற்ற அனுபவத்தை முன்னிட்டுச் சிறந்த தொண்டுகள் புரிந்தார். ஆயினும் பிற்காலத்து வங்காளி இசையே இன்னும் தலை தூக்கி நிற்கின்றது.

இவற்றிலிருந்து, இக்கால இந்திய இசையின் வரலாறு, மரபு, இப்போதைய முறை ஆகியவற்றில் ஜெயதேவரின் பாடல்கள் வகிக்கும் முக்கியமான இடத்தை நாம் அறிகிறோம். இந்திய இலக்கியத்தின் படைப்பாளர்களில் ஒருவராக ஜெயதேவர் திகழ்வது போலவே, இந்திய இசையை உருவாக்குவதில் பெரும் பங்கு கொண்ட ஒரு மேதையாகவும் அவர் விளங்குகிறார்.

இந்திய இலக்கியச் சிற்பிகள்

தற்கால, பழம் பெரும் படைப்புகளில், தலைசிறந்த இந்திய இலக்கியச் சிற்பிகளைப் பற்றி உணர இந்த நூல் வரிசை உதவும். இந்த வரிசையில் வெளிவந்துள்ள நூல்கள்.

[எல்லாம் ஆங்கிலத்தில் கிடைக்கும்]

ராஜாராம் மோகன்ராய் —*சௌ. டாகூர்*

கேசவஸூதர் —*பிரபாகர் மாச்வே*

இளங்கோ அடிகள் —*மு. வரதராசன்*

ஈசுவரசந்திர வித்யாசாகர் —*H. பானர்ஜி*

தருதத் —*பத்மினி ஸென்குப்தா*

வேமனு —*வி. ஆர். நார்லா*

வீரேசலிங்கம் —*வி. ஆர். நார்லா*

காலீப் —*எம். முஜீப்*

ஷா லதீப் —*K. B. அத்வானி*

சண்டிதாஸ் —*சுகுமார் ஸென்*

பிரமத சௌதுரி —*அ. முகோபாத்யாய*

பாரதேந்து ஹரிச்சந்திரா —*மதன்கோபால்*

சசால் சர்மாஸ்த் —*K. B. அத்வானி*

ஸ்ரீ அரவிந்தர் —*மனோஜ் தாஸ்*

போதனு *D. வேங்கடாவதானி*

சி. ஆர். ரெட்டி —*D. ஆஞ்சநேயலு*

ஞானதேவ —*பி. ஒய். தேஷ்பாண்டே*

சரோஜினி நாயுடு —*பத்மினி ஸென்குப்தா*

குமரன் ஆசான் —*K. M. ஜார்ஜ்*

வள்ளத்தோள் —*ஹிருதயகுமாரி*

கம்பன் —*எஸ். மகராஜன்*

நம்மாழ்வார் —*அ. சீனிவாசராகவன்*

சந்துமேனன் —*T. C. S. மேனன்*

இராமலிங்கர் —*G. வன்மீகநாதன்*

மாணிக்கவாசகர் —*G. வன்மீகநாதன்*

வேதம் வேங்கடராய சாஸ்திரி —*V. V. சாஸ்திரி [ஜூனியர்]*

வித்யாபதி —*ராம்நாத் ஜா*

சாகித்திய அக்காதெமி

ரவீந்திர பவன், புது தில்லி-1.

சென்னை-18, பம்பாய்-14, கல்கத்தா-29

இந்திய இலக்கியச் சிற்பிகள்

இந்த வரிசையில் இதுவரை தமிழில் வெளிவந்துள்ள நூல்கள்

1. லட்சுமிநாத பெஸ்பருவா—ஹேம்பருவா
   தமிழ்: க. த. திருநாவுக்கரசு
2. கபீர்—பிரபாகர் மாச்வே
   தமிழ்: தி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்
3. கேசவஸுதர்—பிரபாகர் மாச்வே
   தமிழ்: ராம கோபிநாதன்
4. ஈசுவர் சந்திர வித்யாசாகர்—ஹிரண்மய் பானர்ஜி
   தமிழ்: ராம கோபிநாதன்
5. ராஜாராம் மோகன் ராய்—சௌமியேந்திரநாத தாகூர்
   தமிழ்: க. த. திருநாவுக்கரசு
6. பிரேம்சந்த்—பிரகாஷ் சந்திர குப்தா
   தமிழ்: சரஸ்வதி ராமநாத்
7. குமாரன் ஆசான்—கே. எம். ஜார்ஜ்
   தமிழ்: கே. சி. சங்கரநாராயணன்
8. தாருதத்—பத்மினி ஸென்குப்தா
   தமிழ்: அ. சீனிவாசராகவன்
9. வீரேசலிங்கம்—வி. ஆர். நார்லா
   தமிழ்: நா. பார்த்தசாரதி
10. ஸ்ரீ அரவிந்தர்—மனோஜ் தாஸ்
    தமிழ்: பி. கோதண்டராமன்
11. மீராபாய்—உஷா நில்சன்
    தமிழ்: எஸ். கந்தசாமி 'துறைவன்'
12. B. M. ஸ்ரீகண்டய்யா—A. N. மூர்த்திராவ்
    தமிழ்: இரா மதிவாணன்
13. சந்துமேனன்—டி. சி. சங்கரமேனன்
    தமிழ்: கு. இராஜவேலு
14. காஸி நஸ்ருல் இஸ்லாம்—கோபால் ஹால்தார்
    தமிழ்: கே. பி. எஸ். ஹமீத்
15. வள்ளத்தோள்—ஹிருதயகுமாரி
    தமிழ்: மா. இளையபெருமாள்
16. பசமேஸ்வரர்—H. திப்பேருத்க சுவாமி
    தமிழ்: T. K. நாகாம்பாள்
17. பாணபட்டர்—கே. கிருஷ்ணமூர்த்தி
    தமிழ்: பெ. திருஞான சம்பந்தன்
18. பக்கிம் சந்திர சாட்டர்ஜி—சு. ச. ஸென்குப்தா
    தமிழ்: அசோகமித்திரன்
19. மகரிஷி தேவேந்திரநாத தாகூர்—நா. சௌதுரி
    தமிழ்: கா. மீனாட்சிசுந்தரம்
20. தாராசங்கர் பந்தோபாத்யாயர்—மஹாஸ்வேதாதேவி
    தமிழ்: கு. இராஜவேலு
21. நானாலால்—U. M. மணியார்
    தமிழ்: நா. பார்த்தசாரதி
22. ஜீவனானந்ததாஸ்—சி. தாஸ்குப்தா
    தமிழ்: க. த. திருநாவுக்கரசு
23. பாரதியார்—பிரேமா நந்தகுமார்